

# பேனாவினால் பேசுவோம்

## சிறுவர் கட்டுரைகள் பகுதி - 2

## தரம் 6 - 8

கேணிப்பித்தன் ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனாவினால் பேசுவோம்

## சிறுவர் கட்டுரைகள் பகுதி - 2

## தரம் 6 - 8


கலாபூஷணம்

ச. அருளானந்தம் B.A,M.Lit, PhD, SLEAS.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பேனாவினால் பேசுவோம் |
| ஆசிரியர் | : | கேணிப்பித்தன் ச.அருளானந்தம் |
| வகை | : | சிறுவர் கட்டுரைகள் பகுதி - 2 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப்பட அமைப்பு | : | ச. அ. அருள்பாஸ்கரன் M. A. (Fine Arts) |
| முதற்பதிப்பு | : | ~~27-08-2014~~ நவம்பர் 2014 |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி,<br>உவர்மலை - திருகோணமலை.<br>தொலைபேசி இல: 026-2221507. |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை.<br>F.L. 1.14. டயஸ் பிளேஸ்.<br>குணசிங்கபுரம்.<br>கொழும்பு-12.<br>தொ.பே. இல: 011- 2341942 |
| ISBN | : | 978-955-98211-2-0 |
| விலை | : | ரூபாய் ~~150/=~~ 180/= |


**இந்நூல்...**

இந்நூலைப் படித்துப் பயன்பெறும் சிறார்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும். கற்பிக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் சமர்ப்பணம்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நமது தமிழ் மொழி இனிமையானது. சொல்வளம் மிக்கது. ஆனால் நாம் நமது மொழியினைச் சரியாக எழுதமுடியாமல் தவிக்கிறோம். பரீட்சைகளில் கோட்டைவிடுகிறோம். இதற்கான காரணங்கள் யாவை? நமது தாய் மொழிதானே என்று இலக்கணத்தை அல்லது அழகான வழியில் எழுதும் முறையைத் தவறவிடுகிறோம். நமது முன்னோர்கள் நமக்காக விட்டுச் சென்ற தியாகங்களை மறந்து விடுகின்றோம். மொழி மனிதனின் விழியாகும். மொழியை நன்றாக அறிந்தவர் வாழ்வில் வெற்றியடைவார். மொழியைக் கண்டுபிடித்து நமக்குத் தந்தவர்களை நாம் நினைவில் இருத்தவேண்டும். அவர்கள் நமக்கு எழுத்துக்களையும், சொற்களையும் தந்து, அவற்றை ஒழுங்காக வசனமாக எழுதும் முறையினையும் தந்துள்ளார்கள்.

மொழிக்கு இலக்கணத்தையும் வகுத்து இலகுபடுத்தியுள்ளார்கள். நாம் அதனை மறந்து நமது வழியில் செல்வதால் தடுக்கி விழுந்து விடுகிறோம். எழுத்துக்களை நன்றாக எழுதப் பழகவேண்டும். எழுத்துக்களின் உச்சரிப்பு -க்களைப் புரிந்து கொள்ள வேண்டும். எழுத்துக்களை அழகாக எழுதப்பழகவேண்டும். எந்த எழுத்து எந்த இடத்தில் வரவேண்டும் என்பதைப் புரிந்து கொண்டு எழுதவேண்டும். இளமையிலேயே எழுதப்பழகிக் கொள்வது நல்லது. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை தொடரும். இந்த நூலை எழுதுவதற்குக் காரணம் உள்ளது. இன்றும் படித்தவர்கள் எழுத்துப் பிழைகளை விடுகின்றார்கள். தரமான கட்டுரைகளை எழுத முடியாது திண்டாடுகிறார்கள்.

'பேனாவினால் பேசுவோம்-1' என்ற கட்டுரை நூலினை முதலில் எழுதி வெளியிட்டேன். அதற்கு நல்ல வரவேற்பிருந்தது. அதன் தொடர்ச்சியாக "பேனாவினால் பேசுவோம்-2" என்ற இந்த நூலினைத் தருகிறேன். இந்த நூலில் இலகுவான நடையில் தொடங்கியுள்ளேன். அத்துடன் சிறிய வசனங்களாகத் தொடங்கியுள்ளேன். பின்னர் பந்திகள் அமைந்த கட்டுரைகளாகத் தந்துள்ளேன்.

நான் பதினைந்து ஆண்டுகள் க.பொ.த.(சா / த) பரீட்சையின் பிரதம பரீட்சகராகக் கடமையாற்றியுள்ளேன். அதனால் மாணவர்களது தரம் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீட்டை நன்கு அறிந்து வைத்துள்ளேன். அதனாலேயே இந்நூலை உங்களுக்குத் தருகிறேன். இந்நூலில் உள்ள கட்டுரைகளைப் படியுங்கள். பின்னர் இவற்றைவிடவும் தரமான கட்டுரைகளை எழுதுங்கள். உங்களை வெல்ல உங்களால்தான் முடியும்.

இந்த நூலை ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து அவர்களை வாங்கிப் படிக்கும்படி தூண்டவேண்டும். இவ்வகை நூலின் அவசியத்தைப் பல ஆசிரியர்கள் உணர்த்தியுள்ளனர். அதேவேளை என்னை எழுதும்படி கேட்டுக் கொண்டார்கள்.

லங்கா புத்தகசாலை முகாமையாளர் திரு.K. சதீஸ் அவர்கள் இவ்வகைக் கட்டுரை நூல்களை எழுதும்படி கேட்டுக் கொண்டார்கள். அவரது வேண்டுகோளுக்கு இணங்க இதனை எழுதியுள்ளேன். படித்துப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

படிப்பது மட்டும் உங்களது வேலைகளல்ல. படித்ததன்பின் சிந்திக்க வேண்டும். சிந்தித்த பின்னர் பலவாறான கட்டுரைகளை எழுதவும் முயற்சிக்க வேண்டும். 'எழுது ஏனென்றால் எழுதும்போது நீ சிந்திக்கின்றாய்' என்று ஆன்றோர் கூறியுள்ளனர். அதனைக் கடைப்பிடித்து முன்னேறுங்கள்.

நன்றியுடன்
கேணிப்பித்தன். ச.அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலின் உள்ளே...

1. கட்டுரை எழுதும் முறை.
2. என் பெயர் இராமன்
3. எங்கள் வீடு ஒரு பல்கலைக்கழகம்
4. நான் வாழும் ஊர்
5. இலங்கை எனது நாடு
6. நான் வளர்க்கும் நாய்க்குட்டி
7. தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு
8. மைனா எனது ஆசைப்பறவை
9. குயிலக்காவின் பாட்டு
10. உவகையூட்டும் பூந்தோட்டம்
11. வாழவைக்கும் வீட்டுத்தோட்டம்
12. சுத்தமுள்ள சூழலை உருவாக்குவோம்
13. விண்வெளியை நோக்கிய பயணம்
14. வலண்டினா விண்வெளியில் வலம்வந்த முதற் பெண்
15. கிரகணம் என்பதென்ன?
16. அதிசயமான சந்திர கிரகணம்
17. சந்திரக் கடவுள்
18 சந்திரன் புரியாத புதிர்
19. நான் விரும்பும் பெரியார்
20. புதுமைப்பெண் கல்பனா சாவ்லா
21. பெண்ணிற் பெருந்தகை -அன்னை திரேசா
22. வாசிப்பு மனிதனை உயர்த்தும்
23. சாரணியத்தின் இலக்கு
24. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
25 சாதனையாளர் ஜேம்ஸ் வொட்சனின் வைரஸ் ஆய்வு
26. முதியோரைப் பேணுவோம்
27. நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்
28. நாட்டார் பாடல்கள்
29. வெகுசனத்தொடர்பு சாதனங்கள்
30. வயலோரக் கிராமத்தின் எழில்
31 தொலைக் காட்சியும் விளைவுகளும்
32. எனது தாய் மொழி தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கட்டுரை எழுதும் முறை

கட்டுரை எழுதுவது ஒரு கலை என்று கூறுவார்கள். அதற்கெனச் சில விதிமுறைகள் உண்டு. அவற்றைப் புரிந்து கொண்டு எழுதுதல் வேண்டும். எழுத எழுதத்தான் நல்லநல்ல கட்டுரைகளை எழுதலாம். இதற்கு நல்ல பயிற்சி வேண்டும். கட்டுரைத்தல் என்பது உறுதியாகச் சொல்லுதல், தெளிவாகக் கூறுதல் என்று பொருள்படும். எண்ணங்களை ஒரு கட்டுக் கோப்புடன் கூறுதல் அல்லது முறைப்பட ஒழுங்குபடுத்தி அமைத்தல் கட்டுரையாகும். எழுதுபவர் தமது கருத்துக்களையும் எண்ணங்களையும் ஒழுங்கு படுத்த வேண்டும். அப்படி ஒழுங்குபடுத்தி எழுதுவதுதான் கட்டுரையாகும். எழுதுபவர் தமது எண்ணங்கள் அனுபவங்கள், செய்திகள் கற்பனைகள், அறிவியல் அரசியல் சார்ந்த விடயங்களை உள்ளடக்கியதாகக் கட்டுரைகள் எழுதுவார்கள்.



மாணவர்கள் எழுதும் கட்டுரைகளில் பின்வரும் அம்சங்கள் முக்கியம் இடம்பெறும்.

ஒருமைப்பாடு

1. ஒழுங்கு
2. சுருங்கக் கூறி விளங்க வைத்தல்
4. தனித்தன்மை

மாணவர்கள் எழுதும் கட்டுரைகள் மிக நீண்டதாக அமைய வேண்டியதில்லை. அவர்கள் எழுதும் கட்டுரைகள் எழுதுவதற்கான பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுடைய எண்ணங்களை ஒழுங்காகவும் கட்டுக் கோப்புடனும் ஒழுங்காக வெளிப்படுத்த முயற்சிப்பதே அவர்கள் கட்டுரை எழுதுவதற்கான நோக்கமாக கொள்ளப்படும்.

பாடசாலையில் மாணவர்கள் எழுதும் கட்டுரைகள் பல் வகைப்படும்.
கட்டுரை வகைகள்

1. கற்பனைக் கட்டுரைகள்
2. வரலாற்றுக் கட்டுரைகள்
3. வருணனைக் கட்டுரைகள்
4. சிந்தனைக் கட்டுரைகள்
5. விளக்கக் கட்டுரைகள்

பல நூல்களைப் படிப்பதால் ஏற்படும் அறிவு, ஆழம் அத்துடன் பிற அறிஞர்களுடன் உரையாடுவதால் பெற்றுக் கொள்ளும் அறிவும், அவர்களது மனதில் பதிந்து உரிய சந்தர்ப்பங்களில் அவற்றை நினைவு கூர்ந்து கட்டுரைகளில் பயன்படுத்த வேண்டும்.

கட்டுரை எழுதுவோர் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் :-

1. கட்டுரைக்கான தரவுகளை ஆசிரியர்களிடம் இருந்து பெறுவதன் மூலமும், பல நூல்களைப் படிப்பதன் மூலமும் கல்வி அறிவாளிகளிடம் கேட்பதன் மூலமும் திரட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

2. போதுமான தகவல்களை திரட்டியபின்னர் அவற்றை நன்கு அவதானித்துக் கட்டுரைக்குத் தேவையானவை எவை என்பதை தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு தேர்ச்தெடுப்பவர் எந்த ஒழுங்கில் அவற்றைக் கட்டுரையில் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

3. முன்னுரையை நன்கு அமைத்துக் கொண்டு பொருளுரையால் கூறப்போகும் கருத்துக்களில் எதனை முதலில் தொடங்குவது என்றும் எதனை முடிப்பது என்றும் வரிசைப் படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

4. கட்டுரையில் எழுத்துப்பிழை, சந்திப்பிழை, இலக்கணப்பிழை இல்லாமல் எழுதுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மொழிநடை இலகுவாகவும் எல்லோர்க்கும் விளங்கும் வகையிலும் எழுதுதல் வேண்டும்.

6. ஆசிரியர்களது வழிகாட்டல்களைப் பெறுவதை மனதில் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் நன்றாக வாசிக்க வேண்டும். வாசித்ததை நன்றாக யோசிக்க வேண்டும். யோசித்ததை எழுதவேண்டும். அப்படி எழுதும்போது கட்டுரையின் தலைப்புக்கு ஏற்ப கற்பனையையும் சேர்த்து எழுதவேண்டும். வாசிப்பதால் நமது அறிவு விசாலமாகிறது. எழுதுவதால் நல்ல சிந்தனை பிறக்கிறது. "எழுது ஏனென்றால் எழுதும்போது நீ சிந்திக்கின்றாய்" என்று சான்றோர்கள் கூறுவர். எழுதும்போது நமது சிந்தனையைத் தெளிவு படுத்திக் கொண்டு எழுதுதல் வேண்டும்.

இந்நூலில் உள்ள கட்டுரைகளை நீங்கள் படிக்கும்போது நன்கு புரிந்து கொள்வீர்கள். சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்று நமது சான்றோர் கூறியுள்ளனர். முயற்சியுடன் முன்னேறுங்கள். மொழியில் ஆற்றல் உள்ளவர்கள் உயர்வடைவார்கள்.

## 2. என் பெயர் இராமன்



நான் யார் தெரியுமா? என்னைப் பற்றிச் சொல்கிறேன். எனது பெயர் இராமன். என்னைப் பார்த்தவர்கள் நீ இராமன்தான் என்பார்கள். எனக்குச் சந்தோசமாக இருக்கும். யார் இந்த இராமன்? எனக்கு நானே கேட்டுக் கொள்வேன். எனது அப்பா இராமாயணத்தில் வரும் இராமனை மதிப்பவர். இராமன் அவதார புருசனாம். அதனால் எனக்கு அவரது பெயரை வைத்தாராம்.

எனது கண்கள் தாமரை போன்று அழகானதாம். அதனால் அப்பா அந்தப் பெயரை வைத்தாராம். அம்மாதான் சொன்னார். ஆனால் எனது நண்பர்கள் என்னைக் கறுப்பன் என்றே அழைப்பார்கள். எனது உடல் இராமனின் நிறம் போன்றதாம்.. கண்கள் சற்றுச் சிவப்பு. குயிலைப் பார்திருக்கிறீர்களா? குயில் கறுப்பு. ஆனால் அதன் கண்கள் சிவப்பாக இருக்கும். ஏறத்தாழக் குயிலைப்போலதான் நானும். எனக்கும் இராமனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறத்தில் ஒற்றுமை. எனக்கு இப்போது பன்னிரெண்டு வயதாகிறது. ஏழாம் வகுப்பில் படிக்கிறேன். வகுப்பில் நான் ஏழாம்பிள்ளை. நான்தான் வகுப்பின் தலைவன் அதாவது "மொனிற்றர்".

அதிகாலையில் எழுந்து விடுவேன். குளிக்கும் போதுதான் எனக்குக் குதூகலம். அண்ணா தண்ணீரை அள்ளி விசுறுவான். தண்ணீர் பட்டதும் சில்லென்று இருக்கும். தங்கைக்கு நான் தண்ணீரை அள்ளி விசுறுவேன். தங்கை "அம்மா" என்று வீரிடுவாள். அப்பாவின் அதட்டல் குரல் கிணற்றடியை நோக்கிவரும். பெட்டிப் பாம்பாகி அடங்கி விடுவோம். ஒருவாறு தடுமாறிக் குளித்து முடிப்போம்.

உடைகளை மாற்றிவிட்டுப் பூக்களை ஆய்வேன். அவற்றைத் தங்கையிடம் கொடுப்பேன். அவள் அழகான மாலைகளைத் தொடுப்பாள். அவற்றை கடவுளுக்குச் சூட்டுவோம். கடவுளை வணங்கி வாழ்த்துப் பாடுவோம். அடுத்து அப்பா, அம்மா, தாத்தா, பாட்டியை வணங்குவோம். அம்மா சூடாகத் தேநீர் தருவார். குடித்ததும் பாடங்களைப் படிப்போம். எனது அம்மா காலையுணவைத் தயாரித்ததும் அழைப்பார். பிட்டு எங்களுக்கு விருப்பமான உணவு. மூங்கில் குழலில் தேங்காய்ப் பூ சேர்த்து அவிக்கும் பிட்டு அருமையாக இருக்கும். காலையுணவை உண்டதும் பாடசாலைக்குப் பயணமாவோம். அப்பா எங்களுக்கு மிதிவண்டி வாங்கித்தந்துள்ளார். புத்தகப்பையை முதுகில் கொழுவினதும் சைக்கிளில் ஏறிவிடுவோம். அண்ணாவைத் தொடர்ந்து நான் செல்வேன். எங்கள் பாடசாலை மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.

கால அட்டவணைப்படி பாடங்கள் நடைபெறும். பாடங்களை ஒழுங்காகப் படிப்பேன். வீட்டு வேலைகளை பாடசாலை நேரத்திலேயே செய்து விடுவேன். மாலை முழுதும் விளையாட்டுத்தான். நண்பர்களோடு விளையாட்டுத் திடலில் விளையாடுவேன். கால் பந்தாட்டம் எனக்கு விருப்பமான விளையாட்டு. உடலுக்கும் உள்ளத்துக்கும் உற்சாகந்தரும்.

எனது ஆசிரியர்கள் மிகவும் அன்பானவர்கள். அதிபர் அனைவரோடும் அன்பாகப் பழகுவார். அவர் வகுப்பறைகளை நோக்கி வரும்போது ஒரு அமைதி குடிகொள்ளும். அவர் முகத்தில் ஒரு புன்னகை நெளிந்தோடும். ஆசிரியர்களோடு அன்பாகப் பழகுவார். எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறார்.

விளையாட்டு முடிந்ததும் எனது தோட்டத்தில் வேலைசெய்வேன். வேலையை விளையாடிச் செய்வேன். விளையாட்டு ஒரு கற்றல் முறையென எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் கூறுவார்கள். அது உண்மைதான். கற்றதை அனுபவமாக்கும் போது மனதில் பதிந்து விடும். பாடசாலையில் படித்ததை தோட்டத்தில் பிரயோகிப்பேன். பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவேன். பூஞ்செடிகளுக்குள் மரக்கறிப் பயிர்களையும் நட்டிருக்கிறேன். கத்தரி, வெண்டி, மிளகாய், தக்காளி முதலியனவற்றைப் பயிரிட்டுள்ளேன். மல்லிகைப் பந்தல் பொதுவானது. அது எங்கள் வீட்டின் முற்றத்தில் உள்ளது. அதன் வாசம் வீட்டு வளவெல்லாம் பரவும். ரோஜா, சாமந்தி, கனகாம்பரம் நிறையவே உண்டு.

எனது தோட்டத்தில் இயற்கைப்பசளை தயாரிப்பதற்கான இடமுண்டு. அது ஒரு குழி. தோட்டத்தைச் சுத்தம் செய்து கழிவுகளைக் அக்குழியில் போடுவேன். அதன்மேல் மாட்டுச் சாணத்தைக் கலக்கி ஊற்றிக் கிளறி விடுவேன். இவ்வாறு எனது தோட்டத்துக்குரிய உரத்தைத் தயாரிப்பேன். பாடசாலையில் கற்றுத் தந்ததை வீட்டில் செய்து பார்க்கிறேன். அப்பா எனக்கு இதற்கான வழிகாட்டியாக இருக்கிறார்.

எனது பொழுது போக்கு நல்ல நூல்களைப் படிப்பதுதான். வாசிப்பதால் அறிவை வளர்க்கலாம் என்று ஆசிரியர்கள் கூறுவார்கள். நான் பெரியோர்களது சொற்படி வாழ்ந்து காட்டுவேன். பெரியவன் ஆனதும் நாட்டுக்காக உழைப்பேன். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதற்கேற்ப ஒற்றுமையுடன் வாழப்பழகுவேன். இதனைப் பின்பற்றி வாழ்கிறேன். அப்படியானால் நான் இராமன்தானே?

## 3. எங்கள் வீடு ஒரு பல்கலைக்கழகம்

நீங்கள் பல்கலைக் கழகம் சென்று பார்த்துள்ளீர்களா? நமது பாடசாலையைவிடப் பன்மடங்கு பெரியது. படிக்கும் மாணவர்களும் பெரியவர்கள்தான். பல்கலைக்கழகத்தின் தலைவரைத் துணைவேந்தர் என அழைப்பார்கள். பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்கள் கற்பிப்பார்கள். நாம் வீட்டிலிருந்து பாடசாலைகளுக்குச் செல்கிறோம். பாடசாலைக் கல்வியை முடித்ததும் பல்கலைக் கழகங்களில் கற்று பட்டதாரிகளாகிறோம். இவற்றுக்கு அத்திவாரம் இடுவது வீடுதான். வீடு மிகமுக்கியமானது. எங்கள் வீடும் ஒரு பல்கலைக் கழகம் போன்றதுதான். தாத்தாதான் அதன் வேந்தர். பாட்டி வீட்டின் துணைவேந்தர். அப்பாவும், அம்மாவும் அதன் பேராசிரியர்கள். அண்ணா அதன் விரிவுரையாளர். நானும், தம்பியும் தங்கையும் மாணவர்கள். எங்கள் வீடு இளைஞர் பாராளுமன்றமாகவும் விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் வீடு கல்லும் சீமேந்தும் கொண்டு கட்டப்பட்டதுதான். ஆனால் அதிலே கலைவடிவம் புதைந்துள்ளது. எங்கள் அப்பா உழைப்பின் உருவம். அம்மாவினது முயற்சியின் பயன். தாத்தா, பாட்டி ஆசிர்வாதங்களின் இருப்பிடம். அவர்கள் சிந்திய வியர்வைத்துளிகள்தான் எங்கள் வீடு. எங்கள் வீடு எம்மைப் பாதுகாக்கும் கோயிலாகும்.

"வீட்டுக்கு வீடுதான் வாசற்படி" என்று தாத்தா கூறுவார். "வீடுதான் மோட்சத்துக்கு வாசல் என்பது அதன் பொருள்" என்று தாத்தா கூறுவார். வீடுதான் இல்லறத்தின் களஞ்சியமாம்.

எங்கள் வீட்டின் அமைப்பு அழகானது. விருந்தினர்களை வரவேற்க மண்டபம் உண்டு. மூன்று படுக்கை அறைகளைக் கொண்டுள்ளது. சமைப்பதற்கு அடுக்களையைக் கொண்டுள்ளது. சிறிய களஞ்சிய அறையுண்டு. அதற்குள் வேண்டிய பொருட்களை வைப்போம். உணவுண்ண அழகான அறையுண்டு. குளியலறையோடு கழிவறையும் உண்டு. விருந்தினர் தங்குவதற்காக ஒரு தனியறையும் உள்ளது. வீட்டைச் சுற்றிப்பூந்தோட்டம் வைத்துள்ளோம். வீட்டின் வாசல் கிழக்குப் பக்கம் உள்ளது. அதிகாலையிலேயே சூரிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலை வடித்து குளிர்தடவி நிழலைக் கொடுக்கும். மழைத்துளிகளைக் கூரையில் ஏந்தி சிற்றாறாக பத்திகளால் ஓடவிடும். மழைச்சாரலைத் தடுத்து நிறுத்தும். குளிரைப் புறந்தள்ளி சுகத்தைத் தரும். தான் நனைந்து எங்களைக் காப்பாற்றும். பலமாக வீசும் காற்றைத் தடுத்து எம்மைக் காக்கும். பின் மெதுவாக யன்னலூடாக உள்விடும். எங்களைக் காப்பாற்ற விழித்திருக்கும். எங்களது உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும். நாங்கள் தினமும் வீட்டைச் சுற்றிச் சுத்தப்படுத்துவோம். அம்மா வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பார். வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் சாம்பிராணிப் புகை கமகமக்கும். காலையில் வீட்டின் முற்றத்தில் அம்மாவும் தங்கையும் கோலமிடுவார்கள். தைத்திருநாளில் வீட்டின் முன்புறம் மேடையமைப்போம். கோலமிட்டுப் பொங்குவோம். கதவுநிலைகளில் மாவிலைத் தோரணம் கட்டுவோம். வருடத்துக்கு ஒருமுறை வெள்ளையடிப்போம். வீடு பளிச்சென்று இருக்கும்.

வீட்டின் முற்றத்தில் நிலாச் சோறு உண்போம். ஒரு மாதத்தில் ஒருமுறையேனும் நிலாச்சோறு உண்போம். சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் எங்கள் வீடு கலகலக்கும். நண்பர்கள் கூடி விளையாடி மகிழ்வோம். உறவினர்கள் வந்து விருந்துண்டு போவது மகிழ்ச்சியைத் தரும். வீட்டுச் சூழல்தான் நாட்டுச்சூழலுக்கு எடுத்துக் காட்டாகும். வீடு சிறார்களை நற்பிரசைகளாக்க அத்திவாரமிடும் கோயில்களாகும். வீடு பல்கலைக் கழகமானால் நாடும் நடமாடும் பல்கலைக் கழகமன்றோ? வீட்டைப் பேணி நாட்டையும் பேணுவோம்.

## 4. நான் வாழும் ஊர்

நாட்டில் மனிதர்கள் வாழ்வார்கள். காட்டில் விலங்குகள் வாழும். நாடு என்பது பல ஊர்களையும், நகரங்களையும் கொண்டிருக்கும். நதிக்கரைகளில்தான் மக்கள் வாழ்ந்து நாகரிகத்தைப் பரப்பினார்கள். யூப்பிரட்டிஸ், ரைகிறிஸ் நதிகள் பாய்ந்த பள்ளத்தாக்கில் சுமேரியர் வாழ்ந்தார்கள். ஊர் என்ற சொல் சுமேரியர் காலத்தே வழங்கியது. ஊர் என்ற இடத்தில் சந்திரத் தேவதைக்குக் கோயில் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுவர். ஊர் என்பது மக்கள் வாழும் இடத்தைக் குறிக்கும்.

நமது நாட்டில் நீ எந்த ஊர்? என்று கேட்பார்கள். உடனே தனது ஊரின் பெயரைச் சொல்வார். பின்னர் அந்த ஊரின் அமைவிடம் கேட்பார்கள். எனது ஊர் தம்பலகாமம். இயற்கை வளம் சூழ்ந்தது. கந்தளாய்க் குளத்தின் நீரினால் செழிப்புற்றுக் கிடக்கிறது. ஆதிகோணநாயகர் கோயில் குடி கொண்ட திருத்தலம். மருத நிலம் மயங்கிக் கிடக்கும் காட்சியை கம்பர் கம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணத்தில் தருகிறார்.

"தண்டலை மயில்களாட தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவினேங்க குவளை கண்விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கு மாதோ"

என்பது அப்பாடல். இப்பாடல் தம்பலகாமத்துக்கு மிகப் பொருந்தும்.

கிழக்கே கொட்டியாரக் குடாக் கடல் விரிந்து கிடக்கிறது. கொட்டியாரக்குடாக் கடல்தான் திருகோணமலைத் துறைமுகத்துக்குப் புகுமுகம். போர்த்துக்கேயர் கொட்டியாரக்குடாக் கடல் ஊடாகத்தான் திருகோணமலைக்குள் புகுந்தனர். தம்பலகாமம் வயலும் வயல்சூழ்ந்த நிலமும் பரந்து கிடக்கிறது.

இரண்டு போக நெற்செய்கை நடைபெறுகிறது. நாட்டில் நிலவிய குழப்பநிலை காரணமாக பலர் இடம் பெயர்ந்து நகர்ப்புறங்களில் வாழ்ந்தாலும் தம்பலகாமம் தனது பொலிவை இழக்கவில்லை. இன்றும் குளக்கோட்டன் நியதிப்படியே பூசைகள் நடைபெறுகின்றன. ஆதிகோணநாயகர் கோயில் திருவிழா பதினெட்டு நாட்கள் நடைபெறும். பதினெட்டு நாட்களும் தம்பலகாமம் மக்களால் நிரம்பி வழியும்.

விதைப்புக் காலங்களில் தண்ணீரும் சேறுமாக வயல்நிலங்கள் தெரியும். விதைப்பு முடிந்ததும் முளைவிடும் காலத்தில் வயல் நிலங்களில் இருந்து பயிர் வானை எட்டிப் பார்க்கும். பயிர் காற்றில் ஆடி விளையாட்டுக் காட்டும். கடலில் அலையடிப்பதுபோல் வேளாண்மை ஓலைகள் சரிந்து எழும். குடலைப் பருவத்தில் ஒரு வாசம் வீசும். நெற்கதிர் முற்ற முற்ற நெற்கதிர்க்குலை நிலம் நோக்கும். அதனைக் கற்றவர்களுக்கு ஒப்பிடுவார்கள். நெல் முற்றியதும் வேளாண்மையின் ஓலைகளும் மஞ்சள் நிறத்துக்கு மாறும். தங்கவயல் விரிந்து கிடக்கும்

அறுவடை தொடங்கியதும் சந்தோசம்தான். உப்பட்டி கட்டி, அவற்றைப் பெரிய கட்டுக்களாகக் கட்டுவார்கள். கட்டுக்களை களத்துக்குக் கொண்டுபோய் சூடு வைப்பார்கள். நல்ல நாள் பார்த்து சூடடிப்பார்கள். சூட்டைப் பிரித்து எருமை மாடுகளைப் பிணைத்து மிதிக்கவிடுவார்கள். சூடடித்தல் இரவு நேரங்களில்தான் நடைபெறும். நாட்டார் பாடல்கள் காற்றில் பரவிவரும். சூடடித்தலுக்கென்றே தனிப்பாடல்கள் உண்டு. நல்ல மெட்டுக்களில் பாடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்துமேட்டில் சாதாரண சொற்களைப் பயன்படுத்த மாட்டார்கள். எருமைகளை வாரிக்காலன் என்பார்கள். வைக்கோலை மிதிஞ்சான் என்று சொல்வார்கள். நெல்லைப் பொலி என்பார்கள். சுளகினைப் பெருவாயன் என்பார்கள். மாலையில் பிரித்த சூடு காலையில் முடிவுக்கு வரும். காலையில் காற்று வீசத் தொடங்க பொலியைத் தூற்றுவார்கள். காற்று வீசும்போது பதர் விலகி ஒதுங்கும். நல்லனவற்றைச் சாக்கில் மூடைகளாகக் கட்டி வீடுகளுக்கு மாட்டு வண்டிகளில் எற்றிச் செல்வார்கள். தம்பலகாமம் திருகோணமலையின் நெற்களஞ்சியம் என்பர்.

பழங்காலத்தில் ஆட்சிமுறைக்காக திருகோணமலை மாவட்டத்தை பற்றுக்களாகப் பிரித்து ஆட்சிசெய்தனர். அவை தம்பலகாமப்பற்று, கொட்டியாரப்பற்று. திருகோணமலைப்பற்று, கட்டுக்குளப் பற்று என்பதாகும். எனது ஊர் தம்பலகாமப் பற்றுக்குள் அடங்கியுள்ளது. இன்று அந்த முறை மாற்றம் பெற்றுவிட்டது. இப்போது பிரதேச செயலாளர் பிரிவு முறை நிலவுகிறது. தம்பலகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரதேச செயலாளர் தலைமைதாங்கிச் சிறப்பாக நடத்துகிறார். தம்பலகாமத்தில் பிறந்த தங்கம்மா திருகோணமலையில் உள்ள ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியினை நிறுவினார். பிரபல எழுத்தாளரும், அறிஞருமான க.வேலாயுதம் தம்பலகாமத்தில் பிறந்தவர். தம்பை நகர் தம்பலகாமத்தின் தலைநகராகும்.

## 5. இலங்கை எனது நாடு

பட்டினப்பாலை என்பது சங்ககால நூலாகும். அந் நூலில் "ஈழத்துணவும் காளகத்தாக்கமும்" என்ற வரி வருகிறது. ஈழமென்று அழைக்கப்படும் இலங்கையில் இருந்து உணவுப்பொருள் அனுப்பப்பட்ட செய்தியுண்டு. பத்தினி வழிபாடு தமிழகத்தில் நடைபெற்றபோது அப்போதிருந்த மன்னன் பங்கு கொண்டுள்ளதை சங்க நூல்கள் கூறுகின்றன. "கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்" என்று சிலப்பதிகார வரி கூறுகிறது.

பலகோடி ஆண்டுகளுக்கு முன் கடற்கோள்கள் நிகழ்ந்துள்ளன. ப.்.றுளி ஆறு இலங்கைக்கும் இந்தியத் துணைகண்டத்துக்கும் இடையே ஓடியது. கி.மு.300 வருடங்களுக்கு முன் இலங்கையையும் இந்தியாவையும் சிறியதொரு ஆறு பிரித்துள்ளது என கிறீஸைச் சேர்ந்த "மெகஸ்தீனஸ்" என்பவர் குறிப்பிட்டிருந்தார்.

ப.்.றுளி ஆறும் அதனையுள்ளிட்ட நாற்பத்தொன்பது நாடுகளும் கடற்கோளினால் அள்ளுண்டு போயின. இச்செய்தி இளங்கோ அடிகளின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரத்தினால் தெரியவருகிறது.
ஆதி காலத்தில் பரந்த பிரதேசமாக இருந்த குமரிக்கண்டம் கடலுள் மூழ்கிக் கிடக்கிறது. அதன் எஞ்சிய பகுதியே இன்றுள்ள இலங்கை என ஆய்வாளர் கருதுவர். இலங்கை என்பது எனது நாடு. கடல் சூழ்ந்த தீவாக அமைந்துள்ளது. இந்து சமுத்திரத்தின் திலகம் எனப் போற்றுவார்கள். ஈழம் என வரலாறு குறிப்பிடுகிறது.

மத்தியில் உயர்ந்த மலைநாடு உண்டு. சுற்றிவரக் கடற்கரையைச் சார்ந்து சரிந்து செல்லும் அமைப்பைக் கொண்ட சமவெளிகள் உண்டு. வற்றாத ஜீவநதிகள் பாய்ந்து வளமூட்டுகின்றன. விவசாயம் முக்கிய தொழிலாக இருந்தது. மகாவலியும், களனியும், தெதுறுஓயாவும் முக்கிய நதிகளாகும். விவசாயம் எனது நாட்டின் வாழ்வாதாரமாகும். நெல் முக்கிய விளைபொருளாகும். தானியப்பயிர்களும் செய்கை பண்ணப்படுகின்றன. நெல்லரிசிதான் முக்கிய உணவாகும். தென்னைச் செய்கை முக்கிய இடம் வகிக்கிறது. முக்கிய ஏற்றுமதிப் பொருளாகவும் உள்ளது. தேயிலை, கோப்பி, கொக்கோ போன்ற பயிர்களும் விளைகின்றன. இவற்றைப் பணப்பயிர்கள் என அழைப்பார்கள்.

ஆங்கிலேயரின் வருகையின் பின் கோப்பித் தோட்டங்கள் உருவெடுத்தன. அதன் பின் மலை நாட்டில் தேயிலைத் தோட்டங்கள் உருவாகின. இவை அந்நிய செலாவணியை எனது நாட்டுக்குத் தருகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலத்தில் ஈழத்தில் புலவர்கள் இருந்தார்கள். ஈழத்துப் பூதந்தேவனார் அவர்களுள் ஒருவர். அவரது பாடல்கள் சங்ககால நூல்களில் உண்டு. இலங்கையில் பாடல் பெற்ற தலங்கள் உள்ளன. போதிமாதவன் திருப்பாதம் பெற்ற பூமியிது. இயக்கரும் நாகரும் வாழ்ந்துள்ளனர். விஜயன் வடஇந்தியாவில் இருந்து இலங்கையில் குடியேறினான். இதனை மகாவம்சம் கூறுகிறது. போத்துக்கேயரும் ஆண்டனர். ஒல்லாந்தரின்பின் ஆங்கிலேயர் ஆண்டனர். இப்போது ஜனநாயக ஆட்சிமுறை உண்டு.

எனது நாடு கண்டமேடையில் அமைந்துள்ளது. கரையில் இருந்து படிப்படியாக ஆழம் கூடிச் செல்கிறது. கண்ட மேடை சிறந்த மீன்பிடி வலயங்களாகும். எனது நாடு இயற்கை வளம் மிக்கது. நீர் வளமும் நிலவளமும் கொண்டது. மத்தியில் உயர்ந்த மலைநாடு உள்ளது. இங்குதான் சிவனொளிபாதமலை உள்ளது. உயர்நிலத்தில் இருந்து வற்றாத ஜீவநதிகள் பாய்கின்றன.

சிலாவத்துறையும், தம்பலகாமக்குடாவும் முத்து விளையும் இடங்களாகும். உப்பளங்கள் யானையிறவிலும், அம்பாந்தோட்டை, நிலாவெளியிலும் உள்ளன. இல்மனைற் புல்மோட்டையில் உள்ளது. பழங்காலத்தில் யானைத்தந்தங்களும், மயிற்தோகையும் ஏற்றுமதியாகின.

எனது நாட்டில் மூவின மக்கள் வாழ்கிறார்கள். சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். தமிழர். முஸ்லிம்கள், பறங்கியரும் வாழ்கிறார்கள். சிங்களம் அரசகரும மொழியாகும் தமிழுக்கும் அந்தஸ்து உண்டு. ஆங்கிலம் இணைப்பு மொழியாகும். பௌத்தமதத்தவர்கள் வாழ்கிறார்கள். இந்து, இஸ்லாம். கிறிஸ்தவ சமய மக்களும் வாழுகிறார்கள். எனது நாட்டின் தலைநகர் கொழும்பு.

சுமார் ஒன்றரைக் கோடி மக்கள் வாழ்கிறார்கள். எனது நாட்டில் பல்கலைக்கழகங்கள் உள்ளன. எனது நாட்டில் அரசியல் உறுதியானதாக இல்லை. மும்மொழித் திட்டம் எனது நாட்டுக்கு உகந்தது. இதனை ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்கிறார்கள் இல்லை.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. மூலப்பொருளை ஏற்றுமதி செய்து முடிவுப் பொருட்களை இறக்குமதி செய்கிறோம். இதனால் அந்நியசெலாவணி குறைவடைகிறது. வேலையில்லாப் பிரச்சினை உருவாகிறது. எனது நாட்டில் உள்ள வளங்கள் சரியாகப் பங்கிடப்படுவதில்லை. அதனால் வறுமை நீடிக்கிறது. சரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் வளங்களைப் பயன்படுத்தினால் எனது நாடு சகல வழிகளிலும் முன்னேறும். சகல வளங்களும் உள்ள எனது நாட்டில் மனவளம் இல்லை. ஒரு நாட்டில் வாழ்க்கைக்கு உதவும் கல்விமுறை இருக்கவேண்டும். அப்படி அமையும் நாட்டைத்தான் சுதந்திரம் பெற்ற நாடாகக் கொள்ளலாம். தொழில் நுட்பம் இப்போதுதான் தலைதூக்குகிறது. நாங்கள் இலங்கையர் என்ற நிலை வந்தால் எமது நாடு சுதந்திரம் பெற்ற நாடாக விளங்கும்.

## 6. நான் வளர்க்கும் நாய்க்குட்டி



நாய்க்குட்டி என்றால் எனக்குக் கொள்ளை ஆசை. எனது ஆசை நிறைவேறாது போய்விடுமோ என்றிருந்தேன். அன்று எனது தந்தை சிரித்தமுகத்தோடு வந்தார். நான் எதிர்பார்க்கவே இல்லை. சிறிய பெட்டியை என்முன்னே வைத்தார். அதன் மூடியைத் திறந்தார். என்ன ஆச்சரியம்? என்கண்களை என்னால் நம்பமுடியவில்லை. நான் மலைத்து விட்டேன். தனது முன்னங்காலைத் தூக்கி, வாலையாட்டி என்னிடம் ஓடிவந்தது அந்த நாய்க்குட்டி.

பட்டுப்போல் மேனி. பளிங்குபோல் இருசிறு விழிகள். துள்ளலோடு என்னைச் சுற்றி வந்தது. "டேய் ராஜா" என்றேன். தன் சின்னவாலைச் சுருட்டி, பின்னங்கால்களினுள் மறைத்துத் துள்ளிப் பாய்ந்து வந்தது. பாலும் சோறும் ஊட்டிப் பக்கத்தில் வைத்துக் கொள்வேன். பந்தை வீசி எறிவேன். அதனைப் பாய்ந்து கௌவிக் கொண்டு வந்து தரும். காலால் பந்தை உதைத்தால் அது பின்னங்கால்களால் தட்டி உதைக்கும்.

எந்த நேரமும் என்பின்னாலேயே சுற்றிச் சுற்றி வரும். வீட்டுக்கு விருந்தினர்கள் வருவதை அது சொல்லும் திறனோ அலாதி. வருகிறவர்களது நோக்கத்தை அறியும் சக்தி நாய்களுக்கு அதிகமாம். எனது நண்பர்கள் வந்தால் வாலைக்குழைத்து அன்போடு குரல்கொடுக்கும். அறிமுகம் இல்லாதவர் வந்தால் அதிகாரத்தோடு குரல் கொடுக்கும். "நாயும் பூனையும் போல" என்று ஒரு சொற்தொடர் உண்டு. எந்தநேரமும் சச்சரவு செய்பவர்களைப் பார்த்து இப்படிக் கூறுவார்கள். ஆனால் நான் வளர்க்கும் நாய்க்குட்டி மிகவும் அன்புடையது. எங்கள் வீட்டுப் பூனைக்குட்டியைச் சேர்த்து விளையாடும்.

எங்கள் அம்மா சமைக்கும் போதுதான் ராஜாவுக்குக் கொண்டாட்டம். அம்மா மீனை வெட்டத் தொடங்கினால் போதும். காவலுக்கு ராஜாதான் உதவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிவுகளைப் பங்கு கொள்ள காகங்கள் வந்துவிடும். அவை தெத்தித் தெத்திப் பாய்ந்து திரியும். எத்தி எத்தி மீன்துண்டுகளை கௌவப்பார்க்கும். அவற்றைப் பாய்ந்து துரத்தும். பூனையும் பார்த்திருக்கும். பூனையின் பங்குக்கு ஆசைப்படாது. சிலவேளை பொறுமை இழந்த காகங்கள் ராஜாவின் தலையில் குட்டிச் செல்லும். ராஜா அழும். அடுத்த நிமிடம் வாலை நிமிர்த்திப் போர்வீரனாகி விடும்.

உணவுக்கும், நீருக்கும் ராஜாவுக்கென ஒதுக்கப்பட்ட பாத்திரங்கள் உள்ளன. அவற்றிலேயே உண்ணும். வீட்டின் முன்னால் இரவுவேளையில் காவற்கடமையில் ஈடுபடும். நான் பாடசாலைக்குப் போகும்போது படலைவரை வந்து வழியனுப்பும். பாடசாலையால் வந்ததும் படலையில் வந்து வரவேற்கும். என்னைச் சுற்றியே திரியும். மாலையில் சேர்ந்து விளையாடும். நான் வளர்க்கும் நாய்க்குட்டி ராஜா எனது இனிய நண்பன்.

## 7. தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு

"தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி"

என்று தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் பாடிய பாட்டு அற்புதமானது. அதை எங்கள் வகுப்பில் கற்பித்தார்கள். எங்கள் வீட்டுப் பசுவைப் பார்க்கிறேன். அதனை அம்மா "பசுபதி" என்று செல்லமாக அழைப்பார். அது மேய்ந்து விட்டு நிமிர்ந்து நின்று அசைபோடுகிறது. கன்றுக்குட்டி என்னைப் பார்க்கிறது. கன்றுக் குட்டியோடு ஓடிவிளையாடுவது சந்தோசமானது. நான் கன்றுக்குட்டியோடு விளையாடுவதை "பசுபதி" பார்க்கும்.

எங்கள் வீட்டின் பின்புறத்தில் தோட்டம் உள்ளது. தோட்டம் பசுமையாக உள்ளது. ஒருபுறம் காய்கறித்தோட்டம் உண்டு. அதனை சீராக வேலியிட்டு அடைத்துள்ளோம். அதற்கப்பால் பசும்புல் வளர்ந்துள்ளது. அப்பசும்புல் பரப்பிலே எங்கள் வெள்ளைப் பசு மேயும். கன்றுக்குட்டி துள்ளிப் பாய்ந்து ஓடித்திரிகிறது. எங்கள் வகுப்பில் கற்ற பாடம் நினைவில் வருகிறது. எங்கள் வீட்டுப் பசுவும் வெள்ளைதான்.

எங்கள் வீட்டின் பக்கத்தில் உள்ள கொட்டில் "பசுபதி" க்கு உரியது. மாலையானதும் அதற்குள் "பசுபதி" வந்துவிடும். எங்களுக்குப் பாலைத் தருகிறது. அதிகாலையில் "ம்மா.." என்று கன்றை அழைக்கும். அந்தச் சத்தத்தில் அம்மா எழுந்து விடுவார். அம்மா தனது கடமைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மூழ்கிவிடுவார். அப்பா எழுந்து பாலைக் கறந்து வருவார்.

நாங்கள் எழுந்து காலைக் கடன்களை முடித்து வருவோம். காய்ச்சிய பால் காத்திருக்கும்.

"பாலைப் பொழிந்து தரும் பாப்பா - அந்தப் பசு மிக நல்லதடி பாப்பா"

பாரதியாரின் பாடலைப் பாடிச் சுடச்சுடக் குடிப்போம். எங்கள் வீட்டுப்பசு எங்கள் எல்லோருக்கும் பாலைத் தருகிறது. பால் சிறந்த சத்துள்ள உணவாகும். அம்மா பாலைக் காய்ச்சுவார். நன்றாகக் காய்ச்சினால் ஒரு வாசம் வரும். அம்மா பெரிய அகப்பையினால் பாலை அள்ளுவார். அகப்பையை உயர்த்தி குண்டானுள் ஊற்றுவார். பாலில் நுரை படியும். அப்படியே விடுவார். சற்று ஆறவைப்பார். ஆடை தடித்துப் படிந்துவிடும். ஆடையை அள்ளி எடுத்துவிடுவார். பின் இன்னுமொருமுறை அதேபோல் செய்வார். பாலை ஆறவிடுவார். பின் இளஞ்சூட்டில் அதற்குள் உறையிடுவார். கொஞ்சம் தயிரைக் கரைத்து ஒரு கரண்டியளவு பாலினுள் விடுவார். அதுதான் உறையிடுதல் ஆகும். மாலையில் வீட்டில் புதுத் தயிர் இருக்கும்.

புதுத்தயிர் சுவையாக இருக்கும். சேர்த்துவைத்த ஆடையை ஒரு குண்டானுள் எடுப்பார். அதனை ஆடைகடையும் மத்தினால் கடைவார். எனக்கு ஆடை கடைவது சந்தோசமானது. அம்மாவுக்குக் கடைந்து கொடுப்பேன். கடைந்து முடிந்ததும் வெண்ணெய் வரும். அதனை இன்னுமொரு சட்டியில் இட்டு



அடுப்பில் வைப்பார். கமகமத்து நெய் வரும். அதனைப் போத்தலில் அடைத்து வைத்துவிடுவார். நெய் உணவுக்கும், மருந்துக்கும் உதவும்.
எங்கள் தோட்டத்தில் சோளம் பயிரிட்டுள்ளோம். சோளம் பசுவுக்குச் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவாகும். புல் வயல் வரம்புகளில் வளர்கிறது. மாலையில் புல்லை அறுத்துக் கொடுப்போம். வைக்கோலும், புண்ணாக்கும் பசுவுக்கு உணவாகக் கொடுப்போம். பசுவுக்குப் பக்கத்தில் தண்ணீர் தொட்டியும் வைத்துள்ளோம். எங்கள் பசு விரும்பிய உணவை விரும்பிய நேரத்தில் உண்ணும். அதற்கு வசதியாகத் தோட்டத்தில் வைத்துள்ளோம்.

இயற்கைப் பசளை பயிர்களுக்கு மிகவும் ஏற்றது. எங்கள் தோட்டத்தில் இயற்கைப் பசளை தயாரிக்கும் பசளை வங்கி உள்ளது. அதற்குள் ஒவ்வொரு நாளும் அப்பா சாணத்தை அள்ளிப் போடுவார். குப்பையைப் பெருக்கித் தரம் பிரிப்பார். உடைந்த கண்ணாடி, பிளாஸ்ரிக், பொலித்தின் உலோகப் பொருட்களை வேறாக்குவார். அவற்றை ஒருபுறம் ஒதுக்குவார். ஏனையவற்றை பசளைவங்கியினுள் போடுவார். பின்னர் தண்ணீரையும் ஊற்றி அவற்றைக் கிளறி விடுவார். அவ்வளவும் சேர்ந்து இயற்கைப் பசளையாகிவிடும். அதனை தோட்டத்தில் உள்ள பயிர்களுக்கு இடுவோம்.

பசுவின் சாணத்தை எரித்துச் சாம்பராக்கி திருநீறாக சைவசமய மக்கள் நெற்றியில் சாத்துவார்கள். அது சிறந்த தொற்று நீக்கி. சமயத்தின் ஊடாக எமது சான்றோர் சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பரப்புரை செய்துள்ளார்கள். அதனாற்தான் "மந்திரமாவது நீறு" என்று சமய குரவர்கள் பாடியுள்ளனர்.

எங்கள் வீட்டுப் பசுவினால் பலவிதமான பயன்களைப் பெறுகிறோம். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பசு இருக்க வேண்டும். பசு இருந்தால் பஞ்சம் பறந்தோடும். பால் பசியைப் போக்கும். உடலுக்கு உறுதியளிக்கும். எங்களைப் போல் "பசுபதி" போன்ற பசுவை வளருங்கள். பயனைப் பெறுங்கள்.

## 8. மைனா எனது ஆசைப்பறவை



எனக்குப் பறவை என்றால் கொள்ளை ஆசை. மைனாவைப் பார்த்திருக்கிறீர்களா? பறவைகளுள் மைனா அழகான பறவை. அதன் இனிமையான குரல் இனிக்கும். அதனைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அதன் அழகான சொண்டும் பார்வையும் எனக்குப் பிடிக்கும்.

எங்கள் தோட்டத்தில் தென்னை மரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. மைனாக்கள் கூடிச் சத்தமிட்டன. எட்டிப்பார்த்தேன். காகங்கள் வட்டமிட்டன. பல்வேறு குருவிகள் கதறிக் கொண்டிருந்தன. மைனாக் குஞ்சு மரத்தின் கீழே கிடந்தது. அப்பாவை அழைத்தேன். மைனாக் குஞ்சைக் காட்டினேன். மைனாக் குஞ்சை வளர்க்கவேண்டும் என்று ஆசை மனதுள் வளர்ந்திருந்தது. அப்பாவிடம் எனது ஆசையைச் சொன்னேன். அவர் அதனை எடுத்து என் கையில் வைத்தார். அந்தக் குஞ்சை எனது கைகளில் ஏந்தினேன். நான் மகிழ்ந்து போனேன். ஆனால் அது நடுங்கியது.

அப்பா சிறிய கூடு வாங்கித் தந்தார். அதனுள் மைனாக் குஞ்சை விட்டுச் சிறிய கதவினைப் பூட்டினேன். அது வெளியில் வருவதற்குப் பலமுறை முயற்சித்தது. அதற்குப் பசித்திருக்க வேண்டும். களைப்பினால் ஓய்ந்து குந்தியிருந்தது. அப்பா வாழைப்பழத்தைக் கொடுக்குமபடி கூறினார். வாழைப்பழத்தைக் கதவைத் திறந்து உள்ளே வைத்தேன். "ஏய், சின்னத் தங்கையே! உனக்குப் பசிக்கும். நீ சாப்பிடு" என்றேன். என்னைப் பார்த்தது. அதற்குப் புரிந்திருக்க வேண்டும். தனது அலகால் கொத்தி உண்டது. சிறிய பாத்திரத்தில் தண்ணீரையும் வைத்தேன். குடித்தது. மைனா என்னோடு பழகிவிட்டது.

எனது மைனாவுக்குக் "வடிவழகி" என்று பெயர் வைத்துள்ளேன். வடிவழகி என்று அழைத்தால் காது கொடுத்துக் கேட்கும். புரிந்து கொண்டு சீட்டியடிக்கும். வடிவழகி அம்மா என்று அழைக்கும். மனிதர்களின் குரலைப் போலவே பேசும். நான் பாடசாலைக்குப் போகும்போது "வணக்கம் போய்வா" என்று கூறும். விருந்தினர்கள் வீட்டுக்கு வந்தால் அம்மாவை அழைக்கும். நாய்க்குட்டியை ராஜா என்றே அழைக்கும். அம்மா சமைக்கும்போது காகங்கள் வந்து குவியும். அப்போது "டேய் ராஜா காகங்களை விரட்டு" என்று சத்தமிடும். அப்பாவைக் கண்டால் "அப்பா" என்றே அழைக்கும். அவர் வெளியேபோய் படலையில் வந்தால் போதும். "அப்பா வாறார்" என்று சந்தோசத்தால் சத்தமிடும். அப்பா வாழைப்பழத்தைக் கொடுப்பார். "அப்பா. பழம் நல்லருசி. நன்றி" என்று சொல்லும். உணவின்பின் சீட்டியடித்துப் பாடும். ஓய்வு நேரத்தில் அம்மா வடிவழகியோடு பேசிக்கொண்டிருப்பார். வடிவழகிதான் அம்மாவின் பேச்சுத்துணை.

பறவையைக் கூட்டில் வளர்ப்பது பாவம். அதனைச் சுதந்திரமாக விடவேண்டும். அடிக்கடி அப்பா சொல்வார். ஒருநாள் நான் வடிவழகியை வெளியில் விட்டேன். அது பறந்து சென்றது. எனக்குக் கவலையாய் இருந்தது. உண்ணவும் முடியவில்லை. அப்பாவும் அம்மாவும் ஆறுதல் கூறினார்கள். கவலையுடன் பாடசாலைக்குச் சென்றேன். என்னால் பாடங்களில் கவனம் செலுத்த முடியவில்லை. எண்ணக்கடல் விரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவழகியைப் பற்றிய நினைவு அலைமோதியது.
பாடசாலை முடிந்தது. வீட்டை நோக்கிக் கால்கள் நடந்தன. "அண்ணா வா.வா" என்று அழைக்க வடிவழகி இல்லை. மனமின்றி வீட்டினுள் நுழைந்தேன். "அண்ணா வா. அண்ணா வா" என்ற குரலைக் கேட்டேன். என்னால் நம்பவே முடியவில்லை. என் வடிவழகி யன்னலில் இருந்து என்னை வரவேற்றது. எனது மைனாவைக் கண்டதும் என்மனம் வானில் பறந்தது. ஓடோடிப் போய் வடிவழகியை வாரியணைத்தேன். "வடிவழகி எங்கே போயிருந்தாய்"? என்றேன். "வானில் பறந்து பார்த்தேன். எனக்குச் சொந்தம் என்று யாரும் இல்லை. நமது அம்மாவும் அப்பாவும்தான் எனது சொந்த பந்தம் திரும்பி வந்து விட்டேன். இனிமேல் உங்களோடுதான் வாழ்வேன்." என்று பாடியது.

ஓடோடிக் கடைக்குச் சென்றேன். வாழைப்பழம் வாங்கி வந்தேன். எனது மைனாவுக்குக் கொடுத்தேன். அது சந்தோசத்தோடு உண்டது. மைனா அறிவுள்ள பறவை. வடிவழகி காது கொடுத்து உற்றுக் கேட்கும். இப்போது அது கூண்டில் வாழ்வதில்லை. வீட்டில் விரும்பிய இடத்தில் வாழும் உரிமையைப் பெற்றுவிட்டது. எங்கள் குடும்பத்தில் வடிவழகியும் அங்கத்துவம் பெற்றுவிட்டது. அதன் அழகான மென்மையான இறகுகளை வருடி விடுவேன். எனது செல்லப் பறவை இனிக்க இனிக்கப் பாடும். அதனைக் கேட்டுக் கொண்டே இருக்கிறேன்.


## 9. குயிலக்காவின் பாட்டு

வசந்த காலம் தொடங்கிவிட்டால் உயிரினங்களுக்குச் சந்தோசந்தான். மரங்கள் இலைகளை உதிர்த்துவிடும். அவற்றில் இருந்து புத்தம் புதுத் தளிர்கள் வெளிவரும். தளிர்களிடையே வண்ண வண்ணப் பூக்கள் விரியும். பல தாவரங்கள் பூத்துக் குலுங்கும். பூக்களைச் சுற்றிப் பூச்சிகளும், பறவைகளும் பறந்து தேன்சுவைக்கும். பூக்களின் பின்னால் பிஞ்சுகள் தொடரும். பார்த்திருக்கப் பிஞ்சுகள் காயாகிப் பழமாகும். பறவைகளுக்குக் கொண்டாட்டம். எங்கும் பறவைகளின் பாடலினிக்கும்.

குயில்களுக்குக் கொண்டாட்டம்தான். காலை கிழக்கில் கார்முகிலைக் கிழித்து ஒளி வெளிக்கிளம்பும். அதற்குமுன் கத்தும் குயிலோசை வந்து காதில் ஒலிக்கும். அந்த இனிய ஓசை உள்ளங்களைக் கிறங்கடிக்கும். குயில்களின் கும்மாளம் தொடரும். சோடிகளாகச் சேர்ந்து காகங்களின் கூடுகளை நோட்டம் விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சடுதியாகக் காகங்களின் கூடுகளில் முட்டையிட்டுப் பறந்துவிடும். இந்தக் குயில்களாக நானிருந்தால் எவ்வளவு சந்தோசமாக இருக்கும்.

வானில் பறந்து வட்டமிட்டுக் கானம் பாடி மகிழ்வேன். இயற்கை படைத்த தாவரங்களின் காய் கனிகளை உண்டு கூ..கூ..பாடுவேன். எனது பாடலில் இந்த உலகையே மயக்கிவிடுவேன். உலகம் நலமே வாழப் பாடுவேன். சாதிகள் பேசும் சமுதாயத்தைச் சாடுவேன். இனங்களாப் பிரிந்து சண்டையிடும் மானிடர்களைச் சாடுவேன். ஒரே தேவன், ஒன்றே குலம் என்று அனைவருக்கும் ஓதுவேன். தீயோரைச் சாடிப் பாடித் திருத்துவேன்.

சோம்பிக் கிடக்கும் மாணவர்களைத் துயிலெழுப்பி விடுவேன். அவர்களது கடமைகளை உணர்த்துவேன். பெற்றோரை மதிக்கவும். அவர்தம் சொற்கேட்கவும் அறிவுறுத்துவேன். ஏழைகளுக்கு உதவும்படி பாட்டிசைப்பேன். அகதிமுகாம்களில் அல்லலுறும் ஏழைகளுக்காக ஏங்கிப் பாடுவேன். பெற்றாரை இழந்து கவலையடையும் பிள்ளைகளுக்காய் நித்தமும் பாடுவேன். அவர்களுக்கு அருளும்படி இறைவனைப் புகழ்ந்து பாடுவேன்.

மரங்களின் கனிகளை உண்டு மகிழ்வேன். உணவின்பின் மரக்கிளையில் அமர்ந்து ஓய்வெடுப்பேன். கிளைகளைக் காற்று அசைக்கும். அந்தச் சுகத்தில் இன்புறுவேன். எனது இனத்துக்கு ஏன் இறைவா கூடுகட்டக் கற்றுத் தரவில்லை? என்று கடவுளிடம் கேட்பேன். மரங்கொத்தி மாமாவிடம் கூடமைக்கக் கற்றுத் தரும்படி கேட்பேன். நானும் கற்றுக் கொண்டு கூடுகளை அமைப்பேன். எனது இனத்தவருக்கும் கூடமைக்கக் கற்றுக் கொடுப்பேன். கூடுகளில் முட்டையிடவும், தாங்களே அடைகாத்துக் குஞ்சுகளைப் பொரிக்கவும் வற்புறுத்துவேன்.

நான் குயிலானால் பறவையினங்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயன்பு எமக்குக் கிடைப்பதில்லை. அடைகாக்கவும், குஞ்சு பொரிக்கவும், உணவூட்டவும் கற்றுக் கொள்வேன். காகங்கள் செவிலித்தாயாக உதவுகின்றன. நாங்கள் பெரியவர்களானதும் அவர்களை விட்டு விலகிவிடுகிறோம். அது எவ்வளவு பாவம் என்பதை உணர்கிறேன். எங்களுக்கு நன்றியில்லை என்று கூறுவார்கள். அதனை நினைந்து நெஞ்சுருகிப் பாடுவேன். மானிடம் வாழத் தினமும் பாட்டிசைப்பேன். அவர்தம் ஈனச் செயலைக் கண்டும் சோகத்தோடு கூவுவேன். ஏய் மானிடரே ஒற்றுமையாக வாழுங்கள் என்று தினமும் கூவிக்கொண்டே இருப்பேன். எனது பாட்டைக் கேட்டு இந்தப் பாரே திருந்தும் வண்ணம் பாட்டிசைத்துக் கூவுவேன்.

பறவையினங்களுக்கு இன்னிசையைக் கற்றுத் தருவேன். காலையில் ஒவ்வொரு பறவையினமும் தமக்கு இயன்ற இசைகளைக் கூட்டிப் பாடுகின்றன. இவற்றை மாற்றி ஒரு இசைக்கோலமாக மாற்றி இசைக்கக் கற்றுக் கொடுப்பேன். மனித இனம் வாழ்வதற்காக ஒற்றுமைக்கான இசையை ஓங்கி இசைப்பேன்.

"குயில் அக்கா பாட்டுக்கு
மயில் அண்ணா அபிநயம்
மரங் கொத்தி மாமாவின்
மிரு தங்க வாத்தியம்".

எங்களைப் பார்த்துச் சிறுவர்கள் பாடி மகிழ்வார்கள்.
ஓ..ஓ... சிந்திக்கத் தெரிந்த மனிதர்களே! ஒன்று பட்டு நமது நாடு வாழ இன்னிசை பாடுங்கள். இந்த நாட்டில் மூவின மக்களும் ஒன்றாகச் சேர்ந்து வாழ எங்களோடு பாடுங்கள்"என்று பாடுவேன்.

## 10. உவகையூட்டும் பூந்தோட்டம்

உயிரினங்களுக்கு உவகை ஊட்டுவது பூக்கள். பூக்களில் சுரக்கும் தேன் உயிரினங்களுக்கு உணவளிக்கிறது. மணத்தைப் பரப்பி மனதுக்கு இன்பத்தை அளிப்பதும் பூக்களே. எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா என்று பாரதி சொன்னான். அத்தனை இன்பங்களையும் பூக்களில் காணலாம்.

பூக்களின் இதழ்கள் மென்மையானவை. பல்வேறு நிறங்களில் பூக்களை காணும்போது உள்ளம் பரவசமடைகிறது. கற்பனையை விரிவடையச் செய்கிறது. பூக்களில் இருந்துதானே தேனீக்கள் தேனைச் சேகரிக்கின்றன. தேன் அருமருந்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களில்தான் எத்தனை ஆயிரம் வகையும் வண்ணமும் உண்டு. வாசமுள்ள பூக்களும், வாசமில்லாப் பூக்களும் உண்டு. கண்ணைக் கவரும் நிறங்களில் பல்வேறு வடிவங்களில் பூக்கள் உண்டு. எனது வீட்டின் முற்றத்திலும். வீட்டைச் சுற்றியும் பூந்தோட்டம் வைத்துள்ளேன். இலைகள் பச்சையாக இருக்கும். ஆனால் ஒவ்வொரு பூஞ்செடிகளிலும் பலநிறப் பூக்கள். இறைவனின் அற்புதம் என்னே?

வட்ட வட்டப் பாத்திகளில் வகைவகையாய் பூஞ்செடிகளை நாட்டுவோம். காலை எழுந்ததும் நமது பூந் தோட்டத்தில்தான் கண்விழிக்க வேண்டும். பூக்களைப் பார்த்துப் பரவசம் அடையவேண்டும். நானும் எனது பூந்தோட்டத்தில் மல்லிகை. ரோஜா, செவ்வரத்தை. நித்தியகல்யாணி, போன்ற பலவகைப் பூஞ்செடிகளை வைத்துள்ளேன்.



இரவுராணி என்றொரு வகைப் பூஞ்செடி உள்ளது. அது இரவில் மலரும். அயலில் உள்ளவர்கள் அந்த மணத்தை அனுபவித்துப் பாராட்டுவார்கள்.
எனது பூந்தோட்டத்தை நாடிப் பலவகையான பறவைகளும் வரும். வண்ணத்துப் பூச்சிகள் வட்டமடித்துப் பறந்து வரும். பூக்களைச் சுற்றித் திரிந்து தேனை அருந்தும். பறவைகள் பூக்களில் அமர்ந்து தேனையுண்ணும். அந்த அற்புதக் காட்சி எனது மனதைக் கொள்ளை கொள்ளும். எனது அண்ணாமாரும். அக்கா, தங்கைமாரும் மகிழ்ச்சியால் துள்ளுவார்கள். அவர்களின் இன்பத்தில் நான் திளைப்பேன்.


எனது அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி அனைவரும் பூந்தோட்டத்தைக் கவனிப்பார்கள். காலையும் மாலையும் தண்ணீர் பாய்ச்சுவோம். அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பசளைவங்கி" எப்படிச் செய்வது என்று கற்றுத் தந்துள்ளார். மாலையில் சருகுகளைச் சேர்த்துப் பசளைவங்கியில் இடுவோம். எங்கள் வீட்டில் பசுக்கள் உண்டு. அவற்றின் சாணம் நல்ல பசளையாகும். சாணத்தைக் கரைத்துப் பசளைவங்கியினுள் ஊற்றுவோம். அப்பா அதனைக் கிளறி விடுவார். இவ்வாறு அடிக்கடி கிளறி விடுவோம். இயற்கைப் பசளை உருவாகிவிடும். அதனையே பூஞ்செடிகளுக்கு இடுவோம்.

எனது பூந்தோட்டத்தைப் பார்வையிடப் பலரும் வருவார்கள். அவர்கள் தங்கள் மனதைப் பறிகொடுத்து மகிழ்வார்கள். பூக்களைப் பற்றிக் கேட்பார்கள். இயலுமானவரை பதிலளிப்பேன். அப்பா சரியான பதில்களைக் கொடுப்பார். இறைவன் நமக்களித்த கொடைகளை நினைந்து கொள்வேன். பச்சை இலைகளையுடைய மரங்களில் எப்படிப் பலவகையான பூக்கள் மலர்கின்றன.? ஏன் சில பூக்கள் மட்டும் மணத்தைப் பரப்புகின்றன.? ஏன் வாசமில்லாப் பூக்கள் பலவகையான நிறங்களைக் கொண்டுள்ளன.? இவை யாவும் இறைவன் செயலல்லவா?



எனது பூந்தோட்டத்தில் இரவில் மலரும் பூக்களைப் பார்க்கிறேன். அவற்றுள் ஒன்று மல்லிகை. அதன் நிறம் வெள்ளை. மனதை ஈர்க்கும் மணத்தைக் கொண்டுள்ளது. வெள்ளை மலர்கள் யாவும் இரவில் மலருமாம். அப்பா அடிக்கடி கூறுவார். பல்வேறு நிறங்களையுடைய பூக்கள் பகலில் மலர்வதைக் கண்டுள்ளேன்.

காலையில் குளித்ததும் வேண்டிய பூக்களைப் பறிப்போம். அம்மா பூமாலை கட்டுவதற்குக் கற்றுத் தந்துள்ளார். தினமும் மாலைகட்டிக் கோயிலுக்குக் கொடுப்போம். எங்கள் கிராமத்தில் சடங்குகள் நடைபெறும். அப்போது பூமாலைகள் தேவைப்படும். அதற்கான பூக்களைக் கொடுத்து உதவுவோம்.

பூந்தோட்டம் நமக்கு மனதுக்கு இன்பத்தைத் தருகிறது. அதேவேளை வருவாயையும் தருகிறது. நாமெல்லோரும் பூந்தோட்டத்தை அமைப்போம். சந்தோசத்தைப் பெருக்குவோம்.

எனது பூந்தோட்டத்தை மாமா வந்து பார்த்தார். என்னை அதிசயமாகப் பார்த்தார். "உனக்கு உதவப்போகிறேன்" என்றார். எனக்கு அதிசயம். அவர் போய்விட்டார். சில நாட்களின்பின் சிலர் எங்கள் வீட்டை நோக்கி வந்தார்கள். எனது பூந்தோட்டத்தைப் பார்த்தார்கள். அப்பாவிடம் கதைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குத் தேவையான பூக்களைக் காட்டினார்கள். அவற்றுள் அந்தூரியமும் ஒன்று. பூக்கள் அழகாகத் தென்பட்டன. அவற்றைத் தமக்குத் தருமாறு கேட்டார்கள். அப்பா சம்மதம் தெரிவித்தார். இப்போது நல்ல வருவாயை எனது பூந்தோட்டம் தருகிறது.

## 11. வாழவைக்கும் வீட்டுத்தோட்டம்

"வாழை வைத்தால் அது நம்மை வாழவைக்கும்" என்பார்கள். நாங்கள் வாழையுடன் பலவகைத் தாவரங்களையும் வைத்து வளர்க்கிறோம். இதனை வீட்டுத் தோட்டம் என்றழைப்பார்கள்.

எங்கள் வீட்டுத் தோட்டம் அழகானது. பலவகைத் தாவரங்கள் உள்ளன. மா, பலா, வாழை எனக் கனிதரு மரங்களும் உள்ளன. அத்துடன் கொய்யா, மாதுளை, தோடை, போன்ற பயனுள்ள தாவரங்களும் உண்டு. தென்னைகள் இளநீர் குலைகளுடன் காற்றில் அசைவது அழகாக இருக்கும். தேங்காய்கள் பழுத்து விழும். கிணற்றடியில் உள்ள கமுகு மரங்களில் வெற்றிலைக் கொடிகள் படர்ந்துள்ளன. கமுகு மரங்களில் பாக்குக் குலைகுலையாகத் தொங்கும். அவை மஞ்சளும் பச்சையும் கலந்து பார்ப்பவர்களது மனங்களைக் கொள்ளை கொள்ளும்.

வீட்டில் உள்ள தோட்டமே வீட்டுத் தோட்டமாகும். எங்கள் வீட்டைச்சுற்றிப் பெரிய தோட்டமுண்டு. வீட்டின் பின்புறத்தில் வீட்டுத்தோட்டம் உள்ளது. ஒருபுறம் பூந்தோட்டம் உள்ளது. இன்னொரு புறம் காய்கறித்தோட்டம் உண்டு. தோட்டம் பசுமையாக உள்ளது. காய்கறித்தோட்டத்தைச் சீராக வேலியிட்டு அடைத்துள்ளோம். தோட்டத்தில் வேலைசெய்வதற்கான பொருட்களை வைப்பதற்குத் தனியான குடிசையுண்டு.


மாலையானதும் அப்பா, அம்மா, அண்ணாமார் தோட்டத்துள் வந்துவிடுவார்கள். எல்லோரும் சேர்ந்து நீர் இறைப்பார்கள். அம்மாவோடு சேர்ந்து நான் களை பிடுங்குவேன். தாத்தா பசளை வங்கியினைக் கிளறி விடுவார். காலையில் தாத்தா சாணத்தைக் கரைத்துப் பசளை வங்கியினுள் ஊற்றுவார். நாங்கள் கிருமி நாசினியைப் பயன் படுத்துவதில்லை. வீட்டுத் தோட்டத்தால் எங்களுக்கு நல்ல சுத்தமான மரக்கறி கிடைக்கிறது. ஒவ்வொரு கிழமையும் மரக்கறி வாங்குவதற்காக வியாபாரிகள் வருவார்கள். தாத்தா மரக்கறிவகைகளைப் பிடுங்கி அவர்களிடம் கொடுத்துப் பணத்தினைப் பெற்றுக் கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கறிவகைகள் நன்றாகப் பயிராகின்றன. எங்கள் வீட்டுக்குத் தேவையான மரக்கறிவகைகளை எங்கள் வீட்டுத் தோட்டமே தருகிறது. எனது தோட்டத்தில் வேலை செய்வது சந்தோசமானது. எங்கள் தோட்டத்தை அழகாகத் திட்டமிட்டு அப்பா நட்டிருக்கிறார். ஒருபுறம் கத்தரிச் செடிகள் காய்களுடன் காட்சியாகும். மறுபுறம் மிளகாய்ச் செடிகள் பழமும் காய்களுமாகக் கலகலக்கும். தக்காளி காயும் கனியுமாகப் படுத்திருக்கும்.

பந்தல்களில் பாகலும் புடோலும் தொங்கும். அவரைக் கொடி பந்தலில் படர்ந்து ஊதாப்பூக்களுடன் காய்களைக் காட்டும். பூசணிக்கொடி காய்களுடன் அடைகாக்கும். கீரைவகை பாத்தி, பாத்தியாகச் சிலிர்த்து நிற்கும். மரவள்ளி நிலத்தினுள் கிழங்கினை மறைத்துக் கொண்டு அசையும். வற்றாளை படர்ந்து நிலத்தினுள் கிழங்கை வைத்து மூடிக்கொள்ளும்.



எங்கள் எல்லோர் பெயரிலும் வங்கியில் சேமிப்புக் கணக்கு உள்ளது. சேமிக்கும் பழக்கத்தை தாத்தா ஊக்குவிப்பார்.

தோட்டத்தில் நாங்கள் கற்றுக் கொள்வது அதிகம். செயன்முறையூடான கல்வியையே நாங்கள் பாடசாலையில் கற்கிறோம். அதனை எங்கள் வீட்டுத் தோட்டத்தில் கற்றுத் தெளிய வாய்ப்பு ஏற்படுகிறது. பயிர்களை நட்டதும் பதிவேட்டில் பதிந்து கொள்ளுவோம். அதன் வளர்ச்சியை நாள்தோறும் குறித்துக் கொள்வோம். பயிரில் மொட்டுக்கள் உருவாகும். பூக்கள் விரியும். பறவைகளும். பூச்சிகளும் வரும். மகரந்தச் சேர்க்கை நடைபெறும்.

பூக்களில் எவ்வாறு பிஞ்சுகள் உருவாகின்றன. எங்கள் அப்பா விளக்குவார். பச்சை இலைகளையுடைய செடிகளில் எப்படி வண்ணப்பூக்கள் வருகின்றன. தாத்தா இயற்கையின் அற்புதங்களை விளக்குவார். நாங்கள் கேட்டு எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு நன்றியினைச் செலுத்துவோம். சிறு நிலமிருந்தாலும் அதனைப் பயன்படுத்த வேண்டும். சில மரக்கறிவகைகளைப் பயிரிட்டால் பயனைப் பெறலாம். நமது பொருளாதாரத்தைப் பெருக்குவதாயின் நாம் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடவேண்டும். அதனால் நல்ல பயன் கிடைக்கும்.

## 12. சுத்தமுள்ள சூழலை உருவாக்குவோம்

"சொர்க்கம் என்பது நமக்குச் சுத்தமுள்ள வீடுதான்"என்ற பாடலைக் கேட்டிருப்பீர்கள். வீடு சுத்தமாக இருப்பதற்கு நமது சூழல் சுத்தமாக இருக்க வேண்டும். சூழலைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை அப்பாடல் வலியுறுத்துகிறது.

நம்மைச் சூழவுள்ள பகுதியும் நாம் வாழும் இடமும் நமது சூழலாகும். வானும். கடலும். காற்றும் நம்மைச் சூழ்ந்துள்ளன. நமது சூழலில் உயிருள்ளனவும், இல்லாதனவும் உள்ளன. தாவரம். விலங்குகள். உயிரினங்கள். வீடு, கட்டிடங்கள், வாகனங்கள் அனைத்தும் நாம் வாழும் சூழலில் உள்ளன. நாம் வாழும் சூழல் பரபரப்பானது. எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கும். வாகனங்களின் இரைச்சல் காதுகளை அடைக்கும். அமைதி உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

நமது பூமி அற்புதமானது. நாம் வாழ்வதற்குத் தேவையான அத்தனை பொருட்களும் பூமியில் உண்டு. பூமியைக் காக்கவென வளிமண்டலக் கவசம் உண்டு. நிலத்தடி நீரும், வளமான மண்ணும் உண்டு. ஆறுகள் ஓடுகின்றன. மலைகள் வானைத் தொட நிமிர்ந்து நிற்கின்றன. கருமேகத்தைத் தடுத்து மழையைப் பெய்யச் செய்கின்றன.

பூமியில் என்ன இல்லை. தட்டினால் தங்கம். வெட்டினால் வெள்ளி, இடித்தால் இரும்பு, பிளந்தால் பெற்றோல். எல்லா வளங்களும் பூமித்தாய் நமக்குத் தருகிறாள். ஆனால் நாம் பூமித்தாயை அளவுக்கு அதிகமாகச் சுரண்டுகிறோம். அதனால் சூழல் மாசடைகிறது.

தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கும். அதிலிருந்து வெளியாகும் கழிவுகள் வளியிலும். நீரிலும். நிலத்திலும் கலக்கின்றன. குப்பை கூளங்கள் வீதிகளில் குவிந்து கிடக்கின்றன. நாம் வாழும் சூழல் சுத்தமாக இருந்தால் நோயில்லாது வாழலாம். நாம் வாழும் வீடு மிக முக்கியமானது. வீடு துப்பரவாக இருந்தால் நாடு துப்பரவாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு சுத்தமாக இருந்தால் நாடு சுத்தமாக இருக்கும். சூழலில் தொற்று நோய்க் கிருமிகளும் உருவாக வாய்ப்பில்லை. வீசும் காற்றும், நீரும், சுத்தமாக இருக்க உழைப்போம். சூரிய ஒளியும், வளியும் வீட்டினுள் புகும்படி யன்னல்களை வைப்போம். இவ்வாறு அனைவரும் கவனம் செலுத்தினால் உலகைக் காப்பாற்றலாம்.

நாம் வாழும் உலகு இனியது. வானும், சூரிய சந்திரனும். இனியன. கடலும், நிலமும். காற்றும் வெளியும் இனியன. நமக்காக இறைவனால் அருளப்பட்ட கொடைகள்தான் இவைகள். இவற்றைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுவோம்.

சூழலைப் பேணிப் பாதுகாத்தால் கொடிய நோய்களில் இருந்து விடுதலை பெறலாம். மலேரியா,டெங்கு, யானைக்கால் வியாதி. இன்னும் அதிகமான தொற்று நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். "நோயற்ற வாழ்வே



குறைவற்ற செல்வம்" என்று நம்முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.
காற்றும். கடலும், நீரும் நிலமும், மலையும், காடும் நம்மைச் சூழவுள்ளன. நாம் வாழும் சூழலைப் பாதுகாகாப்பது நமது தலையாய கடமை எனக் கொள்ளவேண்டும். காடு நமது நாட்டின் செல்வம். தவரங்கள் நமக்குப் பல்வேறுவகையில் உதவுகின்றன. காடு இல்லையென்றால் நாட்டில் நல்லமழை பெய்யாது. உயிர்க்காற்று உற்பத்தியாகாது. உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். அதனால்தான் இளங்கோ அடிகளும் மாமழை போற்றுதும் என்றார்.

சனப்பெருக்கம் அதிகரிக்கும்போது உணவுத்தேவையும் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடை, உறைவிடத் தேவைகளும் அதிகரிக்கும். அவற்றை ஈடுசெய்வதற்காக உற்பத்தியைப் பெருக்க வேண்டும். உணவு உற்பத்திக்காக நவீன தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துகிறார்கள். புதிய புதிய பசளை வகைகளையும், கிருமி நாசினிகளையும் உற்பத்தி செய்கிறார்கள். சுற்றுப்புறச் சூழல் மாசடைகிறது. மூன்று வழிகளில் சூழல் மாசடைகிறது.

நாம் வாழும் சூழலில் முக்கியம் பெறுவது வளியாகும். வளியில் ஒக்சிசன். ஐதரசன், நைதரசன், காபனீரோட்சைட், போன்ற பலவேறு வாயுக்கள் கலந்துள்ளன. இக்கலவை ஒரு சமநிலைத் தன்மையைக் கொண்டது. இக்கலவையில் ஏதேனும் ஒன்று கூடிக்குறைந்தால் மாசடைந்துவிடும். தொழிற்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்கும்போது அதிகளவு காபனீரொட்சைட்டும், புகையும் வளியில் கலந்து விடுகிறது. அத்துடன் நாளாந்தம் வாகனங்களின் புகையும். தூசிப்படிவுகளும் கலந்து விடுகிறது. அதேபோல் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுக்கழிவுகள் நீர்நிலைகளில் கலக்கின்றன. கடலில் பயனிக்கும் கப்பலின் கசிவுகள். உற்பத்திப் பெருக்கத்துக்காகப் பயன்படுத்தும் உரவகைகளும், கிருமிநாசினிகளும் நிலத்தை மாசுபடுத்துகின்றன. இவை யாவும் உயிரினங்களைப் பாதிக்கும்.

வீடு சுத்தம் கண்டால் நாம் வாழும் நாடு சொர்க்கலோகம்தான். நாம் வாழும் சூழலைப் போற்றுவோம்.

## 13. விண்வெளியை நோக்கிய பயணம்

விண்வெளியை நோக்கிய பயண முயற்சி 1957 ஒக்ரோபர் 4ம் திகதி சோவியற் ஒன்றியத்தினால் "ஸ்புட்னிக்" என்ற செய்மதியை விண்வெளிக்கு அனுப்பியதன் மூலம் தொடங்கப்பட்டது. 1959ல் மற்றுமொரு செய்மதியை சந்திரனுக்கு அனுப்பியது. இன்னுமொரு செய்மதி சந்திரனில் இறங்கியது. 1961 ஏப்பிரல் 12ல் யூரி ககாரின் "வொஸ்ரொக் 1" செய்மதியில் விண்வெளியில் வலம் வந்தார். முழு உலகமுமே அதிசயத்தில் ஆழ்ந்தது.

வானத்தை அண்ணர்ந்து பாருங்கள். என்ன தெரிகிறது? பரந்த வெட்டைவெளியல்லவா? நமது வானத்தின் பரந்த வெறும் வெட்டவெளியே விண்வெளியாகும். அதனைப் பிரபஞ்சம் என்றும் அழைப்பார்கள். நமது சூரியக் குடும்பமும் விண்வெளியில் உலாவருகின்றது. பிரபஞ்சத்தில் உலாவரும் கிரகங்களும், விண்மீன் கூட்டங்களும் சிறு சிறு புள்ளிகளாகவே தென்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வளிமண்டலம் வெறுமையாக இல்லை. வளியும், தூசு துணிக்கைகளும், விண்கற்களும் கலந்துள்ளன. பலவகையான கதிர்வீச்சுக்கள் சுதந்திரமாக நடைபெறுகின்றன. ஆயிரக்கணக்கான செய்மதிகளும் உலாவருகின்றன

விண்வெளியை ஆய்வு செய்வதில் மனிதரின் ஆர்வம் அதிகரித்துள்ளது. வான்வெளி ஆய்வாளர்கள் பிரபஞ்சத்தில் உடுக்களையும், விண்மீன் கூட்டங்களையும் ஆராய்கின்றனர். விண்வெளியில் என்ன உண்டு?, அங்கெல்லாம் உயிரினங்கள் உள்ளனவா என்று அறிவதற்கு ஆவல் பிறந்துள்ளது. விண்வெளியில் பயணங்களை மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப் படுகின்றன. பல நாடுகள் ஆளில்லாச் செய்மதிகளையும். ஆட்கள் செலுத்தும் செய்மதிகளையும் போட்டி போட்டுக் கொண்டு விண்ணுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றன.

புவியைச் சூழ வளிமண்டலம் சூழ்ந்து கவசம்போலுள்ளது. புவியிலிருந்து மேலே செல்லச் செல்ல வளியின் அடர்த்தி குறைவடைகிறது. புவிக்கும் பிரபஞ்ச வெளிக்கும் இடையில் வரையறை செய்யப்பட்ட எல்லைகள் இல்லை. ஆனாலும் பல விஞ்ஞானிகள் புவியில் இருந்து வளிமண்டலம் சுமார் 60 மைல் (95 கிலோ மீற்றர்) வரை பரந்துள்ளது எனக் கூறுவர்.

விண்வெளியில் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் விண்வெளி ஆய்வுகூடம் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றது. பல நாடுகள் விண்வெளியில் உலா வந்து சாதனைபடைத்துக் கொண்டிருக்கின்றன.

ஐக்கிய அமெரிக்கா வீனஸை நோக்கி 1962ல் ராக்கெட் அனுப்பியது. முதலாவதாக 1968 டிசம்பர் 21ல் ஐக்கிய அமெரிக்கா சந்திரனை நோக்கி "அப்பலோ 8 ஐ விண்வெளிக்கு ஏவியது. அது 10 முறை சந்திரனைச் சுற்றிவிட்டுப் பாதுகாப்பாகப் பூமிக்குத் திரும்பியது. 1969 ஜூலை 20ல் ஐக்கிய அமெரிக்கா அப்பலோ 11" சந்திரனை நோக்கி ஏவியது. அதில் நீல் ஆம்ஸ்ரோங் எட்வின் புஸ் அல்ரின், மைக்கல் கொலின் பயணித்தனர்.



1981 ஏப்பிரல் 12ல் ஐக்கிய அமெரிக்க விண்வெளிச் செய்மதியான கொலம்பியா சாதாரணமாகத் தரையிறங்கி, அதனை மீண்டும் பயன்படுத்தக் கூடியதாகவும் இருந்தது. 1986 ஜனவரி பெரியதொரு விபத்து நடந்து 07 விண்வெளி வீரர்கள் பலியானார்கள். கல்பனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இந்திய விண்வெளி வீராங்கனையுடன் 07 பேர் 2003ல் பலியானார்கள். 1997 - 1998 காலப்பகுதியில் சோவியத் விண்வெளிவீரர்கள் விண்வெளி ஆய்வுகூடத்தில் 366 நாட்களைத் தொடர்ச்சியாகக் கழித்தார்கள்.

சந்திரனில் முதல்காலடி பதித்த பெயரை நீல் ஆம்ஸ்ரோங். தட்டிக் கொண்டார். இவ்வாறான 5 முயற்சிகளை ஐக்கிய அமெரிக்கா மேற்கொண்டது. 1974. விண்வெளிப்பயண முயற்சிகளை ஜேர்மனுடன் சேர்ந்து மேற்கொண்டது. ஒரு செய்மதி சூரியனுக்கு அண்மையில் உள்ள மேக்குரியை வலம் வந்தது. 1976 ஆம் ஆண்டில் செவ்வாயை நோக்கி செய்மதி அனுப்பட்டது. புளூட்டோவைத் தவிர்ந்த ஏனைய கிரகங்களை ஆராய்வதில் ஈடுபட்டன. இன்று பல நாடுகள் விண்வெளியை ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. விண்வெளியை நோக்கிய பயணங்கள் வெற்றியைத் தரலாம். ஆனால் மண்ணில் வாழும் மனிதன் தனது இனத்தையே அழிக்க முற்படுகிறான்.

## 14. வலண்டினா விண்வெளியில் வலம்வந்த முதற் பெண்

பாரதி கண்ட புதுமைப் பெண்தான் ருசியப் பெண் வலண்டினா ஆவார். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்றதொரு சமூக அமைப்பில் விண்வெளியை ஆய்வு செய்யப் புறபட்ட வீராங்கனை வலன்டினா.

வலன்டினா தெரஷ்கோவா எட்டு வயது வரை பாடசாலைக்கே செல்லவில்லை. 1945ல் அவரது எட்டாவது வயதில் பாடசாலையில் சேர்ந்தார். 1953ல் தனது குடும்பச்சுமையின் காரணமாகத் தனது 17வது வயதில் பள்ளிப்படிப்பை முடித்ததும் கைத்தறித் தொழிற்சாலையில் சேர்ந்தார். வாழ்க்கையில் முன்னேறவேண்டும் என்று துடிப்போடு இருந்தார். ஆனாலும் அவர் படிப்பைக் கைவிடவில்லை.

இன்று நமது நாட்டில் எத்தனை இளைஞர்கள், யுவதிகள் வலன்டினா போல் சிந்திக்கின்றார்கள்.? வலன்டினாவின் தொழிற்சாலைக்கு விமானத்தில் இருந்து குதிக்கும் படைப்பிரிவைச் சேர்ந்த விமானப்படை வீரர்கள் வருவதுண்டு. அவர்களது நட்பைப் பெற்றார். தபால் மூலம் கல்வியைக் கற்கத் தொடங்கினார்.

உள்ளூரில் பரசூட்டில் இருந்து குதித்துப் பழக வாய்ப்பு இருந்தது. பரசூட்டில் இருந்து குதிப்பதைப் பொழுது போக்காகத் தொடங்கிய வலண்டினா தெரஷ்கோவா 1959 மே 21ல் தனது இருபத்திரெண்டாவது வயதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது குதிப்பைச் செய்தார். பரசூட்டில் இருந்து அநாயசமாகக் குதிக்கும் பெண்மணி என்ற புகழைப் பெற்றார். ரஷ்யப் புரட்சி தினக் கொண்டாட்டத்தின்போது ரஷ்ய அதிபர் முன்னிலையில் ஆயிரக்கணக்கான மீற்றர் உயரத்தில் இருந்து பரசூட்டில் வலன்டினா குதித்தபோது ரஷ்யா முழுவதும் அவரது பெயர் பரவியது.



விண்வெளியை ஆய்வு செய்வதில் மனிதரின் ஆர்வம் அதிகரித்துள்ளது. வான்வெளி ஆய்வாளர்கள் பிரபஞ்சத்தில் உடுக்களையும், விண்மீன் கூட்டங்களையும் ஆராய்கின்றனர். விண்வெளியில் என்ன உண்டு?, அங்கெல்லாம் உயிரினங்கள் உள்ளனவா என்று அறிவதற்கு ஆவல் பிறந்துள்ளது. விண்வெளியில் பயணங்களை மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப் படுகின்றன. பல நாடுகள் ஆளில்லாச் செயமதிகளையும். ஆட்கள் செலுத்தும் செய்மதிகளையும் போட்டி போட்டுக் கொண்டு விண்ணுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றன.

விண்வெளியில் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் விண்வெளி ஆய்வுகூடம் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றது. பல நாடுகள் விண்வெளியில் உலா வந்து சாதனைபடைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த முயற்சி 1957 ஒக்ரோபர் 4ம் திகதி சோவியற் ஒன்றியத்தினால் "ஸ்புட்னிக்" என்ற செய்மதியை விண்வெளிக்கு அனுப்பியதன் மூலம் தொடங்கப்பட்டது. 1959ல் மற்றுமொரு செய்மதியை சந்திரனுக்கு அனுப்பியது. இன்னுமொரு செய்மதி சந்திரனில் இறங்கியது. 1961 ஏப்பிரல் 12ல் யூரி ககாரின் "வொஸ்ரொக் 1" என்னும் செய்மதியில் விண்வெளியில் வலம் வந்தார்.

அதற்கு இரண்டாண்டுகள் கழித்து 1963ல் விண்வெளியில் வலம் வந்து சாதனை படைத்தவர்தான் வலண்டினா தெரஷ்கோவா. வலண்டினா தெரஷ்கோவா ரஷ்யாவில் உள்ள மஸ்லெனின்கொவோ என்ற சிறிய நகரத்தில் 1937 மார்ச் 6ல் பிறந்தார். அவருக்கு ஒரு தமக்கையும் ஒரு தம்பியும் உள்ளனர். தந்தை ஒரு சாரதியாகக் கடமையாற்றினார். அவர் 1939-1940ல் நடந்த பின்னோ ரஷ்ய போரின் போது காணாமல் போய்விட்டார். வலண்டினாவின் தாய் எலனா பெடொறோவ்னா தறிப்பட்டறையில் பணியாற்றினார். அவர் தனது மூன்று பிள்ளைகளையும் வளர்ப்பதற்காகப் பெரும் பாடுபட்டார்.

சோவியத் விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தின் தலைமைப் பீடம் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணை விண்வெளிக்கு அனுப்பிச் சாதனை படைக்க வேண்டும் என்று தீவிரமாகச் சிந்தித்தது. அதற்குக் காரணமும் இருந்தது. அமெரிக்கா விண்வெளிக்கு ஒரு பெண்ணை அனுப்பிச் சாதனை படைக்குமுன் தாங்கள் அச்சாதனையைச் சாதிக்க வேண்டும். அது தாம் தமது நாட்டில் வைத்திருக்கும் பற்றாகும் என நம்பினர். அதற்கான ஒரு பெண்ணை சோவியத் விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தின் தலைவர் தேடினார்.

சோவியத் விண்வெளி ஆராய்ச்சிக் கூடம் 30 வயதுக்குட்பட்டவராகவும், 170 சென்ரிமீற்றருக்குக் குறைந்த உயரமுடையவராகவும், 70 கிலோ கிராமுக்குக் குறைந்த நிறையுடையவராகவும், உடலுறுதியுள்ளவராகவும் இருக்க வேண்டும் என விண்வெளிப் பயணத்துக்கான தகைமைகளை வெளியிட்டது. இவ்வாறான தகைமையுடைய 58 யுவதிகள் பரீட்சிக்கப் பட்டார்கள். அவர்களுள் 40 யுவதிகள் முதற்கட்டப் பரீட்சையில் சித்தியடைந்தார்கள். தேர்வுகள் தொடர்ந்தன. ஒருகட்டத்தேர்வில் மூவர் தெரிவானார்கள். அவர்களுள் பரசூட்டில் இருந்து குதித்தலில் வலண்ரீனா வெற்றி பெற்றார். விண்வெளியில் புவியைச் சுற்றிவர அவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்



என்பதை அதிகாரபூர்வமாக தலைமை அலுவலகம் அறிவித்தது.
சோவியத் விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் பணியாற்ற அவருக்கு வாய்ப்புக் கிட்டியது. விண்வெளி வீரர்கள் இராணுவப் பயிற்சிகளை முடித்திருக்க வேண்டும். முதலில் விமானம் ஓட்டக் கற்றுக்கொண்டார். மோட்டார் பொறியியலையும் கற்றுக் கொண்டார்.

கடினமான பயிற்சியினைத் தொடர்ந்தார். விண்வெளிச் சூழல் கல்வியுடன் விண்வெளியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வது பற்றியும் கற்றுக் கொண்டார். விண்வெளியில் தன்னந்தனியாகச் சமாளிக்க வேண்டிய பல விஷயங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியிருந்தது. விண்ணில் வலம் வருவது எப்போது எனக் கனவு கண்டார். 1963 ஜூன் 16ந் திகதி காலை "வாஸ்ரொக் - 6" விண்கலம் வானை நோக்கி விரைந்தது. வலண்ரினா 48 முறை புவியைச் சுற்றி வலம் வந்தார். 17,18 ஆகிய திகதிகளில் "வாஸ்ரொக் - 6"ல் இருந்தவாறே அற்புதமான படங்களை எடுத்தார். 19ம் திகதி "வாஸ்ரொக் - 6"ல் இருந்து விடுபட்டு சுமார் 20.000 அடி உயரத்தில் இருந்து பரசூட் மூலம் கசகஸ்தானின் கரகண்டா அருகே தரையிறங்கினார். முழு உலகமுமே அதிசயித்து நின்றது. வலண்டினா தெரஷ்கோவா. விண்வெளியில் 70 மணி 50 நிமிடங்களைக் கழித்துள்ளார். அத்துடன் விண்வெளியில் பயணித்த முதற்பெண்மணி என்ற புகழையும் தட்டிக்கொண்டார்.

1963 நவம்பரில் விண்வெளி வீரரான அண்ரோனியன் நிக்கோல்யேவைத் திருமணம் செய்தார். அவர்களுக்கு யெலெனா என்ற பெண்குழந்தையும் பிறந்தது.

## 15. கிரகணம் என்பதென்ன?


ஒரு நாள் வானொலி செய்தியொன்றை ஒலிபரப்பியது. "இன்று சந்திர கிரகணம் ஏற்படும்." என்பதுதான் அச்செய்தி. சந்திரோதயம் வந்து விட்டது. அதன் ஒருபுறம் பிறைவடிவில் இருளாகத் தெரிந்தது. மெதுவாக வளர்ந்து வளர்ந்து சென்றது. பின்னர் முழுநிலவும் மறைந்தது. எவ்வாறு மெதுவாக இருள் சூழ்ந்து கொண்டதோ அவ்வாறே கலையத் தொடங்கி முழு நிலாத் தோன்றியது. இதுதான் கிரகணமாம். எனக்கு அதிசயமாக இருந்தது.

எங்கள் பாட்டி சமய அனுட்டானங்களைச் செய்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. விஞ்ஞான ஆசிரியரிடம் கேட்டேன். அவர் கொலம்பஸின் கதையைச் சொன்னார். பின்னர் விஞ்ஞானபூர்வமான விளக்கத்தையும் கூறினார். கிரகணம் ஒரு வானியல் நிகழ்வாகும். சூரியன், சந்திரன், பூமி ஆகியன நேராக நிலைகொள்ளும்போது கிரகணங்கள் ஏற்படுகின்றன.

கிரகணங்கள் ஏற்படுவதற்குச் சில காரணிகள் தேவை. சூரியன், சந்திரன், பூமி ஆகியன ஒரு நேர்கோட்டில் நிலைகொள்ள வேண்டும். சூரியனின் ஒளிக்கதிர்கள் சந்திரன்மேல் படியும். அப்போது அதன் நிழல் பூமியில் விழும். அவ்வாறு நிழல் விழும்போது அதனைக் கிரகணம் என அழைப்பர். சூரியனுக்கும் பூமிக்கும் இடையே நிலவு செல்லும்போது சூரிய கிரகணம் ஏற்படும். அப்போது சூரியனின் ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ மறைக்கப்படும். ஒரு ஆண்டில் இரண்டிலிருந்து ஐந்து வரையான சூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிரகணங்கள் நிகழலாம். சில ஆண்டுகளில் முழுக் கிரகணமும் ஒன்றுகூட நிகழாமலும் போகலாம்.

சூரிய கிரகணத்தை இருவகைப் படுத்துவர்.

1) முழுச் சூரிய கிரகணம்: சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் நிலைகொள்ளும் போது அதன் நிழல் பூமியில் முழுமையாக விழும்போது முழுச் சூரிய கிரகணம் உருவாகும்.

2) சந்திரனின் நிழல் பூமியின் ஒரு பகுதியை மறைத்துச் சென்றால் அதனைப் பாதிச் சூரிய கிரகணம் என்றழைப்பார்கள்.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் வரும்போது பூமியின் நிழல் சந்திரன்மேல் விழும். அதனால் சந்திர கிரகணம் ஏற்படுகிறது. அதனைச் சந்திர கிரகணம் என்பர். இரண்டு படங்களும் கிரகணங்களை விளக்கும் படங்களாகும்.

சந்திர கிரகணங்களையும் இருவகைப் படுத்துவர்.
1) முழுச் சந்திர கிரகணம்: சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி நிலைகொள்ளும் போது அதன் நிழல் சந்திரன்மேல் முழுமையாக விழும்போது முழுச் சந்திர கிரகணம் உருவாகும்.
2) பூமியின் நிழல் சந்திரனின் ஒரு பகுதியை மறைத்துச் சென்றால் அதனைப் பாதிச் சந்திர கிரகணம் என்றழைப்பார்கள்.

கிரகணங்களால் பல நாட்டுப் போர்கள் முடிவுக்கு வந்துள்ளன. மத்திய கிழக்கில் இரு நாடுகளுக்கிடையில் ஐந்து வருடங்களாகப் போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனை என்று இரு நாடுகளும் போர் செய்வதில்லை என்று ஒற்றுமையாயின் மகா பாரதப் போரிலும் இவ்வாறே நடந்துள்ளதை அறியலாம்.

## 16. அதிசயமான சந்திர கிரகணம்

இவ்வுலகில் அதிசயங்கள் நிறையவே உள்ளன. அவற்றில் கிரகணமும் ஒன்று. உலகம் தோன்றிய நாள் முதல் கிரகணங்கள் ஏற்படுகின்றன. இக் கிரகணம் நிகழ்வதற்குப் பல நாடுகளின் மக்கள் பல்வேறு கதைகளைக் கூறுவார்கள். இந்து சமயத்தில் கற்பனையோடு சேர்ந்த கதைகள் உண்டு.

சூரியனையும், சந்திரனையும் இராகு என்னும் பாம்பு விழுங்குவதாக இந்துசமயப் புராணங்கள் கூறுகின்றன. தேவர்கள் நீடு வாழ்வதற்காக அமிர்தம் வேண்டி நின்றார்கள். அமிர்தம் எங்கே கிடைக்கும். திருப்பாற் கடலைக் கடைந்தால் அமிர்தம் கிடைக்கும் என விஷ்ணு கூறினார்.



தேவர்கள் மட்டும் கடையமுடியாது. ஆதலால் இவ்வுலகில் உள்ள அசுரர்களையும் அழைத்தார்கள். மகாமேரு மலையை மத்தாகப் பயன்படுத்தினார்கள்.
ஆதிசேடன் என்ற பாம்பை கயிறாகப் பயன் படுத்தினார்கள். தேவர்கள் ஒரு புறம் நின்றார்கள். அசுரர்கள் மறுபுறம் நின்றார்கள். திருப்பாற் கடலைக் கடையும் நிகழ்ச்சி நடந்தது. மத்து விரைந்து சுழன்று அசைந்தது. சுறுசுறுப்பாக இரு பகுதியினரும் செயற்பட்டனர்.

மலை சுழன்று விரைந்து அசைந்தது. திருப்பாற் கடல் கடையப்பட்டது. அமிர்தம் உருவாகிக் கொண்டு வந்தது. ஆதிசேஷனுக்கு வலித்தது. தாங்கமுடியாத வலியினால் ஆதிசேஷன் விஷத்தைக் கக்கிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதனைத் தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். அவர் உடனே அந்த விஷத்தைக் கையிலேந்தி விழுங்கினார். அவரது மனைவி உமாதேவியார். அவர் ஓடோடி வந்தார். சிவனாரின் தொண்டையை அழுத்திப் பிடித்தார். விஷம் கீழிறங்க வில்லை. தொண்டைக் குழியோடு நின்றுவிட்டது. சிவனின் தொண்டையில் விஷம் இருந்தது. அதனால் அவரது தொண்டை நீலம்பாரித்துவிட்டது.

அமிர்தம் கிடைத்துவிட்டது. தேவர்களுக்கு மட்டும் அமிர்தம் கிடைக்க வேண்டும். அசுரர்களுக்குக் கிடைக்கக் கூடாது. கிடைத்தால் அவர்கள் சாகா வரம் பெற்றுவிடுவார்கள். என்ன செய்வது. தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டார்கள். மகாவிஷ்ணு மோகினி வடிவில் வந்தார். அசுரர்கள் அந்த அழகியின் அழகில் மயங்கிக் கொண்டிருந்தார்கள். இராகு என்ற அசுரன் தேவர்கள் போல் மாறுவேஷத்தில் வந்தார். தேவர்களோடு கலந்து கொண்டார். அவரை யாரும் அடையாளம் காணவில்லை. ஆனால் சூரியனும் சந்திரனும் நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தனர். மெதுவாக விஷ்ணுவிடம் கூறிவிட்டார்கள்.

தேவர்களுக்கு அமிர்தம் பரிமாறப் பட்டது. இராகுவுக்கும் கொடுபட்டது. அவர் குடிப்பதற்கு முயற்சிக்கையில் மோகினி வடிவிலிருந்த மகாவிஷ்ணு இராகுவின் கழுத்தைத் துண்டம் செய்தார். வாய்க்குள் அமிர்தம் சென்றிருந்தது. அதனால் தலைப்பகுதி உயிரோடிருந்தது. உடல் கேதுவாக மாறியது. இராகுவும் கேதுவும் சேர்ந்து கொண்டன. சூரியனையும் சந்திரனையும் விழுங்கிவிடச் சபதமெடுத்தன. இன்றுவரை அவை சந்திரனையும், சூரியனையும் விழுங்கும் நிகழ்ச்சி காலத்துக்குக் காலம் நடைபெறுகிறது. அதுதான் கிரகணம். என்று புராணம் கூறுகிறது.

ஆனால் விஞ்ஞானம் அறிவுபூர்வமாக விளக்குகிறது. சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் சந்திரன் வரும்போது சந்திர கிரகணம் தோன்றும். பூமியின் நிழல் சந்திரன்மேல் விழும். அதனால் சந்திர கிரகணம் ஏற்படுகிறது. அதேபோல் பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் வரும்போது சூரிய கிரகணம் தோன்றும். இவை மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும்போதுதான் கிரகணம் ஏற்படும் என்று அறிவு பூர்வமாகக் கூறுகிறது.

## 17. சந்திரக் கடவுள்




உலகில் உள்ள மக்கள் கிரகங்களைக் கடவுளாகப் போற்றி வணங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனைக் கடவுளாக வணங்குகின்றனர். அதே போல் நமது பூமிக்குச் சொந்தமான சந்திரனைப் பலநாடுகள் கடவுளாகப் போற்றி வணங்குகின்றன. தென்னாசிய நாடுகளிலும், இந்து சமயத்தின் இதிகாச புராணங்களிலும் சந்திரனுக்கு முக்கிய இடமுண்டு. பலநாடுகளின் இனங்கள் தாங்கள் சந்திரனின் நேரடி வாரிசுகள் எனக்கருதுகிறார்கள். இப்படத்தில் உள்ளது சந்தினுக்குரிய கோயில். பபிலோனிய, சுமேரிய நாகரீகக் காலங்களில் சந்திரனுக்குக் கோயில்கள் இருந்தன.



கி.மு.2100ல் மொசப்பெத்தேமியாவின் "சிக்குறாற்" கோவிலில் சந்திரக் கடவுளின் திருவிழாக் காட்சி படத்தில் காட்டப் பட்டுள்ளது.

ஊர்வலமாக சந்திரக்கடவுள் அவரது கோயிலான "சொர்க்கத்தின் மலை"க்கு எடுத்துச் செல்லப்படுகிறார்.. பிரித்தானிய அரும் பொருட் காட்சியகத்தில் உள்ள சந்திரக்கடவுளின் கோயிலின் வரைபடம் உள்ளது. அதனைப்படத்தில் காணலாம்.



"சின்" என அழைக்கப்பட்ட சந்திரக் கடவுள் மத்திய கிழக்கு நாடுகளில் போற்றப்பட்டுள்ளதை வரலாறுகள் கூறுகின்றன. ஏப்ரகாம் காலத்தில் சந்திரக்கடவுளின் வணக்கமுறை பரவி யிருந்தது. ரோமானியர்கள் சந்திரனை "தயானா" என அழைத்து வணங்கினார்கள். வேட்டைக்குச் செல்லும்போது காவற்கடவுளாகவும். வேட்டைக்கு உதவும் பெண்கடவுளாகத் தயானா விளங்கியது. படத்தில் தயானா தனது வேட்டை நாயுடன் காணப்படுகிறார்.

தயானா இத்தாலியரின் வனதேவதையாகும். ஜூபிற்றர் என்ற சீயஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் பிறந்தன. மூத்தது ஆண். அதற்கு அப்பலோ என்று பெயர் சூட்டினார்கள்.
சந்திரனை வைத்தே நாட்காட்டியான கலண்டர் உருவாகியது. முஸ்லிம்கள் சந்திரனை வைத்தே தமது நோன்புப் பண்டிகையைக் கணித்துக் கொண்டாடுகிறார்கள். சந்திரன் சக்திமிக்க கடவுளாக பலநாட்டு மக்கள் நினைக்கிறார்கள். சந்திரனாற்தான் பூமியில் வற்றுப் பெருக்கு ஏற்படுகிறது. சந்திரோதயத்தின் போது கடலலை பொங்கியெழுந்து கரையில் மோதும்.
சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் சந்திரனை "திங்களைப் போற்றுதும்" என வாழ்த்துகிறார்.

## 18. சந்திரன் புரியாத புதிர்

இரவு நேரத்தில் சந்திரனின் ஒளி நமக்கு இன்பத்தைத் தருகிறது. நிலவினில் ஆடிப்பாட யாருக்குத்தான் ஆசையில்லை. நிலாச்சோறு உண்பதில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை. குழந்தை உணவினை உண்ண அடம்பிடிக்கும்போது நிலாவைக் காட்டி ஊட்டுவர். நிலவினைப் பெண்ணாகக் கற்பனை செய்து கவிஞர்கள் கவிதைகளை வடிப்பார்கள். சூரியனே அனைத்துக் கிரகங்களுக்கும் ஒளியினைக் கொடுக்கிறது. சந்திரனுக்குத் தனியே ஒளியில்லை. சூரியனின் ஒளியைப் பெற்றே நமக்குக் குளிர்ந்த ஒளியைக் கொடுக்கிறது.



நமது பூமி அழகானது. அதற்கென ஒரு சந்திரன் உள்ளது. சந்திர ஒளி குளிர்ச்சியானது. பூமியில் இருந்து சந்திரனைப் பார்த்தால் சந்தோசமாக இருக்கும். நிலவில் இருந்து பேசுவதற்கு ஆவல். சந்திரன் ஒரு புதிராகவே உள்ளது.

சந்திரன் எவ்வாறு தோன்றியது? என்பது இதுவரைப் புரியாத புதிராகத்தான் உள்ளது. பூமி உருவாகிய புதிதில் செவ்வாய் போன்ற இன்னுமொரு கோள் பூமியோடு மோதியது. அதனை இப் படத்தில் காணலாம். அம்மோதலால் பாரிய சிதைவுகள் வெளியிடப்பட்டு வீசப்பட்டன. துகள்கள் விண்வெளியில் சுழற்சியுற்ற நிலையிலிருந்தன. பூமியைச் சுற்றி ஒரு வளையமாக வலம்வந்தன. காலகதியில் துகள்கள் ஒன்றோடொன்று ஈர்க்கப்பட்டு ஒன்றாயின. சந்திரனாக இன்றைய உருவில் பூமியை வலம் வந்து கொண்டிருக்கிறது என விஞ்ஞானிகள் கருது கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானில் அதிசயிக்கத்தக்கதாக சந்திரனின் பவனி விளங்குகிறது. சந்திரனின் உருவத்தில் மாற்றம் ஏற்படுவது ஒரு அதிசயமான நிகழ்வாகும். உண்மையில் சந்திரனின் உருவத்தில் மாற்றம் ஏற்படுவதில்லை. பூமியின் நிழல் சந்திரனை மறைக்கிறது. நன்றாகக் கூர்ந்து பார்த்தால் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

சூரியனதும், புவியினதும் சுற்றுகைக்கேற்ப சந்திரனின் தோற்றம் நமக்குத் தென்படும். சூரியனும் சந்திரனும் பூமியின் எதிர்ப்புறம் இருக்கும்போது முழுநிலவாக பூரணைச் சந்திரனாகத் தெரியும். அதேபோல் சூரியனும் சந்திரனும் ஒரே புறம் இருக்கும் போது அமவாசையாக இருக்கும். இவை சூரியனின் ஒளி சந்திரனில் விழும் அளவினால் ஏற்படுகிறது. நம்முன்னோர்கள் சந்திரனின் இந்த மாற்றங்களைக் கணித்தே கலண்டர்களை (நாட்காட்டிகளை) கணித்தார்கள். பபிலோனியர்கள் சந்திரனைக் கொண்டு காலத்தைக் கணித்தார்கள்.

சந்திரனைக் கடவுளாகவும் பண்டைய மக்கள் போற்றியுள்ளனர். சந்திரன் பூமியிலிருந்து 383,000 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. அதன் விட்டம் 3,475 கிலோ மீற்றராகும். சந்திரனில் பவன அமுக்கம் இன்மையால் வாயுக்களும் இல்லை. பூமியில் 100 கிலோ எடை சந்திரனில் 45 கிலோவாக இருக்கும். நாம் விழுந்தால் இருகைகளாலும் தரையைத் தொட்டு எம்பினால் மேலே எழுந்துவிடலாம். கால்களை நிலைக்குத்தாக ஊன்ற முடியாதிருக்கும். கால்கள் வழுக்கிக் கொண்டிருக்கும். சந்திரன் புவியைச் ஒருமுறை முழுமையாகச் சுற்றிவர 27.3 நாட்கள் எடுக்கின்றது. ஆனால் கேத்திர கணித கணிப்பின்படி புவி-சந்திரன்- ஞாயிறு சுற்றுகையில் வேறுபாடு உண்டு. அதனால் சந்திரன் புவியைச் சுற்றிவர 29.5 நாட்கள் செல்கின்றன.


சந்திரன் இயற்கையில் மிகவலுவான சக்தியாக உள்ளதை அவதானிக்கலாம். சந்திரனின் ஆதர்ஷண சக்தி அபரிமிதமானது. வானம் தெளிவாக உள்ள நேரத்தில் அவதானியுங்கள். சந்திரனின் ஈர்ப்புச் சக்தியினால் புவியின் சமுத்திரப் பரப்பு ஆர்ப்பரிக்கும்.


சந்திரன் பவனிவருவதைப் பாருங்கள். மனதைக் கொள்ளைகொள்ளும். அழகுக் காட்சியாக இருக்கும். கவிஞனின் உள்ளத்தில் கவிதையைப் பொங்கச் செய்யும். சிறுவர் உள்ளங்களில் களிப்பை ஏற்படுத்தும். கிழக்கில் சந்திரோதயக் காட்சி மனதைக் கொள்ளை கொள்ளும். கடலை ஆர்ப்பரிக்கச் செய்யும். கடல் பேரலைகளைத் தள்ளி ஆரவாரம் செய்யும். வானத்தில் நட்சத்திரக் கூட்டத்துடன் சந்திரன் பவனிவரும். குளிர்நிலவைப் பொழியும்.

சந்திரனின் ஈர்ப்புச் சக்தியினால் புவியின் சமுத்திரப் படுக்கைகளில் வற்றுப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பெருக்கு உருவாகிறது. சந்திரனைப் பெண்ணாக வர்ணிப்பார்கள். சந்திரனுக்கு மட்டுந்தான் மனிதன் சென்றுவந்துள்ளான். இன்றுவரை அமெரிக்காவின் விண் வெளிக்கலமான அப்பலோ மூலம் ஆம்ஸ்ரோங், எட்வின் அல்ரின் ஆகியோர் சந்திரனில் காலடிபதித்து வந்துள்ளனர்.
அவர்கள் தங்கள் பயணத்தின் போது சில எச்சங்களை வைத்துவிட்டு வந்தனர். நான்கு பக்கங்களைக் கொண்ட சிறு இதழ், ராஜாளி அல்லது கழுகின் இறகு, ஒரு பைபிள், விண்வெளி உடையுடனான சிறு மனிதனது





உருவம் அத்துடன் "உலகத்தின் மனிதர்களாகிய நாங்கள் எல்லா மனுக்குலத்துக்கும் சமாதானம் வேண்டி ஜூலை 1969 ல் இந்த சந்திரனில் வந்து காலடி பதித்து இச்சின்னங்களைவிட்டுச் செல்கிறோம்" என எழுதிய வாசகம் கொண்ட அடையாளத்தையும், வைத்துவிட்டு வந்தனர்.



அவர்களது காலடிப்பதிவு என்றும் அழியாது இருக்கும். ஏனெனில் வளிமண்டலத் தாக்கம் இல்லை. அதனால் காற்று வீசாது. அங்கிருந்து 382 கிலோ கிராம் எடையுள்ள பாறைப் படிவுகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விரும்பிப் போற்றும் பெரியாராக விளங்குபவர் இலவசக் கல்வியின் தந்தை சி.டபிள்யு.டபிள்யு கன்னங்கரா அவர்களே ஆகும். தான் இளமையில் அனுபவித்த துன்பங்களையும். துயரங்களையும், தனக்குப் பின் வரும் சமூகம் அனுபவிக்கக் கூடாது என்று யார் நினைத்துச் செயற்படுகிறார்களோ அவர்கள்தன் உயர்ந்த மனிதர்கள். இதனைச் செயலில் காட்டிய தியாகிதான் சி.டபிள்யு.டபிள்யு கன்னங்கரா அவர்கள். அவரைப் பற்றி நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும்.

"கொடிது எது"? என ஔவைப் பிராட்டி கேட்டார். அவரே பதிலையும் கூறினார். "கொடிது கொடிது வறுமை கொடிது. அதினிலும் கொடிது இளமையில் வறுமை" என விளக்கினார். வறுமையில் வாடி வதங்கியவர்களுக்குத்தான் வறுமையின் உண்மை நிலை புரியும். அதனை நன்கு புரிந்தவர்தான் திரு. சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா அவர்கள்.

அந்நியர் ஆட்சியின் கீழ் பல இன்னல்களை நமது மக்கள் அனுபவித்தனர். அவர்களது கெடுபிடிக்குள் சிக்கித் தவித்தார்கள். காலி மாவட்டத்தில் பிறந்த கன்னங்கரா அவர்கள் புலமைப் பரிசில் பெற்றுக் கற்றார். வறுமையான குடும்பத்தில் பிறந்த சி.டபிள்யு.டு. கன்னங்கரா அவர்கள் கல்வி கற்பதில் அதிக ஆர்வமும் திறமையும் மிக்கவர்.

காலி ரிச்மண்ட் கல்லூரியில் புலமைப்பரிசில் மூலம் உயர் கல்வி கற்கும் காலத்தில் அவர் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ், தான் அனுபவிக்கும் துன்பங்களைத் தனது சந்ததியினர் அனுபவிக்க விடக் கூடாது, என்ற உயர் இலட்சியத்துடன் செயற்பட்டார். தனது கல்வியை முடித்துக் கொண்ட அவர் 1910ல் காலி ரிச்மண்ட கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் மொறட்டுவையில் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1915ம் ஆண்டு இனக்கலவரத்தில் சிறையில் அடைக்கப்பட்ட தலைவர்களை மீட்கும் போராட்டத்தில் பங்கு கொண்ட கன்னங்கரா அவர்கள் அரசியலில் ஈடுபாடு காட்டினார்.

1923 இல் சட்டவாக்கக் கழகத்திற்கு உறுப்பினராக தெரிவாகினார். 1930 இல் தேசிய காங்ரஸ் தலைவரானார். அவர் தொடர்ந்து சிங்கள மகா சபையின் உப தலைவராகவும் பணியாற்றினார்.

1931 இல் காலித் தொகுதியில் போட்டியிட்டார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அபேட்சகரை விட இருமடங்கு வாக்குகள் கூடுதலாகப் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுக் கழக உறுப்பினராக தெரிவானார்.

அரசுக் கழகத்தில் கல்வி அமைச்சர் பதவியை வகித்து இலங்கையருக்கு அளப்பெரும் சேவையையாற்றினார்.

1946 ஆம் ஆண்டு ஒக்டோபர் 6ம் திகதி கன்னங்கரா அவர்களால் கொண்டுவரப்பட்ட இலவசக் கல்விச் சட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டதால் இலங்கையின் கல்வித்துறை புதிய பரிணாமம் கண்டது. திறமையிருந்தும் பணமில்லாத காரணத்தினால் ஒதுக்கப் பட்டிருந்த கிராமப்புற மாணவர்களும் கல்வி கற்கும் வாய்ப்பு அதனால் கிட்டியது.



பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம்வரை இலவசக் கல்வியைப் பெறும் வாய்ப்பு இலங்கை மாணவர்களுக்கு கிடைத்தது. மேலும் தேர்தல் தொகுதி தோறும் அன்னார் மத்திய கல்லூரிகளை நிறுவி கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். நாடு பூராவும் இத்தகைய கல்லூரிகள் கட்டப்பட்டன. புலமைப் பரிசில் பரீட்சையை அறிமுகம் செய்து திறமைவாய்ந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி அக்கல்லூரிகளில் பயிலும் வாய்ப்பளித்தார்.

இன்று இலவசக்கல்வித் திட்டத்தினால் நமது மக்கள் பெரு நன்மையடைகிறார்கள். கிராமப்புறத்துச் சிறார்கள் அதன் பயனை அனுபவிக்கிறார்கள்.

கல்வியை புத்தகங்களுக்கு மாத்திரம் வரையறுத்து விடாமல் மாணவர்களின் ஆளுமைவிருத்தியை மேம்படுத்தும் திறமைகளை வளர்த்து கொள்வதற்குரிய வசதிகளையும் பெற்றுக் கொடுத்தார்.

இலவசக் கல்வியால் பயனடையும் நாம் அனைவரும் திரு. கன்னங்கர அவர்களுக்கு நன்றியுடையோராய் இருக்க வேண்டும். அதனாலன்றோ அவரை இன, மத, மொழி பேதமின்றி அனைவரும் நினைவில் கொள்கிறோம்.

## 20. புதுமைப்பெண் கல்பனா சாவ்லா

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்றொரு காலம் இருந்தது. அதனைத் தவிடுபொடியாக்கிய பெருமை பல பெண்களுக்கு உண்டு. இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் இறைவன் படைப்பை ஆணாகவும் பெண்ணாகவும் படைத்துள்ளதை அறிவு பூர்வமாக ஏற்றுக் கொண்டது. அணுவில் புரோத்திரன், எலக்ரோன், நியுற்றோன் இருக்கிறது. இதனை இந்து சமயம் பதி, பசு, பாசம் எனக் கண்டது. அதனால் அர்த்தநாரிஸ்வரராக இறைவனை இந்து சமயம் கண்டது. ஆணும் பெண்ணும் சரிசமம் என்பதற்கான அடையாளமாக இந்த அர்த்தநாரீஸ்வர அடையாளம் கொள்ளப்படுகிறது. பெண் என்ற சொல்லுக்குச் சக்தி என்றும் பொருள் கொள்ளலாம். பெண்களால் எதனையும் சாதிக்க முடியும் என்பதனைப் பல பெண்கள் நிரூபித்துள்ளனர்.

1963 ஜூன் 16ந் திகதி காலை "வாஸ்ரொக் - 6" விண்கலம் வானை நோக்கி விரைந்தது. வலண்ரினா 48 முறை புவியைச் சுற்றி வலம் வந்தார். முழு உலகமுமே அதிசயித்து நின்றது. வலண்டினா தெரஷ்கோவா. விண்வெளியில் 70 மணி 50 நிமிடங்களைக் கழித்துள்ளார். அத்துடன் விண்வெளியில் பயணித்த முதற்பெண்மணி என்ற புகழையும் தட்டிக்கொண்டார்.

அதேவழியில் சாதிக்கும் திறமையை கல்பனா சாவ்லா நிரூபித்துக் காட்டினார். மீண்டும் ஒரு முறை கல்பனா சாவ்லா விண்வெளியில் பறந்து சாதனை படைத்தார். கல்பனா சாவ்லா 1961ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி ஹரியானா மானிலத்தில் கர்னால் எனும் ஊரில் பிறந்தார். தந்தை பனார்சிதாஸ் அவர்களுக்கும் தாய் சன்யோகிதாதேவி அவர்களுக்கு மகளாகப் பிறந்தார். இவர் தனது பள்ளிப்படிப்பை அதே ஊரில் உள்ள தாகூர் சாந்திநிகேதனில் கற்றார். பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் படித்து 1982 இல் பொறியியல் துறையில் பட்டம் பெற்றார்.
கல்பனா சாவ்லா இந்தியாவில் பிறந்து வளர்ந்து விண்வெளியில் பறந்து சாதனை புரிந்த முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றவர் ஆவார். விண்வெளியில் பறந்த இரண்டாவது இந்தியர் என்ற பெருமையும் இவருக்கே உண்டு. கல்பனா இளம் வயதிலிருந்தே விண்ணில் பறக்க வேண்டும் என்ற கனவுடன் வளர்ந்தார். எப்போதும் நட்சத்திரம், கிரகங்கள், நிலா, விண்வெளி என சிந்திக்கும் இயல்பை வளர்த்துக் கொண்டவர். கனவு நிஜமாகும் என்பது உண்மைதான் போலும். இதனால் இவரால் பல சாதனைகளை சாதிக்க முடிந்தது

அமெரிக்கா சென்று டெக்ஸஸ் பல்கலைக்கழகத்தில் படித்து 1984ல் ஆராய்ச்சித்துறையில் பட்டத்தினைப் பெற்றார். நாசாவின் "ஏம்ஸ் ரிசர்ச் சென்ரரில்" பணியில் சேர்ந்தார். அமெரிக்கப் பிரஜையும் ஆனார்.

அங்கு ஜேம் ஹரிஷன் எனும் விமானப் பயிற்சியாளரைத் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார்.

விண்வெளித்துறையைப் பொறுத்தவரை கல்பனாவின் சாதனைகளும் சேவைகளும் மிகப்பல. 1994ம் ஆண்டு நாஸாவில் விண்வெளி



ஆராச்சியாளராக பணியில் ஈடுபட்டார். "எஸ்.ரீ.எஸ் - 87" கொலம்பியா விண்வெளி ஓடத்தில் 1997 காலப்பகுதியில் பயணம் செய்து பூமியை 252 முறைகள் சுற்றி வந்தார். இதில் கல்பனா சாவ்லா 376 மணிநேரம் 34 நிமிடங்கள் பயணித்து 6.5 மில்லியன் மைல்களை கடந்துள்ளார். இவ்வாறு கல்பனா சாவ்லா பல சாதனைகளைப் புரிந்து பலருக்கு முன்னுதாரணமாக வாழ்ந்தார்.

கொலம்பியா விண்வெளி ஓடத்தில் ஆராய்ச்சிக்காக ஏழுபேர் அடங்கிய குழுவில் பயணித்த கல்பனா சாவ்லா, துரதிருஸ்டவசமாக, கொலம்பியா விண்வெளி ஓடம் தரையிறங்கும் முன்னரே வெடித்துச் சிதறியதில் தன்வாழ்வை முடித்துக் கொண்டார். அவரது உடல் அழிந்தது. ஆனால் சாதனைகளால் இன்றும் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

## 21. பெண்ணிற் பெருந்தகை - அன்னை திரேசா

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள"? என்று திருவள்ளுவர் வினாவினார். அந்த வினாவுக்கு சான்றாகத் திகழ்பவர்தான் அன்னை திரேசா. பிறர் துன்பத்தைத் தனது துன்பமாக மதித்துச் சேவை செய்பவர்கள் மிகச்சிலரே. அவர்களில் அன்னை திரேசா போற்றப்படும் பெருந்தகைப் பெண்ணாவார். அன்னை திரேசா அல்பேர்னியாவில் பிறந்து இந்தியாவுக்கு வந்து சேவைசெய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கத்தா நடைபாதையில் அநாதைகளாக உலாவரும் மனிதர்களைக் கண்டு இரக்கம் கொண்ட அன்னை அதற்காகத் தனியிடம் அமைக்க வேண்டி நகராட்சியிடம் கேட்டுக் கொண்டதாகவும் அறியக்கிடக்கிறது. தொழுநோயாளர்களை அரவணைத்து அன்னை ஆற்றிய தொண்டு தெய்வத்துக்குச் சமனாக உயர்த்திக் காட்டியது. பங்களாதேஷில் இருந்து அகதிகளாக வந்து குவிந்த மக்களுக்கு அன்னை ஆற்றிய தொண்டினால் உலகமெங்கும் இருந்தும் பாராட்டுக்கள் குவிந்தன.

அன்னை தெரேசா அல்பேர்னியா நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1910ம் ஆண்டு ஆகஸ்ற் 26ல் பிறந்தார். அவரது பெற்றோர் இளமையில் வைத்த பெயர் அக்னஸ் கொயின்ஷா பெஜாக்கியூ ஆகும். சிறு வயது தொட்டே உலக மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு வளர்ந்தார். இறையுணர்வு மிக்கவராகவும் திகழ்ந்தார்.

இந்திய மிஷன் கல்கத்தாவில் செய்யும் பணியைத் தெரிந்து கொண்ட சிறுமியான அக்னஸ்க்குத் தானும் அதுபோன்ற செயல்களில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது.

லொரேட்டா கன்னிகா மடத்தைப் பற்றிய விபரங்களும் அவரது ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தது. லொரேட்டா கன்னிகா மட உறுப்பினரானதன்பின் ஆன்மீகத்துறையில் கல்வி கற்க அயர்லாந்து சென்றார்.

கல்கத்தாவில் புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் 1929ல் ஆசிரியையாகப் பணியைத் தொடங்கினார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அக்னஸ் கன்னிகா பெண்களுக்கான கட்டுப்பாடுகளை ஏற்று தமது வாழ்நாள் முழுவதும் ஏயேசு பிரானுக்கு அர்ப்பணிக்கும் ஞானஸ்த்தானத்தினால் தெரேசாவாக ஏற்றம் பெற்றார்.

1948ல் எட்னாவில் வைத்தியத் தாதிப்பயிற்சியினைப் பெற்றுக் கொண்டார். 1949ல் மோதிஜில் என்ற சேரிப்பகுதியில் "உங்களுக்குச் சேவை செய்வதற்காகவே வந்துள்ளேன். உதவி செய்ய என்னை அழைப்பீர்களா"? என்று கேட்டுக் கொண்டே சுற்றுப் புறத்தைச் சுத்தம் செய்யலானார்.

1950ல் அன்னை திரேசாவின் தலைமையில் மிஷனரிஸ் ஒவ் சரிட்டி இல்லம் உருவாக்கப் பட்டது. அன்னையின் தூய்மையான பணிக்கு எடுத்துக் காட்டாக நீலநிறக் கரைபோட்ட வெள்ளைக் கைத்தறிச் சேலையை அணியலானார். அன்னையிடம் முதன்முதல் தீட்சை பெற்ற சுபாஷினிக்கு தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்பெயரான அக்னஸ் என்பதையே சூட்டி மகிழ்ந்தார்.

பத்திரிகையாளர் குஷ்வந்த்சிங் அன்னையைப் பற்றி குறிப்பிடுகையில் ஏழை நோயாளர்களுக்கு அவர் வெறும் உபதேசம் செய்பவரல்லர். அவர் இணைந்து அவர்களுடன் தமது வாழ்நாட்களை அவர்களுக்காகச் செலவிடுபவர். தமக்கென்று எதுவும் சேர்த்து வைக்காமல் எளிய வாழ்க்கை நடத்துபவர். என்று உண்மை நிலையை வெளிப்படுத்தினார்.
தொண்டின் இலக்கணமாய் திகழ்ந்தவர் அன்னை திரேசா. இன, மத, மொழி வேறுபாடின்றி எல்லோராலும் போற்றத்தக்க மனிதராக உயர்ந்திருப்பவர். அன்னையின் அன்புக் கரத்தைப் பார்த்ததுமே பலர் அவரது சீடர்களாக அன்னையின் வழியில் சென்றனர்.

1984ல் இலங்கைக்கு அன்னை திரேசா வந்தபோது செங்கம்பள வரவேற்பு அளிக்கப் பட்டது. 1962ல் அன்னையின் சேவையைப் பாராட்டி இந்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவித்தது. 1979ல் அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசும், 1980ல் இந்தியாவின் அதியுயர் விருதான பாரதரத்னா விருதும், 1983ல் பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத்திடமிருந்து கௌரவ விருதும் கிடைத்தன.

1997ல் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் அமெரிக்காவின் கௌரவ பிரஜாவுரிமையை வழங்கினார். 1983ல் அன்னையின் உடல்நிலை பாதிக்கப் பட்டது. இதய நோய் கண்டு பேஸ்மேக்கரும் பொருத்தப்பட்டது. தனது உடல்நிலையையும் பொருட்படுத்தாது அறப்பணிகள் தொடரவேண்டும் என்பதில் குறியாகவிருந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994ல் தமது பொறுப்புக்களை மற்றவரிடம் ஒப்படைக்க விரும்பினார். ஆனால் 126 நாடுகளில் 4400 கன்னிகா பெண்களும், சகோதரர்களும் கொண்ட குழு அன்னையையே சுப்பீரியர் ஜெனரல் பதவியைத் தொடருமாறு கேட்டுக் கொண்டனர்.

இளவரசி டயானாவின் மரணச் செய்தி கேட்டு அன்னை மனம் நொந்தார். இளவரசியின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளவிருந்த சமயம் அவர் நோய்வாய்ப்பட்டார். 1997 புரட்டாதி 05ம் திகதி கல்கத்தாவில் உயிர் நீத்தார். அவரது உடல் கொல்கொத்தாவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அன்னையின் கல்லறையை ஆயிரக்கணக்கானவர்கள் தரிசிக்க வருகிறார்கள். இக்கட்டுரை ஆசிரியரும் அன்னையின் கல்லறையில் அஞ்சலியைச் செலுத்தியுள்ளார்.

அன்னையின் மறைவின் பின்னர் சேவைநிலையத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்ட சகோதரி நிர்மலா அன்னையைப் பற்றிக் கூறுகையில், நான் அன்னை தெரேசா அல்ல. சகோதரி நிர்மலா. தயவு செய்து என்னை "அன்னை" என்று அழைக்காதீர்கள். அன்னை தெரேசாவின் இடத்தை என்னால் நிரப்பமுடியுமா? என்று எனக்குப் பயமாக உள்ளது. இதற்காகக் கடவுளைப் பிரார்த்திக் கொள்கிறேன். அன்னைதான் என்றைக்கும் அன்னை. நாங்கள்அவரது குழந்தைகள்" என்று கூறினார்.

அன்னையின் புனித பணிகள் அவர் தொடங்கி வைத்த கிளைகளின் ஊடாக உலகம் முழுவதும் இடம் பெற்று வருகின்றன. நோயாளர்களுக்கான சிகிச்சை, குழந்தைகளுக்கான கல்விப் போதனைகள் போன்ற பல்வேறு பணிகளை இந் நிலையங்கள் ஆற்றி வருகின்றன. கருணை வடிவமாகவும் மனிதருள் தெய்வமாகவும் திகழ்ந்த அன்னை திரேசா ஆற்றிய பணிகள் அளப்பரியன. அன்னையின் உடல் அழியலாம். ஆனால் உலக மக்களின் உள்ளங்களில் அவர் ஆற்றிய பணிகள் என்றும் நிலைத்து நிற்கும்.

## 22. வாசிப்பு மனிதனை உயர்த்தும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி உலகில் தரம் பற்றிய பேச்சு சமகாலத்தில் விரைந்து மேலெழுந்து வருகிறது. ஐக்கிய நாடுகள் அமையம் 2007ம் ஆண்டு "தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கள்" என்ற எழுகை வாசகத்தை ஆசிரியர் தினத்தில் முன்வைத்துள்ளது. தொடர்ந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இதே எழுகை வாசகத்தை முன்வைத்தல் ஆசிரியர் தொடர்பான அணுகு முறையில் உறைந்து இறுகிய மனோ பாவத்தையே எடுத்துக் காட்டுகிறது. ஆசிரியர் என்ற எண்ணக்கரு தரம் மேம்பட்டவர் என்பதை புலப்படுத்தும் வேளை தரமான ஆசிரியர் என்று கூறுதல் ஆசிரியத்துக்கு விடுவிக்கப்படும் அறை கூவல் என்று கூறலாம். அல்லது அவமானப்படுத்தல் என்றும் கூறலாம். கல்வி தொடர்பான அதிகாரக் கட்டமைப்பு ஆசிரியர் அந்தஸ்ததைத் தாழ்த்துவதற்கே முற்பட்டு வந்துள்ளது.

ஆசிரியர்களுக்குரிய வேலைச் சூழலையும் நிலவரங்களையும் மேலோங்கச் செய்வதன் வாயிலாக கற்போருக்குரிய கற்றல் நிலவரங்களை மேம்படுத்த முடியும் என்ற அறிதலையும் கல்வியிலேயே முன் வைக்கப்பட்டுள்ளது. கற்போருக்குரிய நிலவரங்கள் என்ற எண்ணக்கருவில் வாசிப்பும் வாசித்தற் பொருளும் சிறப்பிடம் பெறுகின்றன. அகன்ற வாசிப்பு, ஆழ்ந்த வாசிப்பு என்பவை வெறும் தட்டையான எண்ணக்கருக்களே. வாசிப்பை அவ்வாறு இரண்டு பெரும் வகைப்பாட்டுக்குள் கூட்டு மொத்தமாக அடக்கி விட முடியாது. வாசிப்பு ஒவ்வொன்றும் தனித்துவமானவை. ஒவ்வொரு வாசிப்பிலும் தனித்துவமான பரிமாணங்கள் உள்ளடங்கிக் காணப்படும்.

நூலியத்தை அடிப்படையாகக் கொண்ட வாசிப்பு நிகழ்த்தப்படுகின்றது. நூலியம் குறிகள் நிரற்கோடல்கள் கருத்து வினைப் பாடுகள் முதலாம் பரிமாணங்களைக் கொண்டுள்ளது. இவை மொழிக்குரிய பரிமாணங்களாகக் கொள்ளப்படும். ஒவ்வொரு பாடத்துறைக்குமுரிய விதிகளை அடியொற்றியே நூலிய ஆக்கம் இடம்பெறும். விதிகளை அடியொற்றி மொழிநிலையும் மொழியசைவுகளும் மேற்கொள்ளப்படுவதால் நூலியங்கள் மொழி விளையாட்டுக்களின் ஆக்கங்கள் என்றும் குறிப்பிடப்படும்.



ஒவ்வொரு நூலியமும் பிற நூலியங்களுடன் இணைப்பும் தொடர்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டமும் கொண்டுள்ளது. இதனை உட்கோப்பு நூலியப்படல் என்பதில் ஆய்வுப்படுத்துவர். சில நூலியங்களில் இடம் பெற்ற கருத்துக்கள் தொடர்புகள் பிரதிபலிப்புக்கள் கருத்து வினைப்பாடுகள் தெளிவாகப் புலப்படும். சிலவற்றில் அவை புலப்படாது இருந்தாலும் செல்வாக்குகள் உட்பொதிந்தேயிருக்கும். இதனால் ஒரு நூலியம் மற்றயதைக் குறித்து நிற்கும் இயல்பு உட்கோப்பு நூலியப்படலில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

வாசித்தல் என்பது கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்குரிய முன்னூட்டல் நடவடிக்கையாவும் அமையக்கூடிய இரு பரிமாணங்களைக் கொண்டது. இவற்றால் அறிவு முன்னேற்றம் பெறுதலுடன் தவறுகள் துரத்தி விடப்படுகின்றன. சமகாலத்தில் நிகழ்ந்து வரும் அறிவின் பெருக்க வெடிப்பு முன்னர் கண்டறியப்படாத புலப்பாடுகளுக்கு இட்டுச் செல்லும் வேளை ஆசிரியரும் மாணவரும் காலாவதியான நிலையை அடையாதிருப்பதோடு வாசிப்பே துணையும் வழியும் காட்டுகின்றது. நாமும் நூலும் என்ற இடைவெளி பெருக்கமடைய கல்வியின் தரவீழ்ச்சி தவிர்க்க முடியாது ஏற்படத் தொடங்கும்.

வாசித்தலோடு தொடர்புடைய ஒரு சிறப்பார்ந்த பரிமாணம் "வாசிப்புப் பண்பாடு" என்பதாகும். வாசிப்புக்குரிய உளக்கல்வி அமைப்பு விதிகள், வாசிப்பு பொருட்களின் தெளிவு, வாசிப்பினால் கிடைக்கப் பெறும் வெகுமதிகள், வாசிப்பு தொடர்பான ஆதரவு வழி முறைகள், குறுக்கீடுகள் முதலிய பல பண்புகள் வாசிப்பு பண்பாட்டிலே உள்ளடங்கி நிற்கின்றன. சமகாலக் கல்வியிலே வலியுறுத்தப்படும் தன்னிலை முகாமைத்துவம் என்ற தொழிற்பாடு ஒவ்வொரு மாணவரிடத்திலும் வளர்ச்சி பெற்று மேலோங்குவதற்கு ஆசிரியரின் துணை வினைத்திறன் கொண்டதாக அமையும்.

## 23. சாரணியத்தின் இலக்கு

மக்கள் தனிநபர் நிலையில் சுய நிறைவு உடையவர்காளகவும் சமூகத்தில் ஆக்கபூர்வமான வகிப்பாகத்தை உள்ளவர்களாகவும் விளங்கும் ஒரு சிறைப்புடைத்தான ஓர் உலகினை கட்டியெழுப்புவதற்கு உதவும் வகையில் இளைஞர்களின் கல்விக்கு பங்களிப்புச் செய்வதே இலங்கைச் சாரணிய சங்கத்தின் திட்டமாகும்.

1907ம் ஆண்டு உலகில் முதல் பாசறை இங்கிலாந்திலுள்ள பிரவுன்ஸ் தீவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந் நாட்டின் பல்தரப்பட்ட சமூகத்தினரது இளைஞர்களை ஒன்றிணைத்து 20 சாரணர்களுடன் இப்பாசறையினை ஸ்தாபகரான உயர் திருமாவீரன் ரொபேட் ஸ்டீவின்சன், ஸ்மித் பேடன் பவல் அவர்கள் நெறி தொட்டு சீரழிந்து கொண்டிருந்த இளைஞர் சமுதாய எண்ண ஓட்டத்தினை திசை திருப்பி "சாரணர் இயக்கம்" என்னும் அமைப்பினை அந்நாட்டிற்கு பெற்றுக் கொடுத்தார்.

தனது சகோதரியின் விருப்பத்திற்கும் அன்றைய தேவைக்கும் ஏற்ப பெண்கள் சாரணர் 1910 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது. பின்னர் பாரியாரின் துணையுடன் "வழிகாட்டிகள்" என்ற அழைக்கப்படும் பெண்சாரணர் வழிநடாத்தப்பட்டனர். பெண்களால் எதையும் செய்யமுடியும். அவர்கள் சமுகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல. என்பதை இன்றைக்கு 95 வருடங்களுக்கு முன்பே பேடன்பவல் சம உரிமை கொடுத்தார்.

1910 ஆம் ஆண்டு கடல் சாரணரும் குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் ஆடல், பாடல் விளையாட்டு, கதை என்பவற்றுடன் இயற்கையினை இரசிக்கும் ஆற்றலை உள்ளடக்கி "குருளைச் சாரணர்" பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. 1918ம் ஆண்டு திரிசாரணர் பிரிவும் 1925 ஆம் ஆண்டு செவிப்புலம் அற்றவர்களுக்கான சாரணியமும், 1941ஆம் ஆண்டு விமானச் சாரணர் பிரிவும் சர்வதேச நிலையில் ஆரம்பிக்கப்பட்டது, என்பது குறிப்பிடத்தக்கது.

இளைஞர், யுவதிகளின் எதிர்காலத் தேவைகளை உள்ளடக்கியமைந்த இவ்வமைப்பு இலங்கைக்கு 1912ம் ஆண்டு கட்டட நிபுணரான திரு.கு.பு ஸ்டீவின்சன் அவர்களால் மாத்தளையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு இலங்கையில் தோன்றிய அந்த உதயம் இளைஞர், யுவதிகளின் வாழ்க்கையில் பிரகாசமாக அமைந்தது. "உங்கள் செயற்பாடுகள் அறிவு பூர்வமானதாகவும், அன்பு, கருணை, நட்பு நிறைந்த சேவையாக இருக்குமேயானால் மற்றவர்களின் பாராட்டும் ஆசீர்வாதமும் உங்களுக்குரியதாகும்". என்று பேடன்பவல் கூறிய அறிவுரைக்கமைய 1957ம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்தில் சாரணர் சட்டக் கோவை அங்கீகரிக்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டு யூலை 27ம் திகதி இலங்கையிலிருந்து முதல்முதலாக மூவர் ராணி மாளிகை சென்று ராணி விருதினைப் பெற்று இலங்கை சாதனையாளருடன் இணைந்தனர். மலையகத்தைச் சேர்ந்த கே.பாலசுந்தரம், கல்முனை எம். சம்சுதீன் புத்தளத்தைச் சேர்ந்த ஏ.எம்.கே. கலீல் ஆகியோர் மேற்படி விருதினைப் பெற்றவர்களாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது இலங்கையில் பிரதம சாரணீயமானது மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் முன்னெடுக்கப்படுகின்றது. அவருக்குத் துணையாக பிரதம மந்திரி, எதிர்க்கட்சித் தலைவர், நீதியரசர், கல்வி உயர் கல்வி அமைச்சர் ஆகியோர் காணப்படுகின்றனர். ஆலோசனைச் சபையின் கடற்படைத்தளபதி, பொலீஸ்மா அதிபர், கொழும்பு மாநகர சபை மேஜர் உட்பட மேலும் 10 உறுப்பினர்களுடன் கல்வி உயர் கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளரும் இச் சபையின் நிரந்தர அங்கம் வகிப்பர். சாரணர் இயக்கத்தின் செயற்பாட்டை முன்னெடுக்க தேசிய ஆணையாளர் பதில் பிரதம ஆணையாளர், சர்வதேச ஆணையாளர், உதவிப் பிரதம ஆணையாளர்கள், தலைமைக் காரியாலய ஆணையாளர்கள் என அதிகாரம் பெற்றவர்கள் செயற்படுகின்றனர். சாரணர்கள் பயிற்சியினையும், சாரணத் தலைவர்கள் (ஆசிரியர்கள் ) பயிற்சியினையும் முன்னெடுக்க தேசிய தலைமைக் காரியாலயத்தில் தேசிய பயிற்சி ஆணையாளர், தேசிய பயிற்சிக் குழு, மாகாணப்பயிற்சி இணைப்பாளர் என்போரும் மாவட்ட இணைப்பாளர்களும் உள்ளனர். இலங்கையில் சுமார் 40க்கு மேற்பட்ட சாரணர் மாவட்டங்கள் உள்ளன. இவர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதி அவர்களுக்கே உண்டு.

இவ்வாறு பரந்த சாரணர் அமைப்பில் 217 நாடுகளில் இலங்கையும் அங்கம் வகிக்கின்றது. தற்போது 25 மில்லியன் சாரணர்கள் உள்ளனர். எளிதானதும் நீண்ட கால நோக்கில் நன்மை தரக்கூடிய ஒன்றாகவும் அமைகின்றதுமான சாரணர் செயற்பாடு கல்வியோடு இணைந்து செயற்படுத்தி வருகின்றது. இதன் சிறப்பினை சிறுவயதிலையே ஆரம்பத்திலேயே அனுபவிக்க முடியும். உடல், உள, ஆத்மீக, சமூக, புத்திக்கூர்மை, தன்னம்பிக்கை, ஆளுமைவிருத்தி, ஒழுக்க மேன்மை என்பனவற்றுடன் நற்பிரஜையின் தன்மை வெளிக்கொணரப்படுகின்றது.

சாரணர்களின், இன, மத, மொழி, நிற, சாதி, வேறுபாடுகள் காணப்படுவதில்லை. எந்தச் சாரணனும் எந்த நாட்டிற்கும் சென்று வர முடியும். அப்படிப்பட்ட ஒரு அமைப்பில் உள்ளவர்கள் சுவாமி விவேகானந்தரின் "எழுந்து நில்லுங்கள், தைரியமாக இருங்கள், வலிமையுடன் இருங்கள், எல்லாப் பொறுப்புக்களையும் நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள், உங்கள் வாழ்க்கைப் பாதையை நீங்கள்தான் உருவாக்க வேண்டும்" என்பதை புரிந்து கொள்ளுங்கள். அனைத்தையும் உருவாக்க தேவையான வலிமையும் நம்பிக்கையும் உங்களுக்குள்ளேயே இருக்கின்றது அவற்றை வெளியே கொண்டுவந்து உங்கள் எதிர்காலத்தை நீங்களே உருவாக்குங்கள்" என்ற சிந்தனை ஒவ்வொரு சாரணனுக்கு மிகவும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்காகவும் இளம்சந்ததியினரின் தேவைகளையும், அபிலாசைகளையும் கருத்திற் கோண்டு இவ் இளைஞர் யுவதிகளிடத்து பெறுமான தளம் உள்ள முறை சாரா கலவன் கல்வி முறைமையின் ஊடாக தலைமைத்துவப் பண்புகளை வளர்க்கும். அசைவு இயக்க துடிப்புள்ளதானதும் ஒரு லட்சம் அங்கத்தினரைக் கொண்டதுமான ஒரு நிறுவனமாக அமையும் என்ற இலக்கை நோக்கி சாரணியம

## 24. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

இலங்கையில் தமிழ் இலக்கிய வரலாறு 13ம் நூற்றாண்டில் அரசகேசரியுடன் ஆரம்பமாகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் பல புலவர்கள் இடம்பெறுகின்றனர். அவர்களில் ஒருவரே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.

கிழக்கு மாகாணத்தில் மண்டூரில் 1899 ஆம் ஆண்டு பிறந்த ஏகாம்பரபிள்ளை பெரியதம்பிப்பிள்ளை வித்துவான் சந்திரசேகர உபாத்தியாரிடம் தமிழ் கற்றவர். அக்கல்வியைத் தொடர முடியாமையினால் கல்முனை மெதடிஸ்த பாடசாலையில் ஆங்கிலம் கற்றார். பின்னர் நாவலர் காவிய பாடசாலையில் கற்றார். இக்காலகட்டத்திலேயே பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நட்புக் கிடைத்தது. இவர் சுவாமிவிபுலானந்தரின் அறிவுத்தடாகத்தில் பூத்தவர். பேச்சிலும் எழுத்திலும் எளிமைத்தமிழ் காணப்பட்டது. பெரியதம்பிப்பிள்ளை காலத்தின் தேவைக்கு ஏற்ப தமிழ் செய்தார். இடைநிலைப் பாடசாலையிலும், உயர் நிலைக் கல்லூரியிலும் தமிழ்ப் பணியாற்றினார். மேலும் மட்டக்களப்பு புனித அகஸ்தீன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் தமிழ்ப்பணியாற்றினார்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை சிறந்த குணாதிசயங்களை உடையவர். சமுகநலநாட்டம் கொண்டவர். முற்போக்குக் கருத்துடையவர். விபுலானந்தரின் வழிநின்று சமய சமரச சமத்துவவேதாந்த நெறியில் வீறு கொண்டவர். சிறந்த ஒழுக்க சீலர். எழுத்துப் பாரம்பரியக் காரரான இவர் பதிகங்கள், உரையாட்சி நூல்களை எழுதியுள்ளார்.

இவரது கன்னியெழுத்தே "மண்டூர்ப் பதிகம்" ஆகும் இவரது செய்யுட்களில் சிரமாய் திகழ்வது "பகவத்கீதை வெண்பா" ஆகும். இவரது செய்யுட்கள் பல சிறப்பு வாய்ந்தன. வழி கல்லோயா நங்கை, கொக்கட்டிச்சோலை தான்தோன்றிச்சரர் பதிகம், சித்தாண்டிப்பதிகம், காளிகமடு கற்பக விநாயகர் ஊஞ்சல் என்பன இவரது செய்யுள் நூல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியதம்பிப்பிள்ளை 1951 ஆம் ஆண்டு "புலவர்மணி" என்ற விருதினைப் பெற்றார். இவ் விருதினை தமிழ்கலாமன்றம் வழங்கியது. 1980 ஆம் ஆண்டு இலக்கிய வித்தகர் என்ற விருதினை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வழங்கி கௌரவித்தது. வாழ்வில் பல அரிய சேவைகளையும், சாதனைகளையும் புரிந்த புலவர்மணி பெரியதம்பி அவர்கள் 1978 இல் இயற்கை எய்தினார்.

## 25. ஒரு சாதனையாளர் ஜேம்ஸ் வொட்சனின் வைரஸ் ஆய்வு

சாதனை என்பதென்ன? ஒரு மகத்தான செயலை வெற்றிகரமாக முடித்தலைச் சாதனை எனலாம். சோம்பேறியாக செயலற்று இருப்பவரால் சாதனையைச் செய்யமுடியாது. தொற்று நோய்கள் நாம் வாழும் சூழலால் பெருகுகின்றன. தொற்றுநோய் பரவினால் பலர் இறக்க நேரிடும். அறியாமையால் அவை தெய்வங்களின் குறையினால் ஏற்பட்டவை என்று பரப்புரை செய்துவிடுவர். ஆனால் தொற்றுநோய்க்கான காரணத்தை அறிந்து கொண்டால் அதனை வெற்றி கொள்ளலாம்.

தொற்று நோய்கள் வைரஸ் கிருமிகளால் ஏற்பட்டு மனித சமுதாயம் பல பேரழிவுகளைச் சந்தித்தது. அழிவுகளைத் தன்கண்கள் முன்னாலேயே கண்டுகொண்டார். அதனால் மனம் மிக வருந்தினார். இதற்கான காரணம் என்ன? என்ற ஆய்வில் இறங்கினார். அத்தொற்றுநோய்க்குரிய வைரஸ் எதுவாக இருக்கலாம் என்று சிந்தித்தார். அவைபற்றிய ஆய்வில் தனது வாழ்நாளில் பெரும் பகுதியை செலவிட்டவர்தான் "ஜேம்ஸ் வொட்சன் அவர்கள். அத்துடன் பிராணிகள் மற்றும் தாவரம் குறித்த ஆய்வில் அவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

1928 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் வொட்சன் பிறந்தார். அவரின் தந்தை ஒரு தொழில் மேதை. வொட்சன் தன் இளமைப் பருவத்தை சிக்காக்கோவில் கழித்தார். 1943 இல் பல்கலைக் கழகம் புகுந்து 1947 இல் விலங்கியல் பட்டம் பெற்றார். மரபு நூலில் திறமையை "ப்ளுமில்டரில்" உள்ள இந்தியானா பல்கலைக்கழகத்தில் பெற்றார். அப்பல்கலைக் கழகத்திலேயே ஒரு பதவியையும் பெற்று 1950 இல் விலங்கியலில் Phd (பி எச் டி) பட்டம் பெற்றார்.

இவர் இந்தியானா பல்கலைக்கழகத்தில் கற்கும் போது முல்லர், ஸோன்பர்ன் லூரியா போன்ற புகழ் பெற்ற பேராசிரியர்கள் அங்கு கடமையாற்றினர். அவர்களுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் சிறந்த மரபியல் அறிஞர்கள். அவர்கள் வொட்சனின் மனதில் அழிக்க முடியாத நினைவலைகளை விட்டுச் சென்றனர். லூரியாவின் வழிகாட்டலில் பட்டம் பெற்ற வொட்சன் ஜீவ அணுப் பெருக்கத்தின் மீது கடினமான எக்ஸ்ரேயின் விளைவைப் பற்றிய ஆய்வை மேற் கோண்டு பல உண்மைகளை வெளியிட்டார்.

1953 இல் ஜேம்ஸ் வொட்சன் மீண்டும் ஐக்கிய அமெரிக்கா திரும்பி கலிபோர்னியா தொழில் நுட்பக் கழகத்தில் தாவரவியலில் மூத்த ஆராய்ச்சி அங்கத்திணராகப் பணி புரிந்தார். அறிவியல் பிரிவில் பணிபுரிந்த பின் மீண்டும் கேவெண்டிஷ் பரிசோதனைக்கூடத்தில் "க்ரிக்" என்பவருடன் இணைந்து பணிபுரிந்தார். இருவரும் வைரஸ் பற்றிய பொதுவான கொள்கைகள் பற்றிய அதிகமான கட்டுரைகளை வெளியிட்டனர். தொடர்ந்து பல விஞ்ஞானப் பணிகளில் ஈடுபட்டார்.

பின்னர் கோபன்ஹேகனில் உள்ள தேசிய ஆராய்ச்சி ஆலோசனை சபையின் அங்கத்தினர் ஆனார். அங்கே புகழ் பெற்ற உயிரியல் இராசயன விஞ்ஞானியான ஹார்மன், கலாகர் நுண்ணிய பிராணி மற்றும் தாவர ஆய்வாளர் ஒல்மால் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். அவரது பணியோ பற்றீரியா மற்றும் வைரஸ் சம்பந்தப்பட்டதாக இருந்தது. அதிலிருந்து அவரின் விஞ்ஞான ஆய்வுகள் ஒரு திருப்பு முனையைப் பெற்றன. வைரஸ் எதிர்ப்பு மருந்தைக் கண்டுபிடித்தார்.

1962 இல் இவரின் பல்வேறு சோதனைகளுக்கும் கண்டுபிடிப்புக்களுமாய் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அது தவிர மருத்துவத்தில் செய்த சாதனைக்காக பல பரிசுகளும் கௌரவங்களும் குவிந்தன.

## 26. முதியோரைப் பேணுவோம்

ஒக்டோபர் 1ஆம் திகதி முதியோர்களை கௌரவிக்கும் தினமாக உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுவதை நாம் அறிவோம். இன்றைய சிறுவர்கள் நாளைய முதியோர்கள். இன்றைய குருத்தோலை நாளையக் காவோலை. இதனை அனைவரும் மனதிருத்த வேண்டும். சிறுவர்களும் முதியோர்களும் உலகில் மிகச்சிறப்பு வாய்ந்தவர்களாகவே கருதப்படுகின்றனர். ஒரு வகையில் சிறுவர்களும் முதியோர்களும் ஒரே நிலையில் உள்ளவர்களே. இரு பகுதியினரும் பிறரில் தங்கி வாழ்பவர்களே.

"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்பது முதுமொழி. எம்முன்னோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிச் சென்ற பொன்மொழிகள் இத்தகைய சிறப்புக்குரியவை. எம்முதியோர்கள் தம் அனுபவ அறிவுரைகளை இளையோருக்கு கூறி நிற்கும் இன்பச் செம்மல்கள். முதியோர்கள் நமது அறிவுக் கருவூலங்கள் என்றால் மிகையாகாது. முதியோர்களின் ஆசீர்வாதம் வளரும் இளையோருக்கு மிகச்சிறந்த வரப்பிரசாதமாகும். இவர்களின் அனுசரணை எம் நல்வாழ்விற்கு அத்தியாவசியமாகும். இந்த வகையில் முதியோர்தினம் கொண்டாடப்பட்டு வருவது பொருத்தமானதே.

முதியோர்கள் என்பது வயதால் மட்டும் முதிந்தவர் இல்லை. அவர்கள் அனுபவத்தாலும், அறிவாலும் உயர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் அனுபவத்தை எமக்கு எடுத்து விளக்கும் ஞானிகள். அவர்களது அறிவுரைகள் எமக்கு நல்வழிகாட்டுவன. கள்ளம் கபடமில்லாத குணம், அன்பும் மகிழ்வும் உள்ள மனம் ஆகியன தெய்வத்திற்குச் சமமாகும். அதனால் முதியோர்களை தெய்வத்துக்குச் சமமானவர்கள் என்கிறோம். இவர்களுக்குப் பிறருடைய பாதுகாப்பும் அன்பும் ஆதரவும் அரவணைப்பும் மிகவும் தேவை. சமூகத்தின் நலம் பேணப்படுவதற்கு முதியோரும் சிறுவரும் சமூகத்தால் பேணப்படுதல் வேண்டும்.

இன்றைய முதியோர் முன்பு இளையோராகவும், சிறுவர்களாகவும இருந்தவர்களே. இன்றைய சிறுவர் எதிர்காலத்தில் முதியோர் நிலையை எதிர்கொள்ள வேண்டியவர்களே. இதனை நன்கு சிந்தித்து நடந்தால் முதியோரைப் பேணும் முக்கியத்துவம் எமக்குப் புரிந்துவிடும். அறிவு நிரம்பாத சில இளையோர் முதியோரைப் பார்த்து பழித்தலையும், இம்சைப்படுத்துதலையும் நாம் காண்கின்றோம். இது வருத்தத்திற்குரிய செயலாகும். இவர்களது செயல்களே நகைத்தற்குரியதாகும். பழுத்த ஓலை விழ குருத்தோலை சிரிப்பதைப் போன்றதாகும்.

நாளைக்கு எமக்கும் இந்நிலை வரும் என உணர்ந்த எவரும் முதியோருக்கு எவ்வித தொல்லையும் கொடுக்கமாட்டார்கள். இன்றைய சிறுவர் நாளைய முதியோர் என்பது அசைக்க முடியாத உண்மையாகும். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" எனும் முதுமொழிக்கிணங்க நாம் முதியோரைப் பேணிப்போற்ற வேண்டும். அதன் பயனை எதிர் காலத்தில் நாம் அனுபவிக்கலாம்.

முதியோர் நலன் பேணும் பல நிறுவனங்கள் இயக்கங்கள் சர்வதேச ரீதியில் இயங்குகின்றன. இவ்வகையில் முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாடுகள் தோறும் சேவை ரீதியாகவும் சமயசன்மார்க்க நெறி ரீதியாகவும் முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வில்லங்களில் முதியோர் பராமரிக்கப்பட்டு பேணப்படுகின்றனர். இவர்களது உலகமே தனியுலகமாக இருக்கின்றது. இவ்விடத்தில் ஒரு விடயம் கவலைக்குரியதாக உள்ளது. பாடுபட்டு உழைத்துத் தம் மக்களைப் பேணி வளர்த்த தாய் தந்தையரே இம்முதியோர்கள். இவர்கள் தம் இயலாத நிலையில் முதியோர் இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

தமது சொந்த நலனுக்காக வெளிநாடு உள்நாடு என உழைத்து நிற்கும் மக்கள் தமது பெற்றோரை முதியோர் இல்லங்களில் இட்டுச் செல்வது தர்மம் ஆகுமா? அன்பிற்காக ஏங்கி நிற்கும் பெற்றோர் முதியவர்களானதும் எம்மை அன்புடன் பேணிய காலத்தை மறக்கலாமா? கூடவே கூடாது. ஆனால் இந்நிலையை நாம் இன்று பல இடங்களிலும் காண்கிறோம்.

முதியோருக்குத் தேவையானது அவர்களது மக்கள் சுற்றத்தார் ஏனையோரின் அன்பும் ஆதரவுமே என்பதை நாம் மறக்கவே கூடாது. ஊண் உறக்கம் மட்டும் முதியோரை நலமாக வாழவைத்து விடமுடியாது. இவ்வகையில் முதியோரைப் பேணுதல் வேண்டும் என்பது புலனாகின்றது அல்லவா? முதியோர்கள் தமது அனுபவ முதிர்ச்சியால் நன்மை எது? தீமை எது? என அறிந்து தம்மைச் சீர்ப்படுத்திக் கொண்டவர்கள். மனம் பக்குவப்பட்ட நிலையில் தெய்வத்திற்கே ஒப்பானவர்கள். இவர்களது அறிவுரைகளும் ஆசீர்வாதங்களும் சிறுவர்களையும் இளையோர்களையும் நல் வழிப்படுத்துகின்றன.

“மூத்தோர் சொல்லும் முதிர்ந்த நெல்லிக்கனியும் முன்னே கசக்கும் பின்னே இனிக்கும்“ என்பது ஆன்றோர் கருத்து. இவ்வகையில் முதியோர் எமக்கு வழிகாட்டி நிற்கும் நடமாடும் தெய்வங்களாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து பணிவிடைகள் புரிந்து இவர்களை அன்புடன் ஆதரித்துப் பேணுவது இளையோரினதும் சிறுவர்களினதும் தலையாய கடமையாகும். இது எல்லோரும் நலம் பெறும் வழியுமாகும். முதியோரைக் கௌரவித்து முதியோர் ஆசீர்வாதம் பெறுவதால் எமது வாழ்வு வளம் பெறும். இவ்வகையில் சர்வதேச முதியோர்தினம் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுவது சாலப் பொருத்தமானதாகும். எனவே சிறுவர்களாகிய நாமும் முதியோர் நலம்பேணி வளம் பெறுவோமாக. சிறுவர்க்கும் முதியோர்க்குமான நாளைக் கௌரவித்து மகிழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை, என்றும் எச்சந்தர்ப்பங்களிலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" என்றார் ஓர் ஆங்கிலக் கவிஞர். இதனாலேயே நல்ல நூல்களை நண்பர்கள் ஆக்கிக் கொள்ளுங்கள் என்று அறிஞர்கள் வலியுறுத்துகின்றார்கள். இளமைப்பருவம் இனியது. இப்பருவத்திலேயே நூல்களை வாசிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்விதம் ஏற்படுத்திக் கொண்டால் நமது மொழி ஆற்றல் விருத்தியுறும்.

நம்மை அறிஞனாக்குவது நூல்களே. நூல்களை வாசித்து யோசித்தால் பல வினாக்கள் நம் மனத்திரையில் எழும். அவற்றுக்கு விடை காண்பதில் மனம் விரியும். தன்னை அறிஞனாக்கிய பெரியவர்கள் ஆறுபேர் உள்ளனர். அவர்கள்தான் "எப்பொழுது, யார், எங்கே, ஏன், என்ன, எப்படி" என்கின்ற பேர் கொண்ட அன்னவரைப் பேணு" என்று "றுட்யாட் கிப்லிங்" அடிக்கடி கூறுவாராம். நீங்கள் மனதிருத்திக் கொள்ளுங்கள். சிந்தனையாளர் சோக்கரட்டிஸ் தன்னை நாடி வருபவர்களிடம் இவற்றைக் கேட்டுத்தான் அவர்களைச் சிந்திக்க வைத்தார்.

"கல்வி கரையில கற்பவர் நாள் சில"
மெல்ல நினைக்கிற் ..."

என்று இடித்துரைக்கிறது நாலடியார். நாம் வாழும் நாளில் கரையற்ற கல்வியின் சிலதுளிகளையாவது கற்றிட முயல வேண்டும். கல்வியறிவுடையோரை மனிதர் என்றும், கல்வி அறிவற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் திருவள்ளுவர் கருதுவர். கல்வியறிவு படைத்தோரையே இவ்வுலகு மனிதர்களாக மதிக்கும் என்று அறிஞர் கூறுவர்.. மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் கல்வி அறிவினைத்தேடிக் கொள்ளுதல் வேண்டும். கல்வி அறிவைப் பெற்றுக் கொள்வதற்குப் பல வழிகள் உண்டு. அவற்றுள்ளே மிகச் சிறந்த வழி நூல்கள் மூலம் பெற்றுக்கொள்வதாகும். நூல்கள் மூலம் அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் நாம் நூல்களை நன்கு வாசிக்க வேண்டும். வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வதன் மூலமே அது சாத்தியமாகும்.

பாடங்களில் சிறந்த பெறுபேற்றைப் பெற முடியும். வாழ்க்கை பூராகவும் நாம் மகிழ்ச்சியாகவும் இருக்கக் கூடிய வழியை கண்டு கொள்ளலாம்.

நூல்கள் பலதரப்பட்டவை, வரலாறு, சமயம், தத்துவம், விஞ்ஞானம், இசை, புனைகதை, விளையாட்டு எனப் பல்வேறு வகைப்பட்ட நூல்கள் இருக்கின்றன. இவற்றை எதிர்கால முன்னேற்றத்திற்கு, வாழ்க்கைக்குப் பயன் தரும் நூல்களை அறிந்து கற்றல் வேண்டும். நூல்களைத் துணை கொண்டால் வேறு துணை நமக்கு தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் நமக்கு அறிவு தரும் அரிய செல்வங்கள். வேறு செல்வங்களைக் கள்வர் களவாடிச் சென்று விடலாம். ஆனால் புத்தகங்கள் தரும் அறிவுச் செல்வத்தை நம்மிடமிருந்து எவருமே களவாட முடியாது. இதனால்தான் "புத்தகங்களைப் போல சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது" என ஆங்கில அறிஞர் ரஸ்கன் கூறினார்.

புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் ஒரு போதும் தனிமை உணர்வைப் பெறுவதில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் புத்தகங்களை நாடிச் சென்று விடுவதே இதற்கு காரணமாகும். வாழ்க்கையில் ஏற்படும் சோர்வுகள் தோல்விகள் அவர்கள் விரும்பிய நூல்களை வாசித்து அவற்றின் மூலம் போக்கிக் கொள்வர்.



கவிதைகள், பெரியார் வரலாறுகள், சமய நூல்கள் என்பன நமக்கு நல்ல வழிகளைக் காட்டுவன. அவை நமது சிந்தனை விருந்திற்கும் துணைபுரியும் வல்லமை மிக்கன. எவ்வளவுக்கு எவ்வளவு நூல்களை வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அறிவு விருத்தியடையும். சொல்வளம் பெருகும். மொழியாற்றலில் முதன்மை பெற வாசிப்பு பெருந்துணை புரியும்.

புத்தகங்களால் ஒருவன் பெறும் அறிவை, இன்பத்தை மற்றவர்கள் தட்டிப்பறித்திட முடியாது. வாழ்நாள் முழுவதும் அவை அவனுக்கப் பயன் தரும். நூல்கள் படிக்கன்ற பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை சூனியமாகப் போகும். கிணற்றுத் தவளை போன்றே அவன் கருதப்படுவான்.

நல்ல நூல்களை நாம் கற்பதனால் அறிவால் மட்டுமின்றி உணர்வாலும், உள்ளத்தாலும் உயர்வடைய முடியும் . உலக மக்களோடு உறவுகொள்ள முடியும். நமது பண்டைய வாழ்க்கை முறைகளை, விழுமியங்களைப் பண்பாடுகளை நண்குணர்ந்து அதற்கமைய நம் வாழ்வையும் அமைத்திட முடியும். "வாசிப்பு ஒருவனை பூரண மனிதனாக்குகின்றது" என அறிஞர் கூறுவர்.

பொழுதுபோக்குக்காகவும் சிலர் நூல்களைப் படிக்கின்றார்கள் அத்தகைய நூல்கள் குறிபிட்ட நேரத்திற்கு மட்டுமே மகிழ்ச்சியை அளிக்கும். கற்பனைக் கதைகள் மட்டும் படித்து விட்டு ஏனைய நூல்களை ஒதுக்குதல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனை உலகில் நாம் வாழ்ந்திட முடியாது. அத்தகைய நூல்களை நாம் கற்க முயல வேண்டும். நல்ல சிந்தனைகள் அடங்கிய நூல்களே நம் உள்ளத்திற்கு உகந்தவை. நல்ல நூல்களைத் தேடிக்கற்றால் அவை நமது வாழ்க்கைக்கும் துணைபுரியவல்லன.

நூல்களை வாசிக்கும் போது அவற்றை பிழையற வாசிக்கவும் அவை கூறும் கருத்துக்களை நன்கு விளங்கி மனதிற் பதித்துக் கொள்ளவும் வேண்டும். நல்ல நூல்களை வாசிக்கும் போது வாசிப்போர் மனதில் வாசிக்க வேண்டுமென்ற ஆவல் பிறக்கும். அது நாளடைவில் தீராத பசியாக மாறும். அதனால் மேலும் நூல்களைத் தேடிக் கற்க முயல்வார்கள்.

நாம் நூல்களை வாசிக்கவும் போது அவற்றில் வலியுறுத்தப்படும் கருத்துக்களை நமது உள்ளத்திற் பதித்துக்கொள்ள வேண்டும். அதன் மூலம் அந் நூல்கள் நம்மோடு உறவு கொண்டு விடும். புத்தகங்களைப் போன்ற சிறந்த நண்பர்கள் கிடைப்பது அரிது. நமது நண்பர்கள் மனமாற்றமடைந்து நம்மை விட்டுப் பிரிந்து விடலாம். ஆனால் புத்தகங்களாகிய நண்பர்கள் என்றுமே எம்மோடு கலந்து உரையாடக் காத்திருப்பவர். நம்மை அவை வெறுப்பதில்லை.

நமக்கு அறிவு புகட்டும் ஆசானாக அவை அருகிருக்கும் போது, அவற்றை நாம் பயன்படுத்த தவறக் கூடாது. நல்ல நூல்களே நமது நல்ல நண்பர்கள் என உணர்ந்து நூல்களை வாசிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வளரும் மாணவ சமுதாயத்தின் தலையான கடமை இதுவாகும் . “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து“ என்பது நம் முன்னோர் கூறிய அறிவுரை.“ முது மொழி, இளமையிலேயே நாம் கற்க வேண்டியதை கற்றுத் தேறவேண்டும். அதற்கு நல்ல நூல்களே நமக்குத் துணை செய்யும். நாம் இவ்வுலகில் வாழும் காலமோ மிகவும் சிறியது கல்வியோ கரையற்றது. நல்ல நூல்களை நண்பர்களாகக் கொள்வோம். நூல்களை நாளும் நண்பர் ஆக்குவோம்“

## 28. நாட்டார் பாடல்கள்

மனித மனங்களின் இயல்பான உணர்வுகளின் அடிப்படையில் எழுவது பாடலாகும். அகத்தில் எழும் எண்ணங்களின் புறவடிவமாக வாழ்க்கையின் இயல்புகள் அமையும். மனித மனத்தில் எழும் உணர்ச்சிக் கொந்தளிப்பின் கோலச் சிதறல்களில் ஒருவகைதான் பாடல்களாகும். இவ்வகைப் பாடல்கள் மனிதன் பேசக் கற்றுக்கொண்ட நாள்முதலே பல்வேறு வடிவங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிழ்த்துள்ளன. வாயில் பிறந்து காற்றில் கலந்து செவிகளில் உலாவந்து கருத்தில் இனிப்பவை

இப்பாடல்களில் ஓசையிருக்கும். உணர்ச்சியிருக்கும். சொல் தொடையிருக்கும். ஆனால் இலக்கண வரம்பிற்கு உட்படாமலும் இருக்கும். இப்பாடல்களில் இசைக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

கிராமிய வழக்காறுகள், கிராமப்புற மக்களின் அனுபவங்களை மட்டுமல்லாமல் அவர்களது உணர்வுகளையும் சுட்டி நிற்கிறது. கிராமப்புற மக்களால் பாடப்படும் பாடல்களை நாட்டார் பாடல்கள் என்றழைப்பார்கள். இவை நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள அனைத்து நிகழ்வுகளும் பாடல்களின் பொருளாகின்றன. கிராம மக்களின் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று, உயிர்பெற்று, உள்ளத்தின் உண்மையான உணர்ச்சிகளின் வெளிப்பாடே இவ்வாறான பாடல்களாகும் எனக்கூறுவர். கிராமியப் பாடல்கள் முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குகின்றன.

பாட்டுக்கொரு புலவன் பாரதியாரும் கிராமியப் பாடல்களில் இன்புற்று அவற்றைப் பற்றிக் கூறுகிறார்.
"மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன்" என்றும்,
"ஏற்ற நீர்ப்பாட்டின் இசையினிலும்",
நெல்லடிக்கும் கோற்தொடியார் குக்குவெனக்
கொஞ்சும் ஒலியினிலும்" என்று உலக்கைப் பாட்டினிலும்,
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்" என்று பள்ளுப் பாட்டினிலும்,
"வட்ட மிட்டுப் பெண்கள்
வளைக் கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர்
கூட்டமுதப் பாட்டினிலும்" என்று கும்மிப் பாட்டினையும்,
நாட்டினிலும் காட்டினிலும்
நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப்
பறி கொடுத்தேன் பாவியேன்" என்று கிராமியப் பாடல்களின் சிறப்பை நயம்படக் கூறியுள்ளார்.

நாட்டார் பாடல்கள் அனைத்து மொழிகளிலும் உண்டு. நாட்டுப்புறப் பாடல்களை பல்வேறு அறிஞர்களும் பல்வேறு வகையாக வகைப்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் வகைப்படுத்தலில் ஒரு பொதுமையைக் கொண்டு நாம் நமது கிராமியப் பாடல்களை பின் வருமாறு வகைப்படுத்துதல் நன்மை பயக்கும்.

1. வாழ்த்துப் பாடல்கள்
2. தாலாட்டுப்பாடல்
3. தொழில் பாடல்கள்.
4. குழந்தைப் பாடல்கள்
5. காதல் பாடல்கள்
6. கொண்டாட்டப் பாடல்கள்
7. ஒப்பாரிப் பாடல்கள.
8. பல்வகைப் பாடல்கள்

இவ்வாறான ஓசைநயமும் பொருள் நயமும் கொண்ட நாட்டார் பாடல்களை நாமும் போற்றி தமிழ் அன்னைக்குத் தொண்டு செய்வோம்.

கிராமப்புற மக்களின் வாழ்வியலையிட்டு ஆராய்வது கிராமப்புறவியலாகும். இதனை நாட்டாரியல் என்று பெருவாரியாகக் கூறுவார்கள். நாட்டார் என்பது இன்றைய வாழ்வியலில் ஒரு பண்பாடில்லாத சமூகத்தைக் குறிப்பதாக உள்ளதை அவதானிக்கலாம். சிறப்பாக நகர்ப்புறங்களில் வாழ்பவர்கள் கிராமங்களில் இருந்து வருபவர்களை "நாட்டான் என்றும், "பட்டிக்காட்டான்" என்றும் சொற்பதங்களால் சுடுவார்கள். ஒரு ஆள்புலத்துக்கு உட்பட்ட நிலத்திணிவை நாடு என்றழைப்பது வழமை. மாந்தர் வாழுமிடத்தையே நாடு என்பார்கள். இதனைத் தெரிந்திருந்தும் நம்மவர்கள் நாட்டார் என்பவர் நாகரிகம் அடையாத கிராமப்புறங்களில் வாழ்பவர்கள் என்றே கருதுகின்றனர்.

இன்றைய நகர்கள். பட்டணங்கள், பட்டினங்கள் அனைத்தும் ஒரு காலத்தில் பட்டிக்காடாகத்தான் இருந்தன. ஒரு சிறுகுடியிருப்புப் பல குடிகளைப் பெருக்கிக் கிராமம் ஆகும். கிராமம் வளர்ச்சியுற்றதும், அது நகராகும், பலநகர்கள் இணைவுற்றுப் பெரிய பட்டணமாகும். இவற்றையெல்லாம் தொகுத்தே நாட்டார் என்ற பதம் வந்தது. இங்கெல்லாம் வாழ்ந்த மக்களின் வாழ்வியலை ஆராய்வது நாட்டாரியல் ஆய்வாகும். இக்கிராமப்புற வழக்காறுகள் தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக வாழ்ந்து வளர்ந்து வருகின்ற இயல்புகளைப் படம் பிடித்துக் காட்டுவன. அவர்களது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து செம்மைப் படுத்தப்பட்டு, பண்பாட்டியலைப் மிளிரச் செய்கின்றன.

இவற்றை இயற்கைப் பாடல்கள் என்றும் கொள்ளலாம். இயற்கையன்னை தன்னை முகம் பார்க்கத் தேர்ந்தெடுத்த தெளிவான கண்ணாடி கிராமியப் பாடல்கள் ஆகும். இவற்றை எழுதாக் கவிதை, ஏடறியாப் பாடல்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாதார் பாடல், பாமரர் பாடல், கிராமியப் பாடல் வாய்மொழிப் பாடல் எனப் பல்வேறு பெயர்கொண்டு அழைக்கின்றனர். இப்பாடல்கள் பல்வேறு உணர்ச்சிகளைக் கொண்டிருக்கும். பொழுது போக்குக்காக மட்டுமன்றி, உடலநலம், மனநலம், சமூக நலம் பேணுவதாகவும் அமைந்துள்ளன. இவற்றை உலகின் அனைத்து மொழிகளிலும் காணலாம்.

இப்பாடல்கள் பெரும்பாலும் காடு கழனி, வயற் பரப்புகளிலும், தோட்டங்களிலும், தொழில் புரியுமிடங்களிலும் பாடப்படுகின்றன. மந்தை மேய்க்கும்போதும், நிலத்தை உழும்போதும், தண்ணீர் இறைக்கும்போதும், நாற்று நடும்போதும், களையெடுக்கும்போதும், அறுவடை செய்யும்போதும், உழுதுண்டு வாழும் மக்கள் பாடுகின்றனர். வேலைப் பளுவைக் குறைப்பதற்காக ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது என்பதற்கேற்ப பாடுகின்றனர்.

கிராமியப் பாடல்களிலும் எதுகை, மோனை, இயைபு, இரட்டைக்கிளவி போன்றவற்றைக் காணலாம். இப்பாடல் வகைகளுக்கு அடிவரையறை இல்லை. குழந்தைப் பாடல்களில் அடிகள் குறைந்ததாயும், தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களில் அடிகள் அதிகமாகவும் உள்ளன. இவற்றிலும் பாடவேறுபாடுகள் உண்டு.

மனித வரலாற்றைப் பார்க்கும்போது இன்றைய நிலைக்கு வருவதற்குப் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு நிலைகளைக் கடந்து முன்னேறியுள்ளதை அவதானிக்கலாம். தமது வாழ்வாதாரப் பயிற்சிகளை மேற்கொண்டு காலப்போக்கில் மொழியும் உணர்ச்சிகளுடன் கலந்து விளையாட்டாகப் பரிணமித்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுவர்.

அறுவடையின்போது போட்டிபோட்டுக் கொண்டு வேலைசெய்வார்கள். அப்போது அவர்கள் பாடும் பாடல்கள் அற்புதமாக இருக்கும். அந்தத் தாளத்துக்கு ஏற்ப தாள்கத்தி சுழன்று விளையாடும். என்னால் ஈடுகொடுக்க முடியாது போகும். ஆனால் சிரிப்போடு உதவுவார்கள். அந்தப் பாடல்களை இப்போது அசைபோட்டுப் பார்க்கிறேன்.

படிப்பறிவில்லாத இளைஞர்கள் தமக்குள் பாடுகின்ற பாடல்களை எழுத்தில் தரமுடியாது. அது விரகதாபத்தை எற்படுத்துவன. இப்போது அவற்றை நினைத்தாலும் முகஞ்சுளிக்கும். மனம் உள்ளுக்குள் துள்ளும். எப்படி இவர்களுக்கு மொழியின் நெளிவு சுளிவுகளை இப்படிக் கையாளத் தெரிந்தது? ஓசைநயமும் நிறைந்த பொருள் தருவனவாகவும் உள்ள அவ்வகைப் பாடல்களை எவ்வாறு புனைந்து பாடினார்கள்? வியப்பாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது.

பாடல்களுக்குச் சொந்தக்காரர்கள் யாரும் இல்லை. இவற்றை எப்போது, யார் பாடினார் என்ற விபரங்கள் கிடைத்தில. ஆனால் செவிவழியாக நுழைந்து இப்போது பலர் இவற்றை எழுத்தில் பதிந்து வைத்துள்ளனர். நமது பண்பாடு என்று சொல்வதற்கு இவைகள்தான் ஆதாரமாக உள்ளன. இவ்வகைப் பாடல்கள் என்று தோன்றின என்பதுகூட ஆய்வுக்குரியது. இத்தகைய பாடல்களால் மொழி செம்மையடைகிறது.

## 29. வெகுசனத்தொடர்பு சாதனங்கள்

நமது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாய் விளங்குவன மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாகும். இவ் ஐம்பொறிகள் நமது அறிவு வளர்ச்சிக்கும் இன்ப நுகர்ச்சிக்கும் உதவுவன. அவற்றுள் கண்களும் காதுகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. கண்களால் பல்வேறு விடயங்களைக் காண்கின்றோம். செவிகளால் உள்ளத்திற்கு இன்பம் தரும் பல்வேறு விடயங்களையும் நிகழ்ச்சிகளையும் கேட்கின்றோம்.



மனிதனுடைய அறிவு சார்ந்த செயற்பாடுகள் இப்பொறிகள் மூலமே பெரிதும் செயற்படுகின்றன. அவனது செயற்பாடுகள் சிறந்தனவாக அமைவதற்குப் பல்வேறு கட்புல, செவிப்புல சாதனங்கள் தேவையாகின்றன.

இன்றைய உலகில் கட்புல, செவிப்புல சாதனங்களில் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, இணையம் என்பன பெரிதும் பயன்படுவதை அனைவரும் அறிவர். இவை அறிஞர் தொடக்கம் சாதாரண மக்கள் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் பல்வகைகளிலும் உறுதுணை புரிகின்றன.

தொடர்பு சாதனங்களில் மிகவும் பிரபல்யம் மிக்கதாகப் பத்திரிகைகள் விளங்குகின்றன. நாள்தோறும் நாட்டுநடப்புக்களையும், உலகச் செய்திகளையும் நமக்குத் தருகின்றன. இவற்றை வாசிப்பதன் மூலம் நமது நாட்டுச் செய்திகளைமட்டுமன்றி உலகப் புதினங்களையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் உலகு பற்றிய அறிவும் தொடர்பும் நமக்கேற்பட வழி பிறக்கிறது.
ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டின் தேசிய மொழிகளிலும் உலக மொழியான ஆங்கிலத்திலும் செய்தித்தாள்கள் வெளிவருகின் றன. இவற்றின் மூலம் நாட்டு மக்கள் தங்கள் நாட்டில் நிகழும் நிகழ்வுகளை மட்டுமன்றி ஏனைய நாடுகளில் நிகழும் நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள வாய்ப்பேற்படுகின்றது.

பத்திரிகைகளில் செய்திகள் மட்டுமன்றிக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், துணுக்குகள், சித்திரங்கள், நிழற்படங்கள் முதலியனவும் பிரசுரமாகின்றன. இவற்றைப்படிப்பதன் மூலமும், பார்ப்பதன் மூலமும் நமது ஓய்வு நேரத்தை நல்ல முறையில் செலவிட முடிகிறது. அறிவை விருத்தி செய்து கொள்ளவும் முடிகிறது. வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள் செய்திகள் தவிர்ந்த பல்வேறு விடயங்களை உள்ளடக்கியனவாக வெளிவருவதால் அவை நமது அறிவுப் பசிக்குத் தீனியாகின்றன.

பத்திரிகைகளை அடுத்து முக்கியத்துவம் பெறும்தொடர்பு சாதனமாக வானொலி விளங்குகின்றது. பத்திரிகைகளைப் படிப்பதற்குக் கல்வியறிவு ஓரளவேனும் வேண்டும். ஆனால் வானொலியோ எழுதப் படிக்கத் தெரியாதோராலும் விரும்பப்படும் அறிவுச் சாதனமாக திகழ்கின்றது. வானொலி மூலம் அறிவும் இரசனையும் பெற்றோர் அநேகர் உள்ளனர்.

வானொலிகள் உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், வர்த்தக வாணிபச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள் போன்றவற்றை உடனுக்குடன் ஒலிபரப்புகின்றன. இவற்றைவிடப் பெரியார்களின் நினைவுதினப் பேச்சுக்கள், சிந்தனைக்கும் விருந்தளிக்கும் செய்திபெட்டக நிகழ்ச்சிகள், இலக்கியச் சொற்பொழிவுகள், சிந்தனையைத் தூண்டும் சிறுகதைகள், நயந்து மகிழ்வதற்குரிய நாடகங்கள், இசைக்கச்சேரிகள் போன்றவற்றையும் ஒருங்கு சேரத்தருகின்றன. இவற்றிற்கு மேலாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளையும் நடத்துகின்றன. சுருங்கக்கூறின் வானொலியானது கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் ஒரு கருவியாகத் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இன்று உலகம் முழுவதையும் ஒரே வலைப்பின்னலில் இணையம் இணைத்து வைத்துள்ளது. உலகம் முழுவதையும் ஒருவர் தமது வீட்டில் அமர்ந்து கொண்டே கண்டும் கேட்டும் இன்புறலாம். இச்சாதனங்களினால் மனித சமூதாயம் பல்வேறு நன்மைகளையடைந்து வருவது உண்மையே.

ஆனாலும் இவற்றால் தீமைகளும் ஏற்படுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. வெகுசனத்தொடர்பு சாதனங்களின் பெருக்கத்தால் அவற்றில் வெளியிடப்படும் தகவல்களால் மனித சமுதாயத்திற்குக் பாரிய தீமைகளும் விளைகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக மனித வாழ்வையே நாசமாக்கும் மதுபானங்கள், சிகரெட் போன்றவற்றைப் பற்றிய விளம்பரங்களைக் குறிப்பிடலாம். இத்தகைய விளம்பரங்களால் இளஞ்சந்ததியினர் தப்பான வழிகளில் செல்லவும் தங்கள் எதிர்கால வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளவும் வழியேற்படுகிறது.

வெகுசனத் தொடர்பு சாதனங்கள் தமது விற்பனை மூலம் வருவாயைப் பெருக்கும் நோக்கில் செயற்படுகின்றன. போட்டி மிக்க சமூதாயத்தில் விளம்பரங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. தங்கள் பிரச்சாரநோக்கில் மக்கள் கவனத்தை ஈர்க்க கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற சமூதாயச் சீர்கேடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தவறுவதில்லை. இதனால் சமுதாயச் சீர்கேடுகள் மேலும் அதிகரிக்க வழி கோலப்படுகின்றது.

இவைதவிர இளம் சந்ததியினரின் உள்ளங்களைப் பாதிக்கக்கூடிய பாலியல் உணர்வு சார்ந்த கதைகள், படங்கள், துணுக்குகள், "கிசுகிசு" செய்திகள் போன்றவை அவ்வப்போது வெகுசனத்தொடர்பு சாதனங்கள் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றன. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகளில் வெளியிடப்படும் ஆபாசப்படங்கள், இரட்டை அர்த்தம் கொண்ட உரையாடல்கள், பாடல்கள் என்பன இன்று பெருமளவில் இளஞர்களைப் பாதிக்கின்றன. "ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி நஞ்சு போல" இவை வெகுசனத் தொடர்பு சாதனங்களின் நற்பணிகளுக்குக் களங்கமாக அமைகின்றன. நன்மைகளிலும் பார்க்கத் தீமைகளே அதிகம் உண்டாகின்றன.

பண்பாட்டுப் பாரம்பரியங்கள் சிதைக்கப்படுகின்றன. இந்நிலை மாறவேண்டும். வெகுசனத் தொடர்பு சாதனங்கள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் நன்மைதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க முன்வர வேண்டும். இன்றைய நிலையில் இது மிக மிக அவசியமாகின்றது. இன்பப் பொழுது போக்கு உணர்வை வளர்ப்பதனைத் தவிர்த்துச் சமூகத்திற்குப் பயன்தரும் அறிவு, கலை, பண்பாடு, பாரம்பரியம் என்பவற்றைப் பேணும் உணர்வுகளை வளர்க்கும் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். அவ்வாறு செயற்படும்போது நாட்டில் தேசிய ஒற்றுமையும். அமைதியும் நிலவும்.

## 30. வயலோரக் கிராமத்தின் எழில்

கங்குவேலி அழகிய கிராமம். வயலும் வயல்சார்ந்த நிலமும் பரந்த கிராமம். பழம்பெருமையைப் பறைசாற்றும் சான்றுகளைக் கொண்டது. அழகிய காலைப் பொழுது கண்சிமிட்டியது. கங்குவேலி விழித்துக் கொண்டது. இயற்கை அழகில் கிறங்கிக் கிடந்தது. கங்குவேலியைச் சூழ்ந்து மகாவலி ஓடுகிறது. அதனால் கங்கை வேலி என்ற பெயர் வந்ததாகப் பெரியவர்கள் கூறுவார்கள். கங்குவேலியில் மகாவலியின் கரையோரத்தில் அகத்தியரின் பல்கலைக் கழகம் அமைந்திருந்தது. இதனை இவ்வூர் பெரியவர்கள் கூறுவார்கள்.

குயில்கள் கூவித் துயில் எழுப்பும். கோழிகள் போட்டி போட்டுக் கூவும். ஒவ்வொரு பறவையும் சத்தமிடத் தொடங்கும்.. பறவைகளின் ஒலி ஒன்றுசேர்ந்து ஒலிக்கும். அது ஒரு இசைக்கோலமாய் மாறியொலிக்கும். அந்த இன்னிசை காற்றில் பரவும். சிவன்கோயிலின் மணியோசை மனதில் பரவச மூட்டும். காற்று மகா வலியின் குளிரை அள்ளிக் குளித்துக் குளிரோடு வீசும்.. கிராமத்துக்கே சொந்தமான மண் வாசனை எட்டிப்பார்க்கும். பழமை வாய்ந்த அந்தக் கிராமம் அயர்ந்திருக்கும்.

இந்தக் கிராமத்தில் ஒருநாள் தங்கி அனுபவித்தேன். தென்னைகள் ஓலைகளை விரித்து ஆடியசைந்தன. மரங்கொத்திகள் மேளந்தட்டத் தொடங்கின. கிளிகளின் கீச்சல்கள். கட்டாக்காலி மாடுகள் உலாவந்தன. காகங்களின் வேடிக்கை. காகங்கள் மாடுகளில் குதிரை ஓட்டின. வயல்வெளியில் வாய்க்கால்கள் நடந்தன. அவற்றில் தண்ணீர் சலசலத்துப் பாய்ந்தது.

கொக்குகள் தண்ணீரில் பதுங்கியிருந்தன. ஒரு கொக்கு கழுத்தை நீட்டிப் பார்த்தது. பதுங்கியது. நாற்பத்தைந்து பாகையில் உடலை வளைத்து வைத்தது. ஒரே பாய்ச்சல். அதன் சொண்டில் மீன் அகப்பட்டது. சந்தோசத்தோடு பறந்தது. அதிசயமான காட்சியாக இருந்தது. பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குகள் பதுங்கி மீன்பிடித்தன. மக்களின் நடமாட்டம் தொடங்கியது. வரம்பில் நடப்பதே அற்புதமானது.

வரம்பில் நடப்பது சுகமானது. ஒரு சமனநிலையில் நடக்க வேண்டும். கண்கள் காலடியையும் பார்க்க வேண்டும். போகும் இடத்தையும் நோக்க வேண்டும். இல்லாவிடில் வரம்பில் நடை தடம்புரண்டு விடும். கமக்காரர்கள் வேகமாக நடந்து வருவார்கள். வயலில் ஒரு குடில் இருக்கும். குடில் என்பது சிறிய வீடு. அது பலநோக்கம் கொண்டது. காவலுக்கும் பயன்படும். இளைப்பாறவும் பயன்படுத்தப் படும்.


மாட்டுத் தொழுவம் கிராமங்களில் இருக்கும். அதனைச் சுத்தப் படுத்தினார்கள். குடும்பத் தலைவன் பால்கறந்து கொடுப்பார். குடும்பத் தலைவி பாலைக் காய்ச்சியதும் குடும்பத்தவர்களுக்குக் கொடுப்பார்.

வயற்காரரின் கையில் மண்வெட்டி இருக்கும். கால்வாயிலிருந்து தண்ணீர் பாய்ந்துவரும். அதனை வயலுக்குள் பாய்ச்சுவர். சலசலத்துத் தண்ணீர் பாயும். வேளாண்மை காற்றில் மகிழ்ந்து ஆடும். பார்ப்பவர்களைக் கவர்ந்து இழுக்கும். பார்ப்போரின் மனம் குளிரும். கிராமம் கிராமம்தான். கொள்ளை எழில் கொட்டிக் கிடக்கும்.

நகரத்தில் சனநெருக்கம் அதிகம். சுத்தமான காற்று இல்லை. இயந்திர கதியில் இயங்கும் மக்கள் கூட்டம். இயற்கையை ரசிப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை.

கங்குவேலியில் வயற்காரருடன் சென்றேன். அவரது பிள்ளைகளும் வந்தனர். வயலுள் களைகள் தலைகாட்டின. சிலவற்றை வயற் சொந்தக்காரர் பிடுங்கினார். பிள்ளைகளும் பிடுங்கினார்கள். சுந்தரி கெட்டிக்காரி. அவள் வரம்பிலேயே நின்றாள். எட்டி களைகளைப் பிடுங்கினாள். வேளாண்மைகளின்






ஓலைகள் கருகி இருந்தன. "இது என்னப்பா?" அவரின் மகன் அதனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"அப்பா பூக்களில் இருந்து பிஞ்சு உருவாகிறது. பிஞ்சுகள் காயாகின்றன. காய்கள் பச்சை நிறம். ஆனால் பழங்கள் மஞ்சள் நிறமாகின்றன. இந்த அதிசயங்கள் எப்படி நடக்கின்றன". பிள்ளைகள் நிறையவே வினாக்கள் கேட்டார்கள். அப்பாவுக்கு விளக்கம் கூற அவகாசமில்லை. "இவை யாவும் கடவுளின் அற்புதங்கள். நீங்கள் இவை பற்றிப் படிப்பீர்கள். பெரியவர்கள் ஆனதும் புரிந்து கொள்வீர்கள்". கூறிக் கொண்டே அவர் நடந்தார். வீடு வந்து சேர்ந்தார்கள்.

கடமைகள் முடிந்தன. காலை ஒன்பதரை மணியாகியது. இன்னும் சாப்பிடவில்லை. "உங்களுக்குப் பசியில்லையா"? "அப்பாவோடு சேர்ந்து பிள்ளைகளும் கெட்டுவிட்டார்கள்". அம்மா புறுபுறுத்தார். அப்பா சிரித்துக் கொண்டார். இந்த அப்பாவுக்குக் கோபம் வந்ததே இல்லை. அம்மா என்னதான் சொன்னாலும் பேசாதிருப்பார். நான் அதனை ரசித்தேன்.

"ஓடி வாங்கோ. சாப்பிடுவோம். அம்மாவுக்குப் பசி. கோபத்தோடு இருக்கிறார்". அப்பாவின் குரல் ஓங்கியது. "ஓமோம். எனக்குத்தான் பசிக்குதாக்கும். பிள்ளைகள் நேரத்துக்குச் சாப்பிட வேண்டும்". அம்மாவின் பொய்க்கோபக் குரல். "அம்மா இன்று லீவுநாள்தானே? பிந்திச் சாப்பிட்டால் என்ன"? ரதீபன் குறுக்கே புகுந்தான். அப்பாவின் முகத்தில் சிரிப்பு. அம்மாவும் சிரித்துக் கொண்டார். சாப்பிட அமர்ந்தார்கள். உண்டார்கள். அன்றையப் பொழுது வீணாகாமல் வயலோரக் கிராமத்தின் எழிலில் மயங்கி இருந்தேன்.

## 31. தொலைக்காட்சியும் விளைவுகளும்

இன்று உலக மயமாக்கலின் காரணமாக பல தொழில்நுட்பச் சாதனங்கள் நடைமுறையில் உள்ளன. அவற்றில் தொலைக்காட்சி, கணனி, தொலைபேசி, பத்திரிகை என பல வகைகள் உள்ளன. அவற்றில் தொலைக்காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களுக்கிடையே ஏற்படுகின்ற போட்டி காரணமாக புதுப்புது நிகழ்ச்சிகளை இணைத்துக் கொள்கின்றனர்.

அதிகமான பெற்றோர் தமது பிள்ளைகள் தொலைக்காட்சி பார்ப்பதை விரும்புவதில்லை. ஆனால் மாணவர்களின் அறிவைத்தூண்டும் வகையிலும் தமது கல்வி வளர்ச்சியில் பாரிய செல்வாக்கைச் செலுத்துகிறது. செய்திகள் மூலம் பொது அறிவையும் நாட்டு நடப்புக்களையும் உலக நிலைமைகளையும் அறிவதுடன் பல போட்டி நிகழ்ச்சிகளாலும், சிறுவர் நிகழ்ச்சிகளாலும் விளையாட்டு மூலமும் மாணவர்கள் தமது அறிவை வளர்த்துக் கொள்கின்றனர்.

கலை நிகழ்ச்சியில் தையல், ஓவியம், சமையல், அழகுக்கலை, சிறுகைத்தொழில் வழிகாட்டிகள் எனப்பல வர்த்தகக் கலைகளை ஒளிபரப்புகின்றது. இதனால் பல வீட்டுப் பணிப்பெண்கள் நன்மையடைவதுடன் சிறு கைத்தொழிலுக்கும் வழிவகுக்கின்றது.

பல்வேறு நேர அடிப்படையில் செய்திகளை தொகுத்து ஒளிபரப்புவதால் உலகம் அனைவரதும் வீடுகளுக்குள்ளும் வந்துவிட்ட நிலை உருவாகிவிட்டது. காரணம் இன்று உலகில் தொலைக்காட்சி இல்லாத வீடுகளே இல்லை என்றே கூறலாம். நாட்டின் அரசியல் நிலைகளை மாற்றும் முக்கியமான விடயங்களையும் சர்வதேசம் பற்றிய தகவல்களையும் செய்திகள் மூலமே அறியக் கூடியதாகவுள்ளது.

விநோத உலகத்தின் விந்தைகளை சிலர் இணையம் மூலமும் பலர் தொலைக்காட்சி மூலமுமே அறிகின்றனர். புதிய, புதிய கண்டுபிடிப்புக்கள், பல்தரப்பட்ட கடல்வாழ் அங்கிகள், நுண்ணங்கிகள் அதிசயங்கள் போன்றவற்றை நிகழ்வாகவும் படமாகவும் அனைவரும் பார்த்து விளங்கும் வகையில் ஒளிபரப்பப்படுகிறது.

தொலைக்காட்சி இல்லாத வீடுகளே இல்லை. உலகில் தங்கி வாழ்வோரின் முக்கிய பொழுது போக்குச் சாதனமாக தொலைக்காட்சி விளங்குகின்றது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது மட்டுமல்லாது இறுவட்டுக்கள் மூலமும் பல நாடகம், திரைப்படம் போன்றவற்றையும் பார்த்து, இரசித்து தமது பொழுதைக் கழிக்கின்றனர்.

பலதரப்பட்ட இனிமையான விடயங்களைக் கொண்ட தொலைக்காட்சி சில கசப்பான விடயங்களையும் கொண்டுள்ளது. முக்கியமாக மாணவர்களின் கல்வியின் அழிவுக்கு மிகுந்த காரணகர்த்தாவாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் திரைப்படம், தொடர்நாடகம், திரையிசைப்பாடல்கள் போன்றவற்றில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் தாம் கற்கும் நேரத்தை வீணாக்கி தொலைக்காட்சியில் மோகம் கொள்கின்றனர். சிலர் இறுவட்டுக்கள் மூலம் ஆபாச திரைப்படங்களையும் மொழிபெயர்ப்புப் படங்களையும், பல்தரப்பட்ட தேவையற்ற நிகழ்ச்சிகளையும் பார்த்து அவற்றிற்கு அடிமையாகின்றனர்.

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்ற வாசகத்திற்கு எதிராக எதிர்காலத்தை வீணடிக்கும் இளைஞர், யுவதிகள் பலர் உள்ளனர். நன்னடத்தை அற்றவர்களாகவும், மது போதைக்கு அடிமையாகுவதுடன் காதல், இளவயதுத் திருமணம், பாலியல் வல்லுறவு, பெண்கள் மீதான வன்முறை போன்றவற்றில் தம்மை ஈடுபடுத்தி பல துயரங்களை எதிர்கொள்கின்றனர்.

பெண்களின் நடத்தைகள் மூலம் பாரம்பரிய கலாச்சாரம் பாதிப்படைந்து வருகிறது. பணத்துக்காக திரைப்படங்களில் நடிகர்கள் பல விதமாக தம்மை பிரதிபலிக்கின்றனர். ஆனால் சமூகமோ அவற்றைப் பின்பற்றி இழிவடைகிறது. குறிப்பாக தமிழர் பண்பாடு மிகவும் சீரழிந்த நிலையில் உள்ளது. நடை, உடை, பாவனை போன்றவற்றில் நவீன நவநாகரீகத்தில் மூழ்கிவருகிறது. சமுதாயத்தின் பாரம்பரிய பண்பாட்டைச் சீரழித்து விடுகின்றன. அத்துடன் தமிழ் மொழியின் பேச்சு வழக்கிலும் செயற்கைத் தன்மையைப் புகுத்தி விடுகிறது.

தொலைக்காட்சி பார்ப்பதன் மூலம் குறிப்பிட்ட கால, தூர இடைவெளிகளை பின்பற்றிப் பார்க்க வேண்டும். அவ்வாறு அவற்றை மீறும் போது மனம் சம்மந்தமான நோய்களும் கண்நோய்களும் ஏற்படுவதுடன் நிகழ்ச்சிகளில் சில சந்தர்ப்பங்களில் ஏற்படும் மனக்கவலைகளால் உளம் சார்ந்த பாதிப்புக்களும் உருவாகின்றன. அவை நீடிக்கும் போது பெரு நோயாகவும் உருவாகி விடுகின்றன.

அனேகமான வீடுகளில் கணவனுக்கும், மனைவிக்கும் ஏற்படும் முரண்பாட்டுக்கு தொலைக்காட்சியே காரணமாகும். தொலைக்காட்சியை அதிகமாக பார்க்கும் பெண்கள் பிள்ளைகளை கவனிக்காது வீட்டு வேலைகளை சரியாக செய்யாமை காரணமாக பலவித முரண்பாடுகளுக்கு உள்ளாகின்றனர். தொலைக்காட்சி, வர்த்தக விளம்பரம் மூலம் பல பெண்கள் ஆடை அணிகலன்கள், அழகுப் பொருட்களுக்கு வீண் செலவு செய்கின்றனர். இவ்வாறான காரணங்களாலும் முரண்பாடுகள் தோன்றுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக விளம்பரங்களில் வெளியாகும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மூலம் அதிகமானோர் அரேபிய நாடுகளுக்குச் செல்கின்றனர். இதனால் நாட்டின் வறுமைநிலை ஒழிந்தாலும் பல பெண்கள் வீட்டுப் பணிக்காக செல்வதால் குழந்தைகள் உளரீதியாக பாதிக்கப்படுவதுடன் சமூகத்தால் ஒதுக்கப்படுகின்றனர். வெளிநாடு செல்பவர்கள் அங்கே பல வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு மரணிக்கும் நிலைக்கும் உள்ளாகின்றனர்.

தொலைக்காட்சி பார்ப்பதன் மூலம் அதன் விளைவாக அனுகூலமும், பிரதிகூலமும் விளைகின்றன. பாலில் காணப்படும் நீரைத் தவிர்த்து பாலைமட்டும் அருந்தும் அன்னப் பறவைபோல நன்மையான விடயங்களை ஏற்றுக் கொள்வது மேலானது. வள்ளுவர் "இனிய உளவாக இன்னாது கூறல், கனியிருக்கக் காய் கவர்ந்தற்று" என்றார். தொலைக்காட்சி எனும் மரத்தின் காய்களைத் தவிர்த்து கனிகளை ஏற்பது இனிமையானது. நலமுடன் நன்மையும் பயக்கும்.

## 32. எனது தாய் மொழி தமிழ்

ஒருவர் தனது எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளியிடவும், பிறரது கருத்துக்களை விளங்கிக் கொள்ளவும் பயன்படுத்தப்படும் ஊடகமே மொழியாகும். மொழியப் படுவது மொழி எனக்கூறுவர். கரும்புக்கும், அறுகுக்கும், வேளாண்மைக்கும் மூங்கிலுக்கும் மொழியுண்டு. மொழியில்லையேல் அவற்றால் நிமிர்ந்து நின்று வளரமுடியாது. அதேபோல்தான் மனித இனத்துக்கும் ஒரு இனத்தின் நாகரீகத்தையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ள மொழி உதவுகிறது. மொழியைப் பண்பாட்டுக் காவி என்றும் சொல்வார்கள். ஒருவருடைய அறிவு அவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியைக் கையாளும் ஆற்றலில் தங்கியுள்ளது. சிந்தனைக்கு வழி வகுப்பது மொழியாகும். மொழியில்லாது சிந்தனை இல்லை. உண்மைத்தேவைகளை நிறைவு செய்ய மொழி உதவுகிறது. மொழியில் ஆற்றல் உள்ளவர்கள் மேதைகளாகக் கணிக்கப்படுகிறார்கள்.

மொழியின் வளர்ச்சியில் சூழல் பெரும் ஆதிக்கம் செலுத்துகிறது. இயற்கைச் சூழல் மொழியினைச் செம்மைப்படுத்துகிறது. மொழிவிருத்தியில் அதன் திறன்கள் முக்கிய பங்கினைக் கொண்டுள்ளன. இவற்றின் செயற்பாட்டில் ஐம்புலன்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனை ஆசிரியர்களும். பெற்றாரும் நன்கு அறிந்திருக்கவேண்டும். பிள்ளைகளது ஐம்புலன்களும் செம்மையாகச் செயற்படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். குறைபாடுடைய பிள்ளைகளை இனங்கண்டு அவர்களை வழிப்படுத்த வேண்டும்.

இயற்கை நமக்குக் கோடுகளைக் கீறிக்காட்டவில்லை. ஆனால் எம்மைச்சூழ இயற்கைப் பொருட்களைத் தந்துள்ளது. தாவரங்களும் விலங்குகளும் நமக்குக் கற்றுத் தருகின்றன. இலைகள், பூக்கள், காய். கனி, விதைகள் என இயற்கையளித்த கொடைகளால் நாம் அறிவைப் பெருக்கிக் கொள்கிறோம். அறிவைப் பெருக்குவதற்கு மொழி உதவியாகிறது. ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய்மொழி இனிமையாகவே இருக்கும்.

எனது மொழி தமிழ். "தமிழுக்கு அமுதென்று பேர்". என்றார் பாரதிதாசன். இன்று சுமார் ஆறாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் ஆறு மொழிகள் செம்மொழிகளாக உள்ளன. அவற்றுள் ஒன்று தமிழ்மொழி என்பது நமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதாகும். அந்தப் பெருமையைத் தேடித்தந்த பெருமை நமது சங்கச் சான்றோர்களையே சாரும். தமிழ் மொழி செம்மொழியாக தமிழ் நாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. செம்மொழி மகாநாடு 2010 ஜூன் மாதம் 23 தொடக்கம் 27ந் திகதி வரை நடாத்தப் பட்டது.

தமிழ்மொழியின் அமைப்பு முறைதான் அதற்குச் சிறப்புத்தேடித் தந்தது. உலகத்தில் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்பதைத் தமிழ் மொழியில் மட்டுந்தான் காணமுடிகிறது எனப் பேரறிஞர்கள் கூறுவர். அந்தப் பெருமைக்குரிய மொழியின் சிறப்புக்குக் காரணம் சிறந்த இலக்கியங்கள் உள்ளமைதான். சங்க இலக்கியங்களும், காப்பியங்களும், அகத்தியம், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களும் தமிழ் மொழிக்குச் சிறப்புச் சேர்ப்பன.

மொழியின் அமைப்பைக் கூறுவதும் இலக்கணம்தான். மொழியின் அமைப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தால்தான் இலக்கியம் படைக்கலாம். இலக்கியம் கண்டுதான் இலக்கணம் செய்தார்கள். இலக்கியத்தின் சுவையைக் கூறுவது இலக்கணம்.

பேச்சு மொழிதான் முதலில் தோன்றியது. பேச்சு வழக்கு ஒலிவடிவத்தை மட்டும் கருவியாகக் கொண்டது. ஒருமுறை கேட்டதை மறந்துவிடும் தன்மை மனிதருக்கு உண்டு. மனிதன் தனது அனுபவங்களையும், எண்ணங்களையும் பதிவு செய்து பயன்படுத்த முனைந்தபோது எழுத்துத் தோன்றியது என்பர். எழுத்து முதலில் வெறும் உருவங்களாகவும், கிறுக்கல்களாகவுமே இருந்தன. காலகதியில் மனிதநாகரிகம் வளர்ச்சியுற்று இன்றைய நிலைக்கு மாற்றம் பெற்றது. இந்த மாற்றங்களை மொழியின் வரலாறு கூறும்.

எழுதப்படுவது எழுத்து. அது ஒரு வரிவடிவமே ஆகும். அந்த வரிவடிவம் ஒலி வடிவம் பெறும்போது ஒலியனாகிறது. எழுத்து என்னும் ஒலியன் தனித்தும், இரண்டோ அல்லது பலவோ சேர்ந்தும் பொருள் பொதிந்த சொல்லாக வடிவம் பெறுகிறது. சொல்வடிவங்கள் ஒன்றோ பலவோ சேர்ந்து பொருள்தரும் வசனமாக உருவாகிறது. வசனங்கள் பந்திகளாக அமைந்து பொருளை விரிக்கிறது.

சொற்கள் சேரும்போது மாற்றம் பெற்றும், பெறாதும் சேரும். இவற்றையெல்லாம் இலக்கணம் விளக்கும். இலக்கணம் ஒரு விஞ்ஞானம். கற்பதற்குச் சுவையாக இருக்கும். இலக்கணம் கற்பவர்களுக்கு இவ்வளவும் இதிலுண்டா என்று வியக்க வைக்கும். இலக்கணம் என்பதற்கு அழகு என்றும் கூறுவார்கள். மொழிற்கு அழகூட்டுவது இலக்கணந்தான்.

இலக்கணத்தை மாணவர்களுக்கு உதாரணங்கள் ஊடாகப் புரியவைக்கவேண்டும். அப்போது அவர்கள் விரும்பிக் கற்பார்கள். மொழி விருத்தியடைவதற்குச் சில திறன்கள் அவசியம். அவற்றை “மொழித்திறன்கள்” என்பார்கள். விலங்குகள் உயிர்வாழ இறைவன் சில கொடைகளையும் வழங்கியுள்ளான்.

உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம். உணவை உண்பதற்கு வாயைப் படைத்தவன், அதற்குள் பல உறுப்புக்களையும் படைத்தான். நெஞ்சறைக்குள் உட்புகுந்து வரும் காற்று மிடரைத் தொட்டுச் செல்லும்போது ஒலியை எழுப்புகிறது. அந்த ஒலியை நாக்கும், உதடுகளும் மாற்றியமைத்து பல ஒலிவடிவங்களை உருவாக்கி விடுகின்றன. அடித்தொண்டையில் இருந்து பிறந்து வரும் ஒலியை நாக்கு ஏற்று பல்வேறு விதமாக ஒலிக்க வைக்கிறது. அடிநாக்கில் ஒருவிதமாகவும். அண்ணத்தில் வேறுவிதமாகவும். நுனிநாக்கில் ஒருவிதமாகவும் ஒலிக்கச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிகளைக் கேட்பதற்குக் காதுகளை இறைவன் படைத்துள்ளான். காற்றை உள்ளிழுத்துச் சுவாசிக்க மூக்கினைப் படைத்துள்ளான். அத்துடன் முகர்ந்து கொள்ளவும் சக்தியைப் படைத்துள்ளான். கண்களைப் படைத்துப் பார்வையைக் கொடுத்துள்ளான். உடலைக்கொடுத்து ஒரு வடிவத்தைக் கொடுத்த இறைவன் அதனால் உணரவும் வைத்துள்ளான். இந்த உடம்பினுள்ளே வாழ்க்கைக்குத் தேவையான உறுப்புக்களையும் படைத்துள்ளான். அவற்றைப் பயன்படுத்துவது அவரவர் திறனாகும்.

ஒரு பிள்ளை ஐம்புலன்களால் கற்கிறது. நமக்கு இறைவன் கொடுத்த ஐம்பொறிகள் ஊடாகப் புலனறிவை அனுபவமாக்குகிறோம். அனுபவம் ஆக்குதலே கற்றலாகும். நமது தாய்மொழியாம் தமிழைப் பிழையறக் கற்று வாழ்க்கையில் முன்னேறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



: 978-955-98211-2-0
: Rs. 180/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org